www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஜன.26–பெப்.01,1997

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 189

# போர்க்களமும் பொறிக் கிடங்குகளும்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## வைத்த குறி தப்பியதா?





ரோசாவை காணவில்லை

## முற்றுகை உடைத்த இந்தியப்படை

www.padippakam.com

# முரசம்

## வினை விதைப்பவர்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வினை விதைத்தவன்
வினை அறுப்பான்!
தினை விதைத்தவன்
தினை அறுப்பான்!

நம் நாட்டின்
அரசியல்வாதிகளில் எத்தனைபேர்
தினை விதைத்தார்கள் என்பதை
விரல்விட்டு எண்ணிவிடலாம்!
மீதிப்பேர் எல்லோருமே
வினைதான் விதைத்தார்கள்!
அவர்கள் விதைத்தது
இனவாத வினை!
அதன் விளைச்சலை
அறுவடை செய்துகொண்டிருப்பது
அவர்களல்ல என்பதுதான் வித்தியாசம்!
பாவம் ஓரிடம், பழி ஓரிடம்
என்பதுபோல
அரசியல்வாதிகள் விதைத்த
வினையின் பயன்
கோர யுத்தமாக விளைந்து
நாட்டு மக்களைப்
பிடித்தாட்டிக்கொண்டிருக்கிறது!
வினை விதைத்தவன்
வினை அறுப்பான் என்பது
அரசியல்வாதிகளுக்குப் பொருந்தாது!
தீய விளைச்சலை சுமப்பது மக்கள்தான்!
அதனால்தானோ என்னவோ
பழி சுமக்க வேண்டுமே என்னும்
பயமே இல்லாமல்
நம் அரசியல்வாதிகள்
தொடர்ந்து வினை விதைக்கிறார்கள்!
ஆயினும் நம் அரசியல்வாதிகள்
மகா திறமைசாலிகள்.
ஒரே நேரத்தில்
இரண்டு காரியங்களைச் செய்யும்
வல்லமை படைத்தவர்கள்!

இனவாத விதையை
விதைக்கிறார்கள் என்றால்,
நாட்டின் ஒற்றுமையைப்
புதைக்கிறார்கள் என்று அர்த்தம்.
விதைத்தல், புதைத்தல்
ஆகிய இரண்டு காரியங்களையும்
சிறப்பாகச் செய்து முடிக்க
நம் அரசியல்வாதிகளைத் தவிர
வேறு யாரால்தான் முடியும்?!
சமீபகாலமாக தெற்கில்
இனவாத விதை
வெகு தீவிரமாக
விதைக்கப்பட்டு வருகிறது!
எதிரணியின் பிரபலங்கள் பலர்
திரைமறைவில்
அந்த விதைப்புக்களுக்கு
ஊக்கம் கொடுத்து வருகிறார்கள்.
"சிறுபான்மையினரிடமிருந்து
சிங்கள மக்களை
மீட்க வேண்டும்!" என்று
பௌத்த மதகுரு ஒருவர்
பயங்கரமான உண்மையைக்
கண்டு பிடித்திருக்கிறார்.
"தொண்டமான்-அஷ்ரப்-
டக்ளஸ் தேவானந்தா மூவருமே
ஆட்சி நடத்துகிறார்கள்,"
என்று இன்னொரு
பௌத்த குரு கவலைப்படுகிறார்!
தவறான செய்தியை
வெளியிட்டதற்காக
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்
ரி.என்.எல். பணிப்பாளரை
உள்ளே தள்ளினார்கள்!
ஆனால் நாட்டு மக்களுக்கே
விபரீதமான செய்திகளைச்
சொல்லிக் கொண்டிருக்கும்
இனவாத சக்திகள் மீது
ஏன் நடவடிக்கை இல்லை?
சிறுபான்மையினரால்
நாட்டுக்கு ஆபத்தாம்!
பௌத்த மதகுரு ஒருவர்
அப்படித்தான் அறிவித்திருக்கிறார்.
பயங்கரவாதம்
என்றால் என்ன?
இன ஒற்றுமை, நாட்டின் அமைதி
என்பவற்றுக்கே குழிதோண்டும்
இனவாதக் கருத்துக்கள்-
வெடி குண்டுகளைவிட ஆபத்தானவை!
அதனை விதைப்பதும்
பயங்கரவாதம்தான்!
துப்பாக்கிகளால்
சுட்டுக் கொண்டிருப்பவர்களைவிட
தொண்டைக் குழாய்கள் மூலமாக
இனவாத விஷம் விதைப்போர்
மிக மிகப் பயங்கரமானவர்கள்!
திரைமறைவில் நின்று
அவர்களைத் தூண்டிவிடுவோர்
அதைவிடப் பயங்கரமானவர்கள்!
இனவாதப் பிரசாரங்களை
முளையிலேயே கிள்ளியெறிய
அரசாங்கம் துணியவேண்டும்!
அரசியல்வாதிகளும்-தமது
குறுகிய ஆதாயங்களுக்காக
நச்சு விதை விநியோகிப்பதை
நிறுத்திக்கொள்ள வேண்டும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## யார் குற்றவாளி?

எம்மை நாமே கேட்டுப் பார்ப்போம்- யார் குற்றவாளி? நீயா? நானா? சிந்தித்துப் பார்ப்போம்!

தன்னுடைய இருகண்களால் மற்றவர்களின் குற்றங்களை கண்டு கொண்டிருக்கும் மனிதர் இப்புவியில் கோடி.. தன்னை எத்தனை கோடிக் கண்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றன என்பதை மறந்து விடுகிறார்கள். அதைவிட மேலான ஒருவரின் கண்கள் எம்மை நோக்கிய வண்ணம் இருப்பதை மறந்து விடுகிறோம். தனது குற்றங்களை மறைக்க மற்றவனை குற்றப்படுத்துகின்றார்கள். ரோமர் 2:1 கூறுகிறது-

"மற்றவர்களைக் குற்றவாளியாக தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை: நீ குற்றமாகத் தீர்க்கிறவைகளெவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்!"

நாமும் குற்றவாளிகளாகத் தீர்க்கப்படும்போது கோபமும், எரிச்சலுமடையாது பொறுமையாகக் காத்திருப்போம்.. மற்றவனைக் குற்றவாளியாகத் தீர்த்து அவைகளையே செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கமாட்டான்.

எரித்தாலும் சூரியன் எரியாது, களங்கம் கூறினாலும் நிலவு களங்கப்படாது. எனவே குற்றவாளியாகத் தீர்க்கப்படும்போது, பொறுமையாக இறைவனின் தீர்ப்புக்காய் காத்திருப்போம்!

ஜே.புளோரன்ஸ், அம்பக்கோட்டை, கெங்கல்ல.

## ஆன்மீகம்



### இறைநேசர்-அவ்லியாக்களின் மகிமை

இஸ்லாத்தின் இனிய தூதர் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் இறை நெறியைப் பரப்பிய, நபித்தோழர்கள் தாபி ஈன்கள், இமாம்களின் வரிசையில் தீனுல் இஸ்லாமியப்பயிர் வளர்த்த சான்றோர்களே, "அவ்லியாக்கள்" எனப்படும் இறைநேசச் செல்வர்கள். இவ்வுலகம் முடியும் தான் வரையில் இத்தகைய மகான்கள் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். ஒருவர் மறைந்தால் அவருக்குப் பதில் வேறொரு விசுவாசி அப்பதவியில் அமர்த்தப்படுவார். இறை தியானம், இறைநேசம் நிரம்பப்பெற்று ஒளிவீசும் முகத்துடன் காட்சி தரும் அவ்வலியாக்களை சாமான்யர்களால் இனம் காண இயலாது. கூழாங்கற்களுக்குள் மறைந்துள்ள மாணிக்கக் கற்கள் போன்று அவர்கள் விளங்குவார்கள். அத்தகைய இறைநேசமிக்க வலிமார்களைக் குறை கூறுவதும், அவர்களை மறுப்பதும் இறைவனின் கோபத்தை வருத்தும் செயலாகும். அவ்லியாக்களைப் புறக்கணித்து வாழ்வோர் இறுதி முடிவு-வேளையில் தீய மரணத்தைத் தழுவ நேரிடும் என்பது ஆன்றோர் வாக்கு.

இறை நேசர்களான நாதாக்கள் இவ்வுலகப்பற்றை நீக்கி மனோ ஆசைகளை அடக்கிய நிலையில் சொல்லிலும், செயலிலும் இறைவணக்கத்திலும் இறை நேயத்திலும் நிலைத்தவர்கள். மறைந்து சென்ற மகான்களான அவ்லியாக்களை நினைவு கூர்வதும், நம்மிடையே உள்ள அவ்லியாக்களை இனம் கண்டு அவர்களை கண்ணியப்படுத்தி- அன்னாரின் நல்லாசியைப் பெறுவதும் நம்மீது கடமையாகும். நாம் ஒருவரைப்பார்க்கும் போது எமது உள்ளத்தில் இறையச்சமும், இறை ஞாபகமும் ஏற்படுமாயின் அவரே" அவ்லியா" எனும் இறைநேசர் ஆவார் என்பது நபிமொழிக் கருத்தாகும்.

ஆதாரம்: "தத்கிருல்ஸாலிஹீன்"

எம்.எச்.எம்.ஹாரித்-திஹாரிய

## கவிதைப் போட்டி இல.186

பரிசுக்குரிய கவிதை

### இடம்பெயர்வு

பட்டினி, எங்களுடன் பல நாட்கள் போராடும்;
கட்டி வைத்த குடிசையினைக் கடும் மழை சிதைத்துவிடும்;
வெற்றுடம்பில் வெயில்படும், வெந்நீராய் வியர்வை கொட்டும்;
கொட்டும் பனிநேரம்; கொடுந்தேளாய்க் குளிர் தாக்கும்;
இத்தனையும் தாங்கும் நாங்கள் இடம்பெயர்ந்த ஏழை மக்கள்!

க.கதிரவேலு-வவுனியா.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**யாரும் இல்லை**

வித்திட்ட தந்தை இல்லை!
வளர்த்தெடுக்க அன்னை இல்லை!
தத்தெடுக்க யாரும் இல்லை!
தவிக்கின்றோம் இந்த மண்ணில்..!

ரா.காத்யாயினி- வாழைச்சேனை.

**சுமைதாங்கி**

சுமையாகும் வயதில் நீ
சுமைதாங்கி ஆவதா?
சுதந்திரக் காற்றை நீ
சுவாசியாமல் போவதா?

பா.எல்றோய்-இறம்பைக்குளம், வவுனியா.

**விடியலைத் தேடி..!**

தையது பிறந்திடின் வழியது பிறந்திடுமா?
மெய்யினை வாட்டிடும் பசியது போயிடுமா?
மாற்றிட துணியில்லை உயர்ந்திட வழியில்லை..
விழியது பார்த்திட இன்பங்கள் எமக்கில்லை..
நம்பியே நாங்கள் இளமைகள் இழந்தோம்!
நாதிகளற்று கேலியாய் போனோம்!
சோதிகள் மறைந்து வெம்மிருள் சூழ்ந்திட...
பிஞ்சுகள் வளர்வது அரிதென ஆகிட..
வாதுகள் செய்பவர் வம்புகள் மலிந்திட..
அபலைகளாயினர் அகிலத்தில் எம்மவர்!

தெ.ரஞ்ஜனா-சின்னப்புதுக்குளம், வவுனியா.



**வனவாசம்!**

ஈரேழு ஆண்டுகளே இராமனுக்கு வனவாசம்!
போரோயா(க்) கொடுமையினால்
புலம் பெயர்ந்த எங்களுக்கு
எத்தனை காலம்
இன்னுமிந்த வனவாசம்?

சி.மு.சுந்தரேசன்-அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

**போரின் கொடுமை**

முகத்தில் மலர்ச்சி தெரிந்தாலும்
அகமோ மலர்வைக் காணவில்லை;
யுகமாய்த் தொடரும் போராலே
உடையோ உணவோ நல்லதில்லை

மல்லிகா பத்மநாதன்-பசறையூர்.

## கவிதைப் போட்டி இல-189



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 01.02.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.189 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**ஆடை**

விண்ணுக்கு முகிலாடை;
கடலுக்கு அலையாடை;
எங்களுக்கு எப்பவரும்
துணியாடை!?

பெ.ரஞ்சனி கலா-பொகவந்தலாவை.

**மிச்சம்**

யுத்தக் கெடுபிடியில்
சிக்கியதோ இம் மலர்கள்?
பரதேசிக் கோலம் தான்
பாரினில் மிஞ்சியதோ?

எம்.சுதர்ஷினி-வெளிமடை.

**என்று வரும்?**

சோகச்சுமை சுமந்து
சோர்ந்து விட்ட எங்களுக்கு
சாமரம் விசுதற்கு,
சாந்தி என்று வரும்?

மனசு-நீர்கொழும்பு.

## வாசக(ர்) சாலை

வழக்கமான 'வசனநடை'யை விட்டு; 'கவிதை நடை'யில் 'இலக்கிய நயத்தில்' தூள் பரத்தும் அபிமானத்திற்குரிய 'ப்ரிய ரசிகனுக்கு' எங்கள் இனிய கைகுலுக்கல்கள்! 'அனிதா இளம் மனைவி'யும் அசத்தல்தான்!

உதயமாகியிருக்கும் புதிய ஆண்டில் முரசில் 'புதிய அம்சங்கள்' உதயமாகுமா?!..

'பூநோனா' பஹ்மிதா வாஹிட், பதுளை.

தகவல் பெட்டியில் முரசு தரும் செய்திகள் எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. சண்டிராணியான பூலானின் புதிய தோற்றத்தைக் காண ஆவலோடு உள்ளோம்.

கலவானை-சரவணேஸ் டெமிசி, பத்மா டெமிசி.

'சுடச்சுட செய்திகளை' சுவைப்படத் தருவதில் 'முரசு' என்றும் முன்னணியில். 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' அற்புதன் தரும் தொடர் அற்புதமாகவே உள்ளது 'ரசிகனின் இலக்கிய நயம்' இதயத்தை நிறைக்கின்றது.

நூருல் ஷிபா ரஷீத், உடுதெனிய.

அன்பின் முரசே!

உன் இலக்கிய நயமோ அபாரம். இராமாயணமோ பிரமாதம். உண்மையில் நீ சூப்பர் இந்த வாரம். நிலைக்க வேண்டும் தொடர்வாரம்.

நி.அஜித்காந்த், கருத்தான்வில், முந்தல்

அன்பின் முரசே!

நீ வாராவாரம் வழங்கி வரும் அம்சங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. அதிலும் தாய் நாவலை அடுத்து வரும் "தூக்குமேடைக் குறிப்பு" மிகவும் விறுவிறுப்பாக உள்ளது. உனது பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

ம.மயூரன், நீர்கொழும்பு.

கடந்த டிசம்பர் 29-12-96ஆம் திகதியன்று வெளியான தினமுரசு வாரமலரில் பாப்பா முரசு பக்கம் வெளியான அரிஸ்டோட்டிலின் வரலாறு பற்றி பிழையாக அச்சடித்துள்ளீர்கள். பிழை என்னவென்றால்- அவர் பிறந்த திகதி கி.மு.322ம் ஆண்டு. இறந்தது 384ல் (62 வயதில்). கி.மு. 384ல் பிறந்தார். கி.மு 322ம் ஆண்டில் தனது 62 வயதில் காலமானார் என்று அச்சிடப்பட்டிருந்தது. அப்படியானால் அரிஸ்டோட்டில் பிறக்கும் முன்னரே இறந்துவிட்டா மீண்டும் பிறந்தார்.

கே.பாலகுமார், சிறி விக்ரம மாவத்தை, வத்தளை.

எக்ஸ்ரே ரிப்போட்டில் சமகால சமர்க்களம் பற்றிய கண்ணோட்டத்தை அதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள் உறுதி செய்துள்ளன. விருப்பு வெறுப்பற்ற அரசியல் கண்ணோட்டங்களை 'முரசு' தரும் விதம் பாராட்டுக்குரியது.

எம். ஆர்-அரசரெத்தினம், கொழும்பு-13.

நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள். நாரதர் கணிப்புக்களும் உண்மையாய் முடிகின்றன. புதிய ஆண்டில் பலப்பரீட்சைகளும், ஜனாதிபதியின் இந்தியப் பயணம் தொடர்பாகவும் நாரதர் சொன்னவை பலித்திருக்கின்றன.

கே.திருக்குமரன், களுவாஞ்சிக்குடி.

### கசப்பான உண்மைகள்

இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் தலையீட்டுக்கான பின்னணிகளை அரசியல் தொடர் தெளிவாக சுட்டிக் காட்டி நிற்கிறது. உண்மைகள் கசப்பானவையாக இருந்தாலும், காலத்தால் அழியாமல் பதிவு செய்யப்பட வேண்டியவையே. அந்த வகையில் சில அதிர்ச்சிகரமான உண்மைகளை- பூசி மெழுகாமல் வெளியிடுவது ஆரோக்கியமானதுதான். தொடரட்டும்.

சி.விவேகானந்தன், திருக்கோணமலை

இந்தியாவுடன் நமது நட்புத் தெறித்தது துரதிஷ்டமானதே. ஜே.ஆரின் சாணக்கியத்தை முறியடிக்கக்கூடிய வகையில் நம்மவர் சாணக்கியம் மேலோங்க முடியாமல் போனதை அற்புதன் சுட்டிக்காட்டத் தவறி விட்டார். அவ்வாறு மேலோங்கி இருந்தால் சாதகமாக அமைந்திருக்கும் அல்லவா?

ஆ.பாலசுப்பிரமணியம், ஜேர்மனி.

'பூலான்தேவி', 'தூக்கு மேடைக் குறிப்பு' இரண்டும் நம் கண்முன்பாக நடந்த சம்பவங்கள் போல தோன்றுவதுதான் ஆச்சரியமாகவுள்ளது. சிறை அதிகாரிகள் தொடர்பான 'பூசிக்'கின் கிண்டலில் அதிகார வர்க்கத்தின் குணாம்சமும் அடக்கம்.

எம்.ஜுனைதீன், மட்டக்களப்பு.

### ஆண்டுக் கணிப்பு



கிறிஸ்துவுக்கு முன் பிறந்து இறந்தவர்களுடைய ஆண்டுக்கணக்கைக் கணிப்பதில் பல வாசகர்கள், 'பாப்பா முரசு தவறு விடுகிறது' என்று குறை கூறி எழுதியிருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குப்பின் ஆண்டுகளைக் கணக்கிடும் போது ஒன்று, இரண்டு, மூன்று என்று வருவது போல் கிறிஸ்துவுக்கு முன்னுள்ள காலத்தை மூன்று, இரண்டு, ஒன்று என்று தான் கணக்கிட வேண்டும்.

எடுத்துக்காட்டாக-கிறிஸ்துவுக்கு முன் 100ம் ஆண்டு பிறந்தவர் தனது 50வது வயதில் காலமானார் என்றால்,'கிறிஸ்துவுக்கு முன் 50ம் ஆண்டில் காலமானார்' என்று மாறுபாடாகத்தான் கணக்கிட வேண்டும். 'பாப்பா முரசின்' ஆண்டுக் கணிப்பு சரியானதே.

ஆ.ர்.

இனிய முரசே!

இலக்கிய நயம், கொள்ளைராணி பூலான் தேவியின் சரிதை, இராமாயணம் ஆகிய அம்சங்களும், பலதரப்பட்ட நமது நாட்டின் அரசியல் நிலைமைகளும் நமது தமிழ் மக்களின் அவல நிலைகளும் சுமந்து வரும் முரசே!, உனது இதழ் என் கையில் வந்ததும் என்னையே நான் மறந்து விடுவேன்; என்றும் உனது பணி தமிழ் மக்களுக்கு தொடர என் மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

கே.ஆர்.லக்ஷ்மி, குவைத்.

அன்பின் முரசுக்கு!

திக்கெட்டும் முரசொலிக்க தேன்சுவை தரும் தினமுரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சுப்பர். அதிலும் பூலானின் தொடர் மிகவும் பிரமாதம். அதை வாராவாரம் தொடர்ந்து தரும் ரசிகனுக்கு எனது பாராட்டுக்கள். 'கவிதைப் போட்டி', இலக்கியநயம், சிந்தியாவின் பதில்கள் ரொம்ப இனிமை.

கே.எம்.சந்திரமதி, உடப்பு.

**மடல் அனுப்பியவர்களில் இடமுள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்**

* ஷைலஜா ஜேசுதாஸன், வவுனியா.
* பர்ஸானா ஹாஷிம், அக்குறணை-07.
* கௌசல்யா, கந்தப்பளை.
* நா.ஜெயகணேஷ், பொகவந்தலாவ.
* எம்.சீ.எம்.சன்பராபாஹிர், கொட்டாரமுல்லை.
* சி.வேதநாயகம், மட்டக்களப்பு.
* செல்வி தம்பிராஜா லக்ஸ்மண ரஜனி, சத்துருக்கொண்டான்.
* செல்வி கனகரெத்தினம் பாமினி, உடப்பு.
* க.இரத்தினேஸ்வரன், டோகா-கத்தார்.
* எஸ். தயாளன் (சுரேஷ்.), ஜெர்மனி.
* ஐ.எல்.சல்மா, அக்கரைப்பற்று-06.
* சுபாஷினி கமலப்பா, மட்டக்களப்பு
* எஸ்.எம்.றிஸாபி, ஹெரவபொத்தான.
* பி.திருச்செல்வம், வட்டக்கொடை.
* இ.தேவதாஸ், பள்ளிக்குடியிருப்பு.
* ஏ.ஜே.எம்.ஜஃபர், கொழும்பு-15.
* எஸ்.கார்த்திக், கொழும்பு-06.
* செல்வி கே.பாமினி, மாத்தளை.
* திருமதி சிவலிங்கம் ஜோதி, அவுஸ்திரேலியா.
* எஸ்.புவனேஸ்வரன், காரைதீவு-03.
* செல்வன் பாரிஸ், அக்குறணை.
* மு.நி.மு.நம்ஷான், ஓட்டமாவடி.
* செல்வி ப்ரியநேசி, களுத்துறை (தெற்கு)
* இஸ்லத்துல் இர்பான், மூதூர்-6.
* ஜெ.றோய் செபஸ்டியன், ஹட்டன்.
* ஜி.யோகராணி, இரத்தினபுரி.
* நாகராஜா செல்வம், வத்துகாமம்.
* எ.எம்.அசீம், புத்தளம்.
* ஆர்.காந்தன், மொரட்டுவ.
* எம்.ஜெயசிங்கம், திருமலை.
* பா.மணிவண்ணன், கொழும்பு-11.
* ஆரிகா ஆதம்பாவா, கல்முனை-06.
* எஸ்.சித்திரா, கொழும்பு-05.


படிப்பகம்

www.padippakam.com

# யாழ் குடாநாட்டில் தொடர் பலிகள்!
# சூட்டுக் காயங்களுடன் பிணங்கள்!

(யாழ் நிருபர் வர்மா)

கடந்த வாரம் யாழ் குடாநாட்டில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பல உடல்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

19.01.97 அன்று மாலையில் வடமராட்சிப் பகுதியில் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

பருத்தித்துறை பஸ்டிப்போ பாதுகாவலராகக் கடமையாற்றிய கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் (வயது 48) என்பவர் இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வடமராட்சியில் முள்ளி என்னும் இடத்தில் சி.இராசலிங்கம் (வயது 43) என்பவரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார்.

17.01.97 அன்று யாழ்ப்பாணம் பொன்னாலைப் பகுதியில் இரட்ணசபாபதி விக்கினேஸ்வரன் (வயது 40) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டு பிணமாகக் காணப்பட்டார். அதே நாள் சங்கானையில் ஜெகன் என்னும் 20 வயது இளைஞரின் பிணம் கிடந்தது.

அவரது கழுத்திலும், இடதுபக்க நெஞ்சிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

எழுதுமட்டுவாள், நாகர்கோவில் வீதியிலும் ஓர் இளைஞரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

### மரண தண்டனை

யாழ் குடாநாட்டில் உதயகுமார் என்னும் வர்த்தகரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவரது கொலைக்கு மட்டும் புலிகள் உரிமை கோரியுள்ளனர். படையினருக்கு தகவல் கொடுத்தார் என்றும் அதனால் மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

20.01.97 அன்று தென்மராட்சியில் மட்டுவில் பகுதியில் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டன. துப்பாக்கிச் சூடு காரணமாகவே இருவரும் பலியாகி உள்ளனர்.

இதேவேளை மட்டுவில் வடக்கில் தாம் நடத்திய தேடுதலில் இரண்டு புலிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

19.01.97 அன்று சாவகச்சேரி சங்கத்தானையில் வீதித்தடை போட்டு சோதனை நடத்திய இராணுவத்தினர்மீது புலிகள் கிரனைட் ஒன்றை வீசிவிட்டு ஓடிவிட்டனர். கிரனைட் வெடித்ததில் பரமநாதன் பார்த்தீபன் (வயது 15) என்னும் மாணவன் உட்பட சில பொதுமக்கள் காயமடைந்தனர்.

### தேடுதல்–தாக்குதல்

யாழ் குடாநாட்டில் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் கடந்தவாரம் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டிருந்தன.

ஒவ்வொரு பகுதியாகச் சுற்றிவளைத்து ஒரு பொது இடத்திற்கு மக்களைக் கொண்டு வருகின்றனர். பின்னர் முகமூடிகளின் உதவியுடன் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர். 20.01.97 அன்று அத் தாக்குதல் இடம்பெற்றது.

படையினர் நிலைகொள்ளாத பகுதிகளில் உரப்பைகளில் ஆயுதங்களுடன் புலிகளின் கெரில்லாக்கள் நடமாடுகின்றனர்.

ஆண்களும் பெண்களுமாக புலிகளின் உறுப்பினர்கள் பலர் புதிதாக யாழ் குடாநாட்டில் நடமாடத் தொடங்கியுள்ளனர்.

# "அம்பாறையை விட்டுக் கொடுக்கலாம்"
## மு. காங்கிரஸ் - கூட்டணி உடன்பாடு!

இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியும் முஸ்லிம் காங்கிரசும் பேச்சுக்களை நடத்தியிருந்தன.

இப்பேச்சுக்களின்போது இரு கட்சிகளும் தமக்கிடையே சில உடன்பாடுகளை எட்டியுள்ளன.

அம்பாறைத் தொகுதியை சிங்களப் பகுதியுடன் இணைத்துக்கொள்ளலாம். என்பது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடாகும்.

ஈ.பி.டி.பி., புளொட் ஆகியதமிழ்க் கட்சிகள் அந்த நிலைப்பாட்டை உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை.

வடக்கு-கிழக்கில் நடைபெற்றுள்ள திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் தொடர்பாக முதலில் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

அதன்பின்னரே எதை விட்டுக் கொடுப்பது, எதைப் பெறுவது என்ற முடிவுக்கு வரலாம் என்று அக் கட்சிகள் சார்பாக முஸ்லிம் காங்கிரசிடம் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமே முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாட்டுடன் தனது நிலைப்பாடும் ஒத்துப்போவதாகத் தெரிவித்தது.

அதனையடுத்து முஸ்லிம் காங்கிரசுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே பேச்சுக்கள் நடந்தன. அப் பேச்சுக்களின் பின்னர் அம்பாறைத் தொகுதியை சிங்களப் பகுதிகளுடன் இணைக்க சம்மதிப்பது என்று உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவருடன் நடந்த சந்திப்பிலும் மேற்கண்ட தமது உடன்பாட்டை முஸ்லிம் காங்கிரசும், கூட்டணியும் தெரிவித்துள்ளன.

## கிட்டு நினைவு தினம்

புலிகள் இயக்கத் தளபதிகளில் ஒருவரான கிட்டுவின் நாலாம் ஆண்டு நினைவு தினம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டது.

முதன்முதலாக இம்முறை திருக்கோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நினைவுதினக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

வெளிநாடுகளில் உள்ள புலிகள் இயக்கக் கிளைகளாலும் கிட்டு நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது.

# காணாமல் போன விமானங்கள்!
## புலிகள் தெரிவித்த செய்தி

இலங்கை விமானப்படையினருக்குச் சொந்தமான தன்னியக்க வேவு விமானம் காணாமல் போனது தொடர்பாக புலிகள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"சிறீலங்கா படையினரின் உளவு விமானம் தரையில் மோதுண்டு அழிந்துள்ளது. விமானியற்ற இந்த தன்னியக்க உளவு விமானம் 16.01.97 அன்று பூநகரிப் பகுதியில் தரையில் மோதுண்டு அழிந்துள்ளது. இதற்கு இயந்திரக் கோளாறே காரணம் என்று கூறப்படுகிறது. வன்னி வாழ் மக்களால் 'மூட்டைப்பூச்சி' என்று அழைக்கப்படும் இவ் விமானம் 1995ம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து உளவு வேலைகளில் பாவிக்கப்பட்டு வந்துள்ளது," என்று புலிகளின் செய்திக் குறிப்புக் கூறுகிறது.

20.01.97ல் காணாமல்போன மேலும் இரண்டு விமானங்கள் தொடர்பாகவும் அரசாங்கம் தெரிவித்த செய்திகளை மட்டுமே 'புலிகளின் குரல்' வானொலியும் தெரிவித்தது. "இயந்திரக் கோளாறால் வீழ்ந்தது என்று சிறீலங்கா அரசு கூறுகிறது. கடந்த வருடம் ஜனவரி மாதம் எம்.ஐ.17 உலங்கு வானூர்தி 39 படையினருடன் வடபகுதிக் கடலில் காணாமல் போனதும் தெரிந்ததே!" என்று புலிகளின் குரல் கூறியது.

## பாப்பரசர் மனம் வருந்தினார்

தமிழ் மக்களுக்காக தான் பிரார்த்தனை செய்வதாக பாப்பரசர் தன்னிடம் தெரிவித்தார் என்று யாழ்ப்பாணம் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் வத்திக்கானுக்குச் சென்ற யாழ் ஆயர் அங்கு பாப்பரசரை தரிசித்து விட்டு திரும்பியிருந்தார்.

தமிழ் மக்களின் துயரங்கள் குறித்து தான் எடுத்துக் கூறியதாகவும், அவற்றை கவனமாக செவிமடுத்த பாப்பரசர், தமிழ் மக்களுக்காக பிரார்த்தனை செய்வேன் என்று தன்னிடம் தெரிவித்தார் என்றும் யாழ் ஆயர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# "புலிகளின் குற்றச்சாட்டு பொய்யானது!"
## ஈ.பி.டி.பி. தலைவர் மறுப்பு!

யாழ் குடாநாட்டுக்கு தமிழ்க் கட்சிகள் செல்வதை புலிகள் கண்டனம் செய்துள்ளனர்.

"இந்திய அமைதிப் படையினருடன் இணைந்து மக்களைக் கொடுமைப்படுத்திய ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புக்கள் மீண்டும் யாழ் சென்றுள்ளன" என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

புலிக்ளின் குற்றச்சாட்டை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. மறுத்துள்ளார்.

"இந்தியப் படையுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும், இலங்கையின் எப்பகுதியிலும் ஈ.பி.டி.பி. இணைந்தோ, தொடர்பு கொண்டோ செயற்பட்டதில்லை. மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தவே புலிகள் பொய்யான குற்றச்சாட்டை ஈ.பி.டி.பி.மீது சுமத்துகின்றனர்.

ஈ.பி.டி.பி.மீது அவதூறுப் பிரசாரம் செய்வதற்கு புலிகளுக்கு வேறு காரணங்கள் எதுவும் கிடையாது. நாங்கள் எம் மக்களை துன்புறுத்தியதில்லை. துப்பாக்கி முனையில் அதிகாரம் செலுத்தியதும் இல்லை. புலிகள் என்ற பேரில் அப்பாவி இளைஞர்களை வதைத்ததும் இல்லை. அதனால்தான் ஈ.பி.டி.பி.மீது அவதூறு சொல்ல பொய்யான காரணங்களைத் தேடுகிறார்கள்.

நாம் யாழ் சென்றது யுத்தம் செய்வதற்காக அல்ல. மக்களின் உடனடிப் பிரச்சனைகளைக் கண்டறியவும், அவற்றுக்கு எம்மால் முடிந்தளவு தீர்வு காணவுமே யாழ்ப்பாண நகரில் எமது அலுவலகம் திறக்கப்பட்டது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## படையினர் சிரமதானம்

யாழ்ப்பாணம் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இராணுவத்தினரும், பொலிசாரும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

பிரிகேடியர் கெரத்ன தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானப் பணியின் பின்னர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு இயங்கத் தொடங்கியுள்ளது.

படையினரின் சிரமதானப் பணிக்கு பொதுமக்களும் முன்வந்து ஒத்துழைத்தனர்.

# அநுராதபுரம் மினி முகாம் தாக்குதல்
## புலிகள் தரப்பில் ஆறுபேர் பலி!

அநுராதபுரம் மாவட்டத்தில் கெப்பிட்டிக்கொலாவ என்னும் இடத்தில் 140 பொலிசாரைக் கொண்டிருந்த மினி முகாம் புலிகளால் தாக்கப்பட்டது. 18.01.96 நடைபெற்ற அத் தாக்குதல் தொடர்பாக புலிகள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"18.09.96 அன்று இம் முகாம்மீதான தாக்குதலில் பலியான 2ம் லெப்டினன்ட் தமிழ் ரூபன், மற்றும் சிவகீர்த்தி ஆகியோரின் நினைவாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

90 நிமிடத் தாக்குதலில் இம்முகாம் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

முகாமைக் கைப்பற்றிய புலிகள் அங்கிருந்த ஜெனரேட்டர், தண்ணீர் பவுசர், உழவு இயந்திரம் என்பவற்றைத் தகர்த்தனர். 60 எம்.எம் மோட்டார்கள் உட்பட பல ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன."

விடுதலைப்புலிகள் தரப்பில் ஆறுபேர் பலியானார்கள். மேஜர் அருண்மொழி (இராசநாயகம் பரமநாதன்-அம்பாறை), கப்டன் கலியன் (நடராசா சின்னராசா-பருத்தித்துறை), கப்டன் ராஜ்மோகன் (புஸ்பானந்த ராஜா புஸ்பஜீவன்-கரவெட்டி), லெப்டினன்ட் இளம்பிறை (மகாலிங்கம் கனகராசா-தெகிவளை), லெப்-சிலம்பரசன் (வ.சுதாகர்-முத்தையன்கட்டு), 2ம் லெப்-அன்பரசன் (சேது நிமலன்- முல்லைத்தீவு), ஆகியோரே பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதலில் 24 பொலிசார் பலியானதாகவும், 30 பேர் படுகாயமடைந்தனர் என்றும் படைவட்டாரங்கள் கூறியிருந்தன.

# கடற்படை ரோந்து அணிமீது தாக்குதல்
## ஊடுருவித் தாக்கியதாக விபரிப்பு!

யாழ்ப்பாணத்தில் குருநகருக்கும் மண்டைதீவுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் 15.01.97 அன்று கடற்புலிகளின் தாக்குதல் ஒன்று நடைபெற்றது. இத் தாக்குதலில் 22 அடி நீளமுள்ள கடற்படை ரோந்துப் படகை புலிகள் கைப்பற்றினார்கள். மூன்று கடற்படையினர் பலியானார்கள்.

இத் தாக்குதல் தொடர்பாக புலிகள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"வடமுனைப் பிரதேசத்தில் இப்போது படையினரின் கோட்டையாக இருப்பது யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாண நகர் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஒரேயொரு நுழைவாயிலை மட்டுமே கொண்டுள்ளதும், இராணுவத்தால் கட்டமைக்கப்பட்டதுமான நகரப்பாதுகாப்புக்கு ஒரு பிரிகேடியர் பொறுப்பாக உள்ளார்.

இந்த நகரத்திற்கு அருகில் இருப்பது குருநகர் கடற்கரைப் பகுதி. இப்பகுதி கடற்கரைகூட முள்வேலிகளால் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு தெற்கே யாழ் கடல் நீரேரி உள்ளது. இக் கடல் நீரேரி வழியாக புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவர் என்பதால் ஒரு கடற் படைத்தளத்தை அமைத்த படையினர் இரவு பகலாக பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

இந்தக் கடற்கரைப் பாதுகாப்பு பிரதேசத்தில் ஊடுருவிய கடற்புலிகளே கடற்படை ரோந்து அணிமீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

22 அடி நீளமான ரோந்துப்படகு, 40 குதிரை வலுகொண்ட இயந்திரம், வானொலி தொடர்பு சாதனம் (வோக்கிடோக்கி) ஏ.கே.எல்.எம்.ஜி-01, ரி.56 துப்பாக்கிகள்-02 உட்பட இராணுவ உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன" என்று புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

# "காடைத்தனங்களை நிறுத்துக!"
## மலையக மக்கள் முன்னணி கோருகிறது!

பன்விலை காகல தோட்டத்தில் தோட்ட உதவி அதிகாரி ஒருவரால் கட்டவிழ்த்து விடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தினைக் கண்டித்து தோட்ட வீடமைப்புகள் பிரதியமைச்சரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமாகிய பெ.சந்திரசேகரன் அவர்கள் பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கும் தோட்டத் தொழிற்துறை அமைச்சருக்கும் அவசர தந்திகளை அனுப்பியுள்ளார்.

மார்கழி மாதத்தில் இந்துக்களினால் புனிதமாகக் கொண்டாடப்படும் பஜனை கீதம் மேற்படி தோட்ட உதவி அதிகாரியின் பங்களாவை சென்றடைந்தபோது அங்கிருந்த அதிகாரியின் உறவினர்கள் இவர்களை ("பயிலா பாட்டு") பாட சொன்னதால் ஏற்பட்ட பிரச்சனையின் பின்னர் பஜனை பாடியவர்கள் அதிகாரியின் உறவினர்களால் தாக்கப்பட்ட சம்பவம் பன்விலை பகுதியில் எதிர்ப்பையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்தை தூண்டியவர்கள் மீது பாரபட்சமற்ற உடனடியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தொழிலாளர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் இவ்வாறான நாகரீகமற்ற அடக்குமுறைகள் உடனடியாகத் தடுக்கப்பட வேண்டுமெனவும் சந்திரசேகரன் கோரியுள்ளார்.

## யாழில் தாக்குதல்

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் இராணுவ மினி முகாம் ஒன்றையும், இரு காவலரண்களையும் தாக்கியதாகப் புலிகள் உரிமை கோரியுள்ளனர். 16.01.97 அன்று அதிகாலை இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

படையினர் பலர் கொல்லப்பட்டதாகவும் ஏ.கே.எல்.எம்.ஜி-01, ரி.56-02, ரி-5 ரக துப்பாக்கி-01 உட்பட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்திருந்தனர்.

எனினும் இத்தாக்குதல் செய்தியை படையினர் ஊர்ஜிதம் செய்யவில்லை.

# பல இலட்ச ரூபா மோசடி!
## சந்தேக நபர் தற்கொலை முயற்சி

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பிரதேச இ.மி.ச. பிரிவுக் காரியாலயத்தில் நீண்டகாலமாக இடம் பெற்று வந்த பண மோசடிச் சம்பவமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரியாலயத்தில் கடமையாற்றிய இலங்கை மின்சார சபை ஊழியரொருவர் மின்சாரப் பாவனையாளர்களிடமிருந்து மின் இணைப்புக்காகவும், மின்சாரக் கட்டணமாகவும் பல வருடங்களாகப் பெற்றுவந்த பணத்தை இ.மி.சபைக்குச் செலுத்தாது கையாடி வந்துள்ளார். இந்தச் சம்பவம் சமீபத்தில் இ.மி.ச.மட்டக்களப்புக் காரியாலயத்திற்குத் தெரியவந்தபொழுது இவர் தற்கொலை முயற்சியை மேற்கொண்டார். எனினும் அவரது முயற்சி கைகூடாததால் உயிர் பிழைத்து தற்சமயம் விசாரணையில் மாட்டிக் கொண்டுள்ளார். திருமலையிலுள்ள இ.மி.ச.பிராந்திய தலைமைக் காரியாலயத்தில் மேல் மட்ட விசாரணைகள் இடம் பெற்றுள்ளன. இவருக்கெதிரான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்று மட்டக்களப்பு இ.மி.ச. பொறியியலாளர் தெரிவித்தார்.

இவர் கையாடிய பணம் கிட்டத்தட்ட மூன்றரை இலட்ச ரூபா இருக்கும் என்று கூறப்படுகிறது.

இதனிடையே மட்டக்களப்பு-கல்முனைப் பகுதியில் புலிகள் தொடர்ந்தும் மின்சாரக் கம்பங்களைச் சாய்த்து வருகின்றனர். கடந்த வாரமும் பெரிய நீலாவணையில் 7 மின் கம்பங்கள் சாய்க்கப்பட்டன.

# கொழும்பு–மட்டக்களப்பு பாதையின் பயண நெருக்கடி!
## சலிப்புத்தரும் துன்பகரமான போக்குவரத்துக் கெடுபிடிகள்!

(ஏறாவூர் நிருபர்)

கல்முனை, மட்டக்களப்பு பகுதிகளிலிருந்து பொலன்னறுவை ஊடாக கொழும்பு, திருக்கோணமலை, வவுனியா, அனுராதபுரம், கண்டி, நுவரெலியா, பதுளை, ஹட்டன் போன்ற நாட்டின் இதர பகுதிகளுக்கும் போக்குவரத்துச் செய்யும் ஆயிரக்கணக்கான பயணிகள் நாளாந்தம் துன்பம் நிறைந்த பயணத்தினை- நெருக்கடி கெடுபிடிகளை அனுபவித்து மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

மட்டக்களப்பு-ஓட்டமாவடிக்கும் பொலன்னறுவைக்கும் இடைப்பட்ட பகுதியின் பாதுகாப்புக் காரணங்களாலேயே இந்த நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

### தாகத்தோடு காவல்

கல்முனை, மட்டக்களப்பு பகுதிகளிலிருந்து புறப்படும் ஏராளமான பஸ்களும், லொறிகள் ஏனையவை உட்பட நூற்றுக்கணக்கான வாகனங்களும் ஓட்டமாவடியிலும், இதே போல நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் புறப்படும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் வெலிக்கந்தையிலும் காலையிலிருந்து படையினரால் தடைப்படுத்தப்படுகின்றன.

பின்னர் அனுமதி கிடைக்கும்வரை ஆயிரக்கணக்கான பயணிகள் தகிக்கும் வெய்யிலில் மரநிழல்களோ, எதுவித தாபரிப்புகளோ அற்ற வீதியின் மருங்குகளில் காத்துக் கிடக்கிறார்கள்.

குழந்தைகள், நோயாளிகள், வயோதிபர்கள், பெண்கள், உடல் உபாதையுள்ளோர் எனப் பல்வேறு தரத்தினர் வெய்யிலிலும், வியர்வையிலும் பல மணிநேரங்கள் அவஸ்தைப் படவேண்டியுள்ளது.

தாகத்திற்குத் தண்ணீர் பெறக்கூட அவ்விடங்களில் வழியில்லை. பயணிகள் நெரிசலாகத் தொங்கிக்கொண்டு நிற்பார்கள். இவ்வேளையில் கால்கடுத்து, உடல் களைத்து, சோர்ந்து மயங்கிவிழும் இளைஞர், யுவதிகள், வயோதிபர் எனப் பலரும் உண்டு.

இந்நிலையில் பகல் 1 மணி 2 மணி சிலவேளை பிற்பகல் மூன்று மணியளவில் பயணம் செய்ய அனுமதிக்கும் சைகை படையினரிடமிருந்து கிடைக்கும். அதுவரை பயணிகள் சொல்லொண்ணா அவஸ்தையை அனுபவிப்பர். ஓட்டமாவடிக்கும் பொலன்னறுவைக்கும் இடைப்பட்ட 44 மைல் தூரத்தை 12 படைமுகாம்களைத் தாண்டிச் சோதனை முடித்துச் செல்ல சுமார் எட்டு மணித்தியாலங்கள் செல்கின்றன.

### 29 முகாம்கள்

கல்முனையிலிருந்து பொலன்னறுவை வரை 29 படைமுகாம்களை தாண்டி உப பாதைகளினூடாகப் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. கல்முனையிலிருந்து பொலன்னறுவை வரும் ஒரு பயணி எல்லாச் சோதனைச் சாவடிகளிலும் இறங்கி நடக்கும் மொத்தத் தூரம் கிட்டத்தட்ட 2 கி.மீ. ஆகும்.

கிழக்கின் முக்கிய விநியோகப் பாதையாகவும், மட்டக்களப்பு மாவட்ட மக்களின் போக்குவரத்திற்குரிய ஒரேயொரு வழியாகவுமுள்ள இப்பிரதான வீதிப் போக்குவரத்தின் சீர்கேடு குறித்து எந்தத் தரப்பினரும் கவனத்திலெடுத்ததாகத் தெரியவில்லை.

# உள்ளே வந்தால் வெளியே செல்ல முடியாது!
## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பும், தேடுதலும்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு நகர்ப் பகுதி இப்பொழுது படையினரின் சுற்றிவளைப்புக்கும் தேடுதலுக்கும் பரிச்சயமாகிவிட்டது. நகருக்குள் புலிகளின் தற்கொலைப் போராளிகள் நுழைந்திருக்கலாம் என்ற சந்தேகம் படையினரை உஷார் படுத்தியுள்ளது. சல்வார் அணிந்த யுவதிகள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களின் பக்கம் படையினரின் கவனம் திரும்பியுள்ளது.

நகர்ப்பகுதி திடீர் திடீரெனச் சுற்றிவளைக்கப்படும்போது நகருக்குள்ளிருந்து எந்தவொரு நபரும் வெளியே செல்ல முடியாது. ஆனால் வெளியிலிருந்து உள்ளே வர அனுமதிக்கப்படுகிறார்கள். உள்ளே வந்து மாட்டிக் கொண்ட எவரும் வெளியில் செல்லமுடியாது.

சென்ற 19.01.97 அன்றும் மட்டக்களப்பு நகரம் இவ்விதமே சுற்றிவளைக்கப்பட்டு வீடு வீடாகத் தேடுதல் நடத்தப்பட்டது. நகரைச் சூழவுள்ள வாவியில் கடற்படையினர் பல படகுகளில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். எவருமே தப்பிச் செல்ல முடியாதவாறு கடற்படையினர் காவல் புரிந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# வெட்டுப் புள்ளியால் பாதகம்
## யாழ் மாணவர்கள் கவலை!

கடந்த 1995 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையின் பல்கலைக்கழக அனுமதிக் கான வெட்டுப்புள்ளி விவரம் கடந்த வாரம் வெளிவந்தது. இதனைக்கண்டு உயர்கல்வி பெறுவதற்கு ஆவலாக இருந்த நாம் பெரும் ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம்; விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை யாழ். மாணவர் களாகிய நாம் எத்தகைய சூழ்நிலையில் எழுதினோம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? நாம் அடைந்த துன்பம் யாருக்குத் தெரியப்போகின்றது.

1995 ஆம் ஆண்டு எமக்குப் பரீட்சைக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் போது, முன்னேறிப் பாய்தல் இராணுவ நட வடிக்கை ஆரம்பமாகியது. அப்போது வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், ஆனைக் கோட்டை போன்ற பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்கள் பெரும் பாதிப்புக் குள்ளாகினர். விமானத் தாக்குதல்களுக்கும் ஷெல் வீச்சுக்களுக்கும் மத்தியில், கையில் அகப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டு, உயிரைத் தப்பினால் போதும் என்ற நிலையில் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் இருந்தனர். அந்த அவல நிலையை மக்கள் இன்னும் மறக்கவில்லை.

அப்போது மாணவர்கள் தமது புத்தகம், குறிப்புக் கொப்பிகளை இழந்து நிர்க்கதியான நிலையில் தவித்தனர். அப்போது வானொலி மூலம் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிகளில் பரீட்சை நடைபெறும் என்றும், இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் பரீட்சை நடைபெறாது என்றும் அரசு கூறி வந்தது. அதனால் தமக்கு பரீட்சை நடை பெறாது என்று யாழ் மாணவர்கள் எண்ணி யிருந்தவேளை, அரசு திடீரென பரீட்சை குறிப்பிட்ட தினத்தில் நடைபெறும் என்று அறிவித்தது. இதனால் மாணவர்கள் பெரும் குழப்பநிலை அடைந்தனர். குறிப்பிட்ட தினத்தில் பரீட்சை நடைபெறுமா, இல்லையா? என்ற திரிசங்கு நிலையில் இருந்தனர்.

இறுதியில் பரீட்சை குறிப்பிட்ட தினத்தில் நடைபெற்றது. அதில் அநேகர் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பாத நிலையில் பரீட்சைக்கு சமூகம் அளித்தனர். விமானத் தாக்குதல், ஷெல் வீச்சுக்களுக்கு மத்தியிலும் மாணவர்களாகிய நாம் பரீட்சை மண்டபத்தில் பதட்டத்துடன் பரீட்சை எழுதினோம். அப் போது பரீட்சை மேற்பார்வையாளர்கள் எம்மைப் பயப்பட வேண்டாம் என ஆறுதல் கூறுமளவுக்கு பாதுகாப்புச் சூழ்நிலை மிக மோசமாக இருந்தது. பெரும் பயங்கரத்தின் மத்தியிலும் நாம் பரீட்சை எழுதினோம்.

உயர் கல்விபெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துட னேயே மிகக் கஷ்டமான நிலையிலும் பரீட்சைக் குத் தோற்றினோம். ஆனால் கடந்த கால வெட்டுப்புள்ளிகளைவிட தற்போதைய (1994-95 பல்கலைக்கழக அனுமதிக்கான) வெட்டுப்புள்ளி அதிகரித்துள்ளமையைப் பார்க்கும்போது எமக்குப் பெரும் கவலையும், விரக்தியும் ஏற்படுகின்றது.

96/97 ஆம் கல்வியாண்டில் கூடுதலான மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்கும் என்று கூறிவிட்டு கடந்த காலங்களைவிட இம்முறை மிகவும் கூடிய வெட்டுப் புள்ளிகளை- குறிப்பாகக் கலைத்துறைக்கு அதிகபுள்ளிகளை நிர்ணயித் துள்ளனர். இதனால் யாழ். மாணவர்க ளாகிய நாம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி யுள்ளோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் இதற்குப் பொறுப்பான- உரிய அதிகாரிகளிடம் நாம் வேண்டுவது யாதெனில், தயவு செய்து யாழ்ப்பாண வெட்டுப்புள்ளிகளின் அளவைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே யாகும். 1994/1995 பல்கலைக்கழக அனுமதிக் கான வெட்டுப்புள்ளி அளவைக் குறைக்க முயற்சி செய்ததுபோல இம்முறையும் தீவிர முயற்சி செய்வீர்களா?

உடைமைகள் இழந்து, உறவுகள் இழந்து, உடல்- உள ரீதியில் பாதிக்கப் பட்டிருக்கும் எமது எதிர்காலத்தினை வளம் பெறச் செய்ய உரிய அதிகாரிகள் வெட்டுப் புள்ளியளவைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

க. நிரஞ்சனி- யாழ்ப்பாணம்.

# இருளில் மூழ்கும் கல்முனைக்குடி

கல்முனைக்குடியில் உள்ள பெரும் பாலான வீதிகள் கடந்த பல மாதங்களாக இருளில் மூழ்கிக்கிடக்கின்றன.

இவற்றில் செயிலான் வீதி, பிச்சிப்பிலாவடி வீதி, சாஹிபு வீதி, ஹனிபா வீதி, பள்ளி வீதி, காசிம் வீதி என்பன பிரதானமானவையாகும்.

இருளில் மூழ்கியுள்ள வீதிகளில் இரவு நேரங்களில் பிரயாணம் செய்வது பெரும் இடைஞ்சலாக உள்ளது. பாதை களில் உள்ள பள்ளம் மேடுகளும் இதனால் தெரிவதில்லை. பாதசாரிகளும் வாகன ஓட்டிகளும் இடையிடையே முட்டி மோதும் காட்சிகளையும் அவ்வப்போது காண முடிகிறது.

கடந்த பிரதேச சபைத் தேர்தலில் கல்முனை பிரதேச சபை உறுப்பினர்கள் அளித்த வாக்குறுதி வெறும் ஜோக்குறுதியாக மாறியுள்ளது. "வீதி மின்கம்பங்களில் மின்னொளி பரப்புவோம்!" என்று அப்போது அவர்கள் கூறியது தன் ஒளிக்காகவே என்று இப்போது புரிகிறது, பொதுமக்களுக்கு.

இனியும் இவ்விடயத்தில் காலம் தாழ்த்தாது, இப்பகுதி மக்களின் நலன் கருதி, இருளில் மூழ்கியுள்ள வீதிகளில் உள்ள மின் கம்பங்களுக்கு மின் குமிழ்கள் பொருத்தப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.சி.கலீல்,
கல்முனை-05.

# ஆடம்பர மாநாடுகள் தேவையா?
## மலையகத்திலிருந்து மனக்குமுறல்

தங்களின் தினமுரசு வாசகர்களில் நானும் ஒருவன். முரசின் 186 வது இதழில் (ஜன-5-11) "மலையக தமிழாராய்ச்சி மாநாடு யாருக்காக?" என்ற தலைப்பில் வெளியான செய்தி எம்மை ஆச்சரியத்துக்குள்ளாக்கவில்லை. ஏனெனில், இம்மாநாடு கௌரவ அமைச்சர் அங்கம் வகிக்கும் LJWU தொழிற்சங்க தலைவர்களை (தோட்டக் கமிட்டி) திருப்திப் படுத்துவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டதாகும்.

ஆரம்பநாள் நிகழ்ச்சிக்கு சகல தோட்டக் கமிட்டித் தலைவர்களும் சமூகமளித்திருந்தனர். ஆகவே, தங்கள் செய்தியில் குறிப்பிட்டது போல் ஒரு குறிப்பிட்ட சிலரை சந்தோஷப் படுத்த ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

ஐந்து-பத்துஇலட்சம் செலவு செய்யப் பட்டதாக வி.ரி. தருமலிங்கம் கூறியுள்ளார். இந்த ஐந்து- பத்து இலட்சத்தை வைத்து எத்தனையோ மலையக பாடசாலைகளின் குறைகளை தீர்த்து இருக்கலாம். வீணே உணவுக்கும் ஆடம்பர செலவுகளுக்கும் அரசாங்க பணம்- அதாவது, மக்கள் பணம்- செலவழிக்கப்பட்டுள்ளது. இதற்கு எல்லாம் பொறுப்பு சொல்லவேண்டிய காலம் கூடிய சீக்கிரம் வரும்!

மக்களை எந்நாளும் இழிச்சவாயர்களாக கருதமுடியாது. இன்னும் மலையகத்தவர் ஏமாளிகள் என்ற எண்ணத்தில் அரசியல் வாதிகள் செயல்படுகிறார்கள். இதற்கு எல்லாம் முடிவு ஒருநாள் உண்டு. 5 வருடங்களின் பிறகு எம்மை நாடி வர வேண்டும் என்பதை தற்போது பதவியில் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் உணர்வதில்லை- உணரவில்லை. அவர் களின் முக்கிய குறிக்கோள் பணம், பதவி, அந்தஸ்து, ஆசை.

மத்தியமாகாண சபை கல்வி அமைச் சரும் தனக்குக்கீழ் நிறைய அமைச்சுக்கள் இருந்தாலும் அவரது கவனம் முழுக்க கல்வி அமைச்சில்தான். ஏனைய அமைச்சுகள் மூலம் மலையக இளைஞர் குழு அதிகம் செய்யமுடியும். "கல்வி அமைச்சின் நிதி என்னவாகிறது?" என்று பொதுமக்களுக்கு விளங்காமல் உள்ளது. ஒவ்வொரு தோட்டத்துக்கும் ஒலிபெருக் கியை வாங்கிக் கொடுத்துவிட்டுக் கணக்கு காட்டப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் கல்வியின் நிலை அதலபாதாளத்தில் விழுந்துவிட்டது. அதை திருப்பிப் பெற எத்தனை ஆண்டு கள் சென்றாலும் இயலாது. கல்வியில் எப்போது அரசியல் தலையீடு இல்லாமல் ஒழிகிறதோ அன்றுதான் மலையக கல்வி- மலையக பாடசாலைகள் தலை நிமிரும்.

ஆர். இராமசாமி,
பத்தன.

# இடமாற்றத்தில் குளறுபடி
## ஆசிரியர்கள் அதிருப்தி

(திருமலை நிருபர்)

திருக்கோணமலைப் பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் தன்னிச்சையாக ஆசிரியர்களது இடமாற்றம் சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை கல்வி வட்டாரத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

எவ்வித நிதானிப்பும் இல்லாமல் மேற் கொள்ளப்பட்ட இந்த இடமாற்ற உத்தரவு களால் சில பாடசாலைகளின் கல்வி நிலைமை மோசமாகப் பாதிப்படையக் கூடும் என அஞ்சப்படுகிறது.

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரொ ருவர் விஞ்ஞானம் படிப்பிக்கப்படாத ஆரம் பப்பாடசாலைக்கு மாற்றம் பெற்ற சம்பவ மும் இடம்பெற்றுள்ளது.

இடமாற்றம் பற்றிமுடி வெடுக்க பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது எனத் தெரிவிக்கும் ஆசிரியர் வட்டாரம், இடமாற்றம் பெறும் ஆசிரியர்களது வெற்றிடங்களுக்கு சரியான பதிலீடுகள் செய்யப்படாததும், மூன்று நாட்களுக்குள் இடமாற்றத்தை அமுல் நடத்தத் துடிப்பதும் நியாயத்தின் பாற்பட்ட தல்ல எனவும் கவலை தெரிவிக்கிறது.

இடமாற்றச் சபையின் ஒப்புதலின்றி மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்றங்கள் அதிகாரியொருவரின் சொந்த விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் செய்யப் பட்டிருக்கிறது. இதனால் கல்வித்தரம், பாடசாலைகளின் வளர்ச்சி என்பன பாதிப்புறும் நிலை தோன்றியுள்ளது. மீள்பரிசீலனை விண்ணப்பங்கள்கூட நிராகரிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரும் கடிதமொன்றை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது.




கலை அலங்கார வகுப்புக்கள்
* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி

ஆரம்பம்: 15.02.97

FASNAZ BEAUTY SALON

இல. 142, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை,
கொழும்பு-06.
தொலைபேசி: 589457

BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்: ..............
விலாசம்: ..............

BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL: 434770

காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும்
தொலைபேசி மூலம் தொடர்பு
கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

விளம்பரப் பகுதி

கொட்டாவ றுக்மல்கம அரசாங்க வீடுகள் தொகுதியில் 2 அறை வீடு விற்பனைக்கு உண்டு. 7 1/2 பேர்ச் காணியில் குழாய் நீர் விநியோகம், மின்சாரம் மற்றும் இடவசதி கொண்ட சமையலறை, முன் முற்றம்- மரங்களுடன் கூடிய வளவு, வீடு அமைதியான சூழ்நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு.
தொலைபேசி இல. 593957 No Brokers

COMPUTER வகுப்புக்கள்
தனித்தனியாக கற்பிக்கப்படும்.
INDIVIDUAL CLASSES
O/L, A/L மாணவ மாணவியர்களுக்கும், பட்டதாரி மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் அவரவர்க்கு ஏற்றபடி கற்பிக்கப்படும்.
CONTACT:
ICS COMPUTER CENTRE
32/1, GALLE ROAD, DEHIWALA.

'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்

APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176

'எல்லாப்புகழும் இறைவனுக்கே'

கர்ம-காலபலனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறு பிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருளி முனிவர்கள் கையாண்ட கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங் களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படு கின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.



நாடவேண்டிய பெயர், விலாசம்

YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.

குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.

தபால் மூலம்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G.A.Q., B.A.,
G.S.Q. B.Sc (Bio & Stats)

புதிய மாணவர்கள் அனுமதி - 1997

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் மேற்படி பட்டங்களை வீட்டிலிருந்தவாறே படித்துப் பட்டம் பெறுவதற்கான எமது தபால் மூலம் பட்டப் படிப்புகள் பயிற்சித் திட்டத்திற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பாடநெறிகள் பற்றிய முழுவிபரங்கள் அடங்கிய கையேட்டின் விலை ரூபா 50/- Kotahena தபாற் கந்தோரில் பணம் பெறக் கூடியவாறு, Registrar, External Studies Academy என்ற பெயருக்கு பெற்ற ரூபா 50/- இற்கான மணியோடரையும் இரண்டு ரூபா முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட நீள கடிதவுறையையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தும் அல்லது நேரில் 50/- செலுத்தியும் கையேட்டையும், விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு:- விண்ணப்ப முடிவுதிகதி 1997 ஜனவரி 31ஆம் திகதியாகும். இத் திகதிக்குள் எமது நிலையத்தில் தம்மைப் பதிவு செய்யும் மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களில் வெளிவாரி மாணவராகப் பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

EXTERNAL STUDIES ACADEMY
P.O.Box : 660, No. 32, 3rd Floor,
Colombo Central Super Market,
Reclamation Road, Colombo - 11.

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியபடும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர் மற்றும ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களில் சந்திக்கவும்.

ஜனவரி 19 முதல் 31 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN BANG BANG BULDING NO.10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST. Opposite Ranjanas) COLOMBO 11. T.P. 436383, 436390, 078-71101 பெப்ரவரி 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், பெப்ரவரி 8, 9, 10 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

ஹோட்டல் முகாமைத்துவத்துக்கான
சுவிற்சர்லாந்து டிப்ளோமா கல்வி

SHMS சுவிற்சர்லாந்து நிறுவனத்தின்
'இந்திய வளாகம்' உங்களை
அழைக்கின்றார்கள்.

இலங்கை மாணவர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம்

- உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் சர்வதேச ஹோட்டல் முகாமைத்துவ சுவிஸ் டிப்ளோமாக் கல்வியை 3 வருடத்தில் கற்றுத் தருகிறார்கள்.
- குறைந்த செலவில் கல்வி.
- தகுதிவாய்ந்த மாணவர்களிடமிருந்து SHMS, சுவிற்சர்லாந்து நிறுவனத்தினர் விண்ணப்பங்களைக் கோருகின்றார்கள்.
- இந்தோ-சுவிஸ் கொலெஜ் ஒ.'.ப் ஹோட்டல் மனேஜ்மன்ற் (SHMS India Campus) கோட்டயம், கேரளா மாநிலம், தென் இந்தியா- இங்குதான் கல்வி கற்பிக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு

Mahinda Daluwatta
Daluwatta & Jaffe Associates
L.G.15, People's Park, Colombo-11.
Tel:(O) 320139, (R) 952525, Fax: 433597




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# போர்க்களமும் பொறிக்கிடங்குகளும்!

நாரதர்

**கெரில்லாக்களை பல அணிகளாகப் பிரிப்பது, தேவையானபோது சகல அணிகளையும் ஒன்று சேர்ப்பது என்னும் புலிகளின் கெரில்லாப் போர் விவேகத்தை எதிர்கொள்வது படையினருக்கு பெரும் சவால்!**

**ப**ரந்தன் தாக்குதலின் பின்னர் வடக்கே மேலும் சில தாக்குதல்களைப் புலிகள் நடத்தி இருக்கின்றனர்.

யாழ் குடாநாட்டு கடற்பரப்பில் கடற்படை ரோந்துப் படகொன்று புலிகளால் தாக்கப்பட்டுள்ளது.

இரண்டு ரோந்துப் படகுகளில் சென்று கொண்டிருந்த கடற்படையினரை கடற்புலிகளின் அணியொன்று முற்றுகையிட்டது.

ஒரு ரோந்துப்படகு கடற்புலிகளின் முற்றுகையில் இருந்து தப்பிச்சென்று விட்டது. மற்றொரு கடற்படை ரோந்துப் படகு கடற்புலிகளால் தாக்கப்பட்டது.

ரோந்துப் படகில் இருந்த கடற்படையினர் மூவரும் பலியானார்கள். ரோந்துப் படகு. கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. ரோந்துப்படகில் இருந்த ஏ.கே.எல்.எம்.ஜி. துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டது என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் தென்மராட்சிப் பகுதியில் கச்சாயிலும், மிருசுவிலிலும் படையினரின் மினி முகாம்கள் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளன. கண்ணி வெடித் தாக்குதல்களும் நடந்துள்ளன. வவுனியாவில் இராணுவ காவலரண்கள் தாக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம் கெப்பிட்டிக்கெலாவ பகுதியிலும் புலிகள் வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். 24 பொலிசார் பலியாகியுள்ளனர்.

வடக்கிலும்–கிழக்கிலும் மட்டுமல்லாமல் எல்லைப்புறப் பகுதிகளிலும் பரவலான தாக்குதல்களை புலிகள் நடத்துவதால், எந்த முனையில் புலிகளின் கவனம் இருக்கிறது என்பதை படையினரால் தீர்மானிக்க முடியாமல் இருக்கிறது.

குறிப்பிட்ட எண்ணிக்கையான கெரில்லாக்களை வைத்தே அவர்கள் 'தூணிலும் இருப்பார்கள், துரும்பிலும் இருப்பார்கள்' என்பதுபோல வித்தை காட்டக்கூடிய உத்திகளும், வேகமான நகர்வுகளும் புலிகளிடம் இருக்கின்றன.

கெரில்லா அணிகளுக்குரிய முக்கிய தேவைகள் அதிகமாக ஒன்றுமில்லை.

1. பாரம் குறைந்த ஆனால் நவீனரக ஆயுதங்கள். 2. தொலைத் தொடர்பு சாதனங்கள். 3. பழுதடையாத உணவு வகைகள் 4. போக்குவரத்துப் பாதை.

போரிடும் உத்வேகத்துடன் மேற்கண்ட நான்கு வசதிகளும் இருந்தால் கெரில்லா அணிகள் துரிதமாகச்செயற்பட்டுக் கொண்டேயிருக்கும்.

இன்று அம்பாறை மாவட்டத்தில் நிற்கும் ஒரு அணியை நாளையே வன்னிக்கு அழைக்கக்கூடிய வசதி புலிகளிடம் இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் படையினர் பாரிய படை நகர்வை மேற்கொண்டு, தம் முழுச் சக்தியையும் அங்கு பிரயோகித்துக் கொண்டிருக்க, புலிகளின் கிழக்கு மாகாண அணிகள் அந்நேரம் வன்னியில் இருக்கக்கூடும்.

அணிகளை நகர்த்துவது, விலக்கிக் கொள்வது, திடீரென்று ஒரே இடத்தில் ஒன்றுகுவிப்பது போன்ற கெரில்லாப் போரின் அடிப்படை விடயங்களை பிரபாகரன் மிக இயல்பாகக் கையாளுகிறார்.

கெரில்லா யுத்தத்தில் ஆயுதங்களுக்கு உள்ள அதே முக்கியத்துவம் தொலைத் தொடர்பு சாதனங்களுக்கும், போக்குவரத்துப் பாதைக்கும் இருக்கிறது.

நூறு கெரில்லாக்கள் கொண்ட ஒரு அணியை பத்துப் பிரிவுகளாகப் பிரித்து அனுப்பவும் முடியும். ஒருபெரிய தாக்குதலுக்கு நூறு கெரில்லாக்களையும் குறிப்பிட்ட நேரத்துக்குள் ஒரே இடத்தில் ஒன்றுகுவிக்கவும் முடியும். அவ்வாறு முடியுமானால்தான் கெரில்லா யுத்தத்தில் நிலைக்க முடியும்.

ஆயிரம் படையினர் இருந்தால்கூட ஒரு சிறு பிரதேசத்தில் மட்டும்தான் நிலை கொண்டிருக்க முடியும்.

ஆனால் நூறு கெரில்லாக்களால் ஒரு பெரியபிரதேசம் முழுக்க தாம் இருப்பது போன்ற எண்ணத்தை தமது எதிரியிடம் ஏற்படுத்த முடியும். பரவலான சிறு தாக்குதல்களையும், திடீரென்று பெரும் தாக்குதலையும் நடத்துவதுமூலம் தமது பலத்தைப் பன்மடங்கு உயர்த்திக்காட்டிக் கொண்டிருப்பர்.

உலகில் இன்று முதலிடத்தில் உள்ள தலைசிறந்த கெரில்லா அணிகளை கொண்டுள்ள அமைப்பாக புலிகள் இயக்கம் வளர்ச்சி பெற்றுள்ளது.

இதனைச் சரியாக மதிப்பிடாமல், அதாவது- தனது எதிரியின் பலம் என்ன என்பதை சரியாக அறியாமல், அரசாங்கமும் படைகளும் யுத்தம் தொடர்பான முடிவுகளை மேற்கொள்கின்றன.

யாழ் குடாநாட்டை இழந்தது புலிகளின் அணிகளுக்குள் முதலில் அதிர்ச்சிதான். அந்த அதிர்ச்சியில் இருந்து தனது அணிகளைப் பிரபாகரன் மீட்டெடுத்துவிட்டார், என்பதற்கு முல்லைப் போர்க்களம் முதல் சாட்சியாக அமைந்தது.

புலிகள் இயக்கத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் பலர், யாழ் குடாநாடு தளப் பிரதேசமாக இருந்தபோது இயக்கத்தில் சேர்ந்தவர்கள்.

யாழ் குடாநாடு எப்போதுமே தமது கட்டுப்பாட்டில்தான் இருக்கும்; ஏனைய பிரதேசங்களையும் விரைவாக கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டால் தமது இலட்சியம் விரைவாக நிறைவேறிவிடும் என்ற எண்ணமும் அவர்களிடம் இருந்தது.

அதாவது நீண்டகால யுத்தம் என்பதற்கு மாறாக குறுகியகால யுத்தம் என்ற கண்ணோட்டமே நிலவியது. யாழ் குடாநாட்டில் புலிகளால் உருவாக்கப்பட்ட சிவில் நிர்வாக அமைப்புக்களும், காவல் துறையும், வங்கிகளும், மற்றும் பல கட்டமைப்புகளும் அவ்வாறான எண்ணத்தை புலிகள் இயக்க உறுப்பினர்களிடம்



மட்டுமல்லாமல், மக்களிடம் கூட ஏற்படுத்தியிருந்தன.

யாழ் குடாநாட்டுக்குச் சென்ற வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் கூட அப்படித்தான் நம்பினார்கள். ஒரு தமிழ் பத்திரிகையாளர் வெளிநாட்டில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தைப் பார்த்தபோது திறந்தவாய் மூடவில்லை. திரும்பிச் சென்ற பின்னர் வெளிநாட்டு தமிழ் சஞ்சிகை ஒன்றில் அவர் எழுதிய கட்டுரையின் தலைப்பு: 'உருவாகி வருகிறது தமிழீழம்.'

யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய போது, அவ்வாறான அவசர மனோபாவங்களுக்கு பலத்த அடியாக அமைந்தது.

வெளிநாடுகளில் புலிகளுக்கு பணம் கொடுத்துக் கொண்டிருந்த பலர் இனிமேல் நிதி தரமாட்டோம் என்று சொன்ன சம்பவங்களும் இருக்கின்றன.

யாழ் குடாநாட்டை இழந்தபின்னர் புலிகளின் அணிகளுக்குள்ளும், மக்களுக்குள்ளும், தமது ஆதரவாளர்கள் மத்தியிலும் எழுந்த நம்பிக்கையீனங்களை பிரபாகரன் எதிர்கொண்டதுதான் உண்மையான சவால்.

ஒரு தனியாட்சி பிரதேசம் போன்று விளங்கிய யாழ் குடாநாட்டை தளமாகக் கொண்டிருந்த தமது அணிகளை, அவ்வாறான ஒரு தளப்பிரதேசம் இல்லாமலும் தொடர்ந்து போரிட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியிருந்தது.

தலைமைத்துவத்தில் இரண்டு போக்குகள் உள்ளன. ஒன்று: சூழ்நிலைகளுக்கு ஏற்ப தமது போக்குகளை மாற்றிக் கொள்வது. அவ்வாறான தலைமைத்துவங்கள் சூழ்நிலைக் கைதிகளாக மாறிவிடுகின்றன.

அவ்வாறான தலைமைகளால் புதிய சூழ்நிலைகளை உருவாக்க முடியாது.. தானாக உருவாகும் சூழ்நிலைகளின்- நிகழ்ச்சிகளின் வாலைப் பிடித்துக்கொண்டு செல்லத்தான் முடியும்.

இரண்டாவது வகையான தலைமைத்துவம் என்பது, சூழ்நிலைகளைத் தமக்கு சாதகமாக மாற்றுவதோடு, புதிய சூழ்நிலைகளையும் ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும். நிகழ்வுகளின் பின்னால் செல்லாமல், முன்னால் நின்று அந்த நிகழ்வுகளை தமது வழிக்கு சாதகமாக திருப்பி விடுவதாக அமையும்.

இன்னொரு விடயமும் இருக்கிறது. மக்களின் கருத்துக்கள் என்பவை எப்போதுமே சரியாக இருக்கும் என்றும் சொல்ல முடியாது. மக்களுக்கு தலைமை கொடுப்பவர்கள் மக்களின் கருத்துக்களுக்கு மாறான முடிவுகளையும் எடுக்க வேண்டியிருக்கும். மக்களின் பின்னால் சென்று கொண்டிருக்காமல் முன்னே நின்று சரியான திசை காட்டுவோர்தான் சரியான தலைமைத்துவமாக கணிக்கப்படுகிறார்கள்.

பிரபாகரனைப் பொறுத்தவரை இரண்டாவது வகையான தலைமைத்துவ குணாம்சம்தான் இயக்க ஆரம்ப காலத்தில் இருந்தே அவரிடம் இருந்து வருகிறது.

**யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னர் தமது அணிகளிடம் ஏற்பட்ட சோர்வு, மக்களிடம் ஏற்பட்ட நம்பிக்கையீனம், வெளியுலகில் ஏற்பட்ட நெருக்கடிகள் என்ற மும்முனைச் சவால்களை பிரபாகரன் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.**

வெலிஓயா முகாம் தாக்குதலில் ஏற்பட்ட பாரிய தோல்வியும் அழுத்திக்கொண்டிருந்தது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அணிகளுக்குள் கட்டுப்பாடு இன்மை, விலகி ஓடுதல், தவறான சக்திகள் அணியில்சேருதல் போன்ற தன்மைகள் காணப்படும். ஆனால் புலிகள் இயக்கத்தில் அவ்வாறான மாற்றங்கள் ஏற்படாமல் வைத்திருந்ததும், அதன் போரிடும் உத்வேகத்தை பாதுகாத்ததும் லேசுப்பட்ட காரியம் அல்ல.

பாரிய சண்டைகளுக்குள் சிக்கிக் கொள்ளாமல் தமது அணிகளைத் திரும்பப்பெற்றுக் கொண்டதோடு, அந்த அணிகளைப் பிரித்து நடமாடும் கெரில்லா அணிகளாக மாற்றியது முதற் கட்டம்.

கிழக்குப் போர்க்களத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரதான தளபதிகளை அங்கே நகர்த்தி தாக்குதல்களை நடத்தியது இரண்டாவது கட்டம்.

கிழக்கில்தான் புலிகளின் கவனம் இருக்கிறது என்று படையினர் நினைத்த நேரத்தில், பிரதான அணிகளையும், பிரித்து அனுப்பப்பட்ட கெரில்லாக்களையும் ஒன்று குவித்து முல்லைத்தீவில் தாக்குதல் நடத்தியது மூன்றாவது கட்டம்.

அந்த மூன்றாவது கட்டத்துடன் தமது அணிகளுக்குள் இருந்த நம்பிக்கையீனங்களை முற்றாகக் களைந்தெறிந்துவிட்டார் பிரபாகரன்.

புலிகளின் அணிகளுக்குள் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியதோடு, படைத் தரப்புக்கும் அச்சுறுத்தலாக முடிந்தது முல்லைச் சமர்.

அதன்பின்னர் நாலாவது கட்டம். புலிகளின் அணிகளுக்கு உற்சாகமூட்டுவது என்ற கட்டம் கடந்துவிட்டது. படையினருக்கு உளவியல் ரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்துவது என்பதுதான் இப்போதைய நாலாவது கட்டம்.

இந்த நாலாவது கட்டத்தில் புலிகளுக்கு இரண்டு கடமைகள் இருக்கின்றன.

ஒன்று: வன்னித் தளப் பாதுகாப்பு.

இரண்டு: தமது இராணுவ பலத்தை மேலோங்கச் செய்வது.

மேற்கண்ட இரண்டு கடமைகளையும் உள்ளடக்கியதாக அமைந்த தாக்குதல்தான் பரந்தன் சமர்.

**ஒரு பாரிய சண்டை என்றளவில் பரந்தன் சண்டையில் வெற்றி புலிகளுக்குத்தான். ஆனால் புலிகளின் இழப்புக்கேற்ற பயனுள்ள சண்டையாக அமைந்ததா என்பது கேள்விதான்.**

பரந்தன் தாக்குதல் தொடர்பாக பிரபாகரனுக்கும் பூரண திருப்தி இருப்பதாகத் தெரியவில்லை.

வடபகுதியில் புலிகளால் வெற்றிகரமாக நடத்தப்பட்ட தாக்குதல்கள் அனைத்துக்கும் பெயர் சூட்டப்பட்டன.

ஆனையிறவு முகாம் தாக்குதலுக்கு 'ஆகாய கடல் வெளிச் சமர்', மண்கிண்டிமலை முகாம் தாக்குதலுக்கு 'இதயபூமி 1', பூநகரி தாக்குதலுக்கு 'தவளைப் பாய்ச்சல்', யாழ்ப்பாணத்தில் 'புலிப் பாய்ச்சல்', முல்லை முகாம் தாக்குதலுக்கு 'ஓயாத அலைகள்'.

இதேவேளை, மணலாற்றில் தோல்வி கண்ட தாக்குதல், யாழில் படையினரின் இடிமின்னல் தாக்குதலுக்கு எதிரான தாக்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கு தாம் என்ன பெயர் சூட்டியிருந்தனர் என்பதை புலிகள் இதுவரை வெளியிடவில்லை.

ஏதாவது ஒரு பெயரில், அல்லது பலியான தமது உறுப்பினர்களின் நினைவாக என்று முக்கிய தாக்குதல்களை புலிகள் உரிமை கோருவர்.

பரந்தனில் பெரும் சண்டையில் ஈடுபட்டும் கூட, படையினர் தரப்பில் 300 பேர்வரை பலியாகியும் கூட இதுவரை அத்தாக்குதலுக்குச் சூட்டப்பட்ட பெயர் தொடர்பாக புலிகள் எதுவும் கூறவில்லை. பிரபாகரனால் வழி நடத்தப்பட்ட தாக்குதல் என்பதை வழமையாக வலியுறுத்தும் புலிகள் இம்முறை அதனையும் குறிப்பிடவில்லை.

மணலாற்று முகாம் தாக்குதல், இடி மின்னல் தாக்குதலுக்கு எதிரான பதிலடித் தாக்குதல் என்பவைபோல பரந்தன் சண்டை தோல்வியல்ல. ஆனால் பிரபாகரன் நினைத்தளவுக்கு விளைவுகள் போதாது என்பதுதான் தாக்குதல் முடிந்தபின் காணப்படும் புலிகளின் வழக்கமான அறிவிப்புக்கள் இம்முறை வெளியாகாமல் இருக்கக் காரணம் என்று தெரிகிறது.

**குறைந்தது ஆயிரம் படையினராவது அழித்தொழிக்கப்பட வேண்டும். விரைவாகத் தாக்கி சில ஆட்டிலெறிகளையாவது கைப்பற்றவேண்டும் என்பதுதான் திட்டமாக இருந்தது. ஆனால் படையினர் நீண்டநேரமாக தாக்குப்பிடித்து பதில் தாக்குதலில் ஈடுபட்டதால் சண்டை எதிர்பார்த்ததைவிட உக்கிரமாக மாறிவிட்டது.**

குறிப்பிட்ட ஆட்டிலெறித் தளத்தைக் கைப்பற்றி அந்த ஆட்டிலெறிகள் மூலம் புலிகள் நடத்திய ஷெல் தாக்குதல்தான் படையினர் தரப்பில் அதிக இழப்புக்களை தோற்றுவித்துள்ளது.

பலியான படையினரின் உடல்கள் பல சிதைந்த நிலையில்தான் எடுக்கப்பட்டுள்ளன என்பதால் ஷெல் தாக்குதல் உக்கிரமாக நடந்திருக்க வேண்டும்.

புலிகள் ஆட்டிலெறிகளைக் கொண்டு வரவோ கொண்டு செல்லவோ இல்லை. படையினரின் ஆட்டிலெறிப் பீரங்கித் தளத்தைக் கைப்பற்றி அங்கிருந்த ஆட்டிலெறிகளைப் பயன்படுத்தி உள்ளனர். முகாம் பகுதியில் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள பகுதிகளை நோக்கி புலிகள் ஷெல் தாக்குதல் தொடுத்துள்ளனர்.

படையினர் தரப்பில் எத்தனைபேர் பலியாகி உள்ளனர் என்ற விபரத்தையும் புலிகளால் உடனடியாக மதிப்பிட முடியவில்லை.

நேரடி மோதலில் பலியானோரைத்தவிர ஷெல் தாக்குதலில் பலியானோரும் அதிகமாக இருந்ததால்தான் மதிப்பிட இயலவில்லையோ என்று தோன்றுகிறது.

புலிகளால் வெளியிடப்பட்ட முதலாவது இரண்டாவது செய்திக் குறிப்புக்களில், படையினர் தரப்பில் 200க்கு மேற்பட்டோர் பலி என்று மட்டுமே சொல்லப்பட்டது.

தமது தரப்பில் 140 பேர் பலி என்றும் புலிகள் அறிவித்தனர். ஆயுதங்கள் அழிக்கப்பட்டது தவிர எதிர்த்தரப்பு உயிரிழப்புக்கள் போதாது என்பதுதான் பிரபாகரனின் உடனடிக் கவலை.

பின்னர் படையினர் அறிவித்த பிறகுதான் படையினரின் இழப்பு 265ஐ தாண்டி விட்டது என்பதை புலிகளே அறிந்துகொண்டனர்.

எனினும் பிரபாகரன் லேசில் திருப்தி அடைபவரல்ல. திட்டமிட்டபடி காரியம் முடியாதபோது பிரபாகரனிடம் பாராட்டைப் பெறுவது அவரது தளபதிகளால் இயலாத காரியம்.

எனினும் புலிகள் மிகையான தகவல்களை வெளியிடாமல் தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். "ஆட்டிலெறிப் பீரங்கிகளை கைப்பற்றிச் சென்றுவிட்டோம்" என்று புலிகள் கூறியிருந்தால் எல்லோரும் நம்பியிருப்பார்கள். 120 எம்.எம்.மோட்டாரைக் கைப்பற்றியதாக புலிகள் சொன்னதைக் கூட 120 எம்.எம். ஆட்டிலெறியைக் கைப்பற்றியதாக நினைத்து சில பத்திரிகைகள் செய்திவெளியிட்டிருந்தன.

ஆனால் புலிகள் தாம் கைப்பற்றிய ஆயுதங்களை மட்டுமே பட்டியலிட்டனர். அதேவேளை புலிகள் தரப்பு இழப்பை படையினர் தரப்பு மிகைப்படுத்தி இருந்தது.

பரந்தனில் தமது பாரிய படைக்கலங்கள் புலிகள் வசம் செல்லாததையிட்டு படையினர் திருப்தி கொள்ளலாம். பரந்தனில் தாக்குப் பிடித்துப் போரிட்ட படையினரின் திறனையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

நீண்ட நிலப்பரப்புக்களில் நிலை கொண்டுள்ள படையினரது ஆயுதங்களும், டாங்கிகளும் தமது பொறிக்குள் விழப் போகின்றன என்று புலிகள் பல மாதங்களுக்கு முன்னரே கூறியிருந்தனர். படையினர் நிலைகொண்டுள்ள நிலப்பரப்புக்கள் தமது பொறிக் கிடங்குகளாக மாறும் என்பதே புலிகளின் எண்ணமாகவே இருக்கிறது.

அவ்வாறு பரந்தனில் நிகழாமல் போனதுதான் படையினருக்கு இலாபம். ஆனால் புலிகள் தமக்கு வசதியான நேரத்தில், தமக்குச் சாதகமான தருணத்தில் தாமே திறந்த சண்டை முனை பரந்தன் களம். எனவே நிலவரம் புலிகளுக்குச் சாதகமாக இருந்த களத்தில் தமது தரப்பைவிட இருமடங்கு அதிகமான இழப்பு புலிகளுக்கு ஏற்பட்டதாக படைத்தரப்பு கணக்குச் சொன்னதுதான் பொருத்தமாக அமையவில்லை.

**வடக்கில் தாம் கைப்பற்றி நிலை கொண்டுள்ள பகுதிகள் புலிகளின் பொறிக் கிடங்குகளாக மாறுவதைத் தடுப்பதுதான் படையினருக்கு உள்ள சவால்.**

புலிகள் பெரும் தாக்குதலுக்கு ஒன்று குவிவதையாவது மோப்பம் பிடித்து விட்டால் முன்கூட்டியே படையினர் உஷாராகிவிடலாம்.

புலிகளின் அணிகளை அழித்தொழிப்பதற்காக தீட்டப்பட்ட வியூகங்களுக்குள் புலிகள் சிக்கவில்லை. புலிகளின் அணிகள் ஒன்று குவிந்து தாக்குதலுக்குத் தயாராவதையாவது அறிந்தாக வேண்டும் என்ற கட்டாயம் படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

பரந்தன் தாக்குதலுக்குப் பின்னர்தான் வேவு விமானங்கள் வன்னிப் பகுதியில் கூடுதலான கண்காணிப்பைச் செலுத்தத் தொடங்கின.

பெருந்திரளான புலிகள் எப்படி திடீரென்று ஒன்று குவிந்தனர் என்பதற்கு விடை தேடுவதோடு, மீண்டும் புலிகளின் அணிகள் ஒன்று குவிகிறதா என்பதை உளவறிவதும் படையினருக்கு முக்கியமாகிவிட்டது.

புலிகளின் ஆயுதக் கப்பலைத் தேடவே ஆளில்லாத வேவு விமானம் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கப்பலைத் தேட ஆளில்லாத விமானம் தேவையில்லை. புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய பகுதிகளில் வேவு செய்யத்தான் அதன் பயன்பாடு அவசியம்.

அப்படிப் பார்க்கும்போது வேவு விமானம் புலிகளின் நடமாட்டங்களை கண்காணிக்கச் சென்றபோதே காணாமல் போயிருக்கலாம் என்று சந்தேகிக்க இடமிருக்கிறது.

ஆனால் அடர்த்தியான காட்டுப் பகுதிகளுக்குள் வேவு விமானத்தின் கமராக் கண்கள் ஊடுருவிப்பார்ப்பது சுலபமானதல்ல.

வேவு விமானத்தை தாம் தாக்கியதாக புலிகள் உரிமை கோரியிருந்தால் உலகமே நம்பியிருக்கும். ஆனால் புலிகள் உரிமை கோரவில்லை என்பதும், இயந்திரக் கோளாறு என்று அவர்களும் செய்தி வெளியிட்டிருப்பதுவும் அரசாங்கத்திற்கு ஆறுதலான விடயம்.

## அதிரடி அப்பாத்துரை



**எ**திர்க்கட்சித் தலைவரைச் சந்திக்கப் போகும்போது ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து செல்லுகினம் கூட்டான கட்சிக்காரர். அயல்நாட்டு அமைச்சர் வந்தபோது மட்டும் கூட்டாகச் சந்திக்க மறுத்துப் போட்டினமாம். ஒற்றுமையின் இலட்சணம் அவரை வியக்கவைச்சுப்போட்டுதாம். உங்களுக்குள்ளேயே ஒரு 'அண்டர்ஸ்ராண்டிங்' இல்லையே எண்டு நாசூக்காகக் கேட்டுப்போட்டாராம் அயல்வீட்டுக்காரர். பார்த்தியளோ எங்கடை ஒற்றுமையைக் கண்டு உலகம் சிரிக்குது. இவை என்னடாவென்றால் ஆளும் தரப்பையும், எதிர்த்தரப்பையும் ஒன்று சேர்க்க அயராது உழைக்கினமாம். யாரிடம் சொல்லி அழுகிறது?

**வே**வு பார்க்கப் போன விமானமே காணாமல் போனால், வேறொரு வேவு விமானத்தை விட்டு தேடலாம். அந்த வேவு விமானமும் காணாமல் போனால் வேறெந்த வேவு விமானத்தை விட்டு காணாமல் போன வேவு விமானங்களில் முதலில் எந்த விமானத்தை தேடுறது? எண்ட குழப்பம் வருமோ வராதோ? எங்கடை லெவல் என்ன, இஸ்ரேல் காரனின் லெவல் என்ன? கார் பழுதானால் திருத்தி ஓடும் அறிவுவரைதான் எங்கள் ஊர் அனுபவம் வளர்ந்திருக்குது. நட்டைக் கிட்டை இறுக்கியோ லூசாக்கியோ சமாளிக்கலாம். சரி முடியாமல் போனாலும் தள்ளிக்கொண்டு போகலாம். ஆனால் பிளேன் விவகாரம் அப்படியோ. ஒரு பட்டனை இசகு பிசகாத் தொட்டாலும் கதை கந்தல்தான்.

**வ**வுனியாவில் தடுப்பு முகாம் விவகாரத்தில் மதகுரு ஒருவர் தொடர்ந்து களை களையாக சம்பாதிக்கிறாராம். அவரது சிபாரிசுக்கு கைமேல் பலன் கிடைப்பதால், கையிலே காசு வாயிலே பாஸ் எண்டு அறிந்த பலர் நம்பிக்கையாக எண்ணி எண்ணிக் கொடுக்கினம். மற்றொரு திடுக்கிடும் தகவல். பச்சைக் கட்சி அனுதாபிகளான அதிகாரிகள் சிலர் ரெண்டு எழுத்தாரான சிலருக்கு பெரிசாக வாங்கிக்கொண்டு பாஸ் கொடுத்திருக்கினமாம். தெரிந்தேதான் செய்கினம். அதிகாரத்தரப்பாருக்கு தலைநகரில் இடைஞ்சல் ஏற்படுவது அவைக்கும் நல்லதுதானே! எல்லா விதிகளும் ஏதுமில்லாதோரையே வாட்டும்.

**ரெ**ண்டு எழுத்தாரின் கட்டுப்பாட்டில் இருந்தபோது கைகட்டி பவ்வியமாக சேவை செய்த சிலர் இப்போது தலைகீழாக மாறியிருக்கினமாம். யாழில் உள்ள ஆஸ்பத்திரிகளில் இருக்கிற வைத்தியர்களே போதாது. அவர்களிலும் சிலர் ஆஸ்பத்திரிக்குச் செல்லாமல் தனிப்பட்ட உழைப்புக்கு போகினமாம். 'முதுகில் துப்பாக்கி முனை உரசிக்கொண்டிருந்தால்தான் சிலருக்கு கடமை உணர்ச்சி வேலை செய்யும்' எண்டு சனம் முணு முணுக்குதாம்.

**இ**ந்திய அமைதிப்படைகால அனுபவத்தை யாழ்ப்பாண சனம் இன்னும் மறக்கேல்லையாம். எல்லா இயக்கங்களும் யாழ் வருகினம் எண்டு கேள்விப்பட்டவுடன் பழைய நினைவுகள் சனத்தின் மனதில் ரிவைண்ட் ஆகியிருக்காம். பழைய படத்தை மீண்டும் திரையிட்டாலோ, அக்கால வில்லன்களை சனம் மத்தியில் நடமாட அனுமதிச்சாலோ சனம் பயந்துபோகும் எண்ட விஷயத்தை தமிழ்க் கட்சிகள் மறக்காமல் இருந்தால் சரிதான்.

**ரா**சிபலன் மற்றும் சில செண்டிமெண்ட்டுகளில் ரெண்டு எழுத்துத்தலைவருக்கும் நம்பிக்கை உண்டு. பரந்தன் தாக்குதல், வேவு விமான மறைவு போன்றவை இந்த வருச யோகம் தமக்குத்தான் என்பதற்கான அறிகுறிகளாக நினைக்கிறாராம். அதனால் சுறுசுறுப்பாகி இருக்கிறதாம் ரெண்டு எழுத்தார் வட்டாரம்.

**த**லைநகரில் நடைபெற்ற ஒரு சம்பவம். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த அந்த அரச உத்தியோகத்தருக்கு 63 வயது. மனுசன் நல்ல அனுபவசாலி. டிப்டொப் ஆசாமி ஒருவர் அவரை வழிமறித்தார். தன்னை சி.ஐ.டி. என்று சொல்லிக்கொண்டு அடையாள அட்டையைக் காட்டுமாறு கேட்டார். நம்மாளுக்கு கெட்ட கோபம் "வவுனியாவிலையும் கிளறிப்பார்க்கிறியள். பிறகு இங்கும் சோதனையோ?" எண்டு சினந்திருக்கிறார். "கோபப்பட வேண்டாம் ஐயா. புலிகள் டயறிக்குள் சயனைட் வைத்து அனுப்புகிறார்கள். உங்களுக்குத் தெரியாமல் உள்ளே வைத்துவிடுவார்கள். டயறியைக் காட்டுங்கோ." காட்டினார். பின்னர் புலிகளால் உள்ள பிரச்சினைகளைப் பற்றி டிப்டொப் ஆசாமி விளக்கினார்.

நம்மாளுக்கும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டுப்போச்சு. "மோதிரத்தின் பின்னாலும் சயனைட் பூசி அனுப்புகிறார்களாம். உங்கள் மோதிரத்தைக் காட்டுங்கோ." கழட்டிக்கொடுத்தார். ஆசாமி பார்த்துப்போட்டு "உங்கள் கைலேஞ்சியில் மோதிரத்தை சுற்றி பொக்கற்றில் வைத்துக் கொண்டு போங்கோ. போட்டுக்கொண்டு திரியுறது நல்லதில்லை!" எண்டு அவரது லேஞ்சியை வாங்கி தானே சுற்றிக் கொடுத்தார்.

நம்மாளும் நன்றி சொல்லிவிட்டு நடந்தார். சிறிதுதூரம் சென்றவருக்கு மனதில் ஏதோ உறுத்த லேஞ்சியை எடுத்து விரித்துப் பார்த்தார். உள்ளே இருந்தது மோதிரம் அல்ல, சோடா மூடி. டயறியை விரித்துப் பார்த்தார். உள்ளே நோட்டாக வைத்திருந்த பணம் மாயமாகி இருந்தது. "பணம் போனதோ, மோதிரம் போனதோ பெரிசில்லைத் தம்பி. என் கண்முன்பாக மாஜிக் வித்தை மாதிரி எப்படி எல்லாத்தையும் கொத்தினான்? அதுதான் என் 63 வருச வாழ்க்கையில் நம்பமுடியாத அதிசயமடா தம்பி" எண்டு சொல்லுறார் மனுசன். சத்தியமாக இது நடந்த கதை. நம்மாளுகள் ஜாக்கிரதை! நடந்த கதை சொன்னதால் இன்று கவிதை இல்லை.


படிப்பகம்

www.padippakam.com



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அற்புதன்-எழுதுவது

## மீட்கப்பட்ட கொமாண்டோக்களும் மிதிக்கப்பட்ட மனித உடல்களும்

### ஷெல் மழை

யாழ் பிரம்படி வீதிக்குள் பரா கொமாண்டோக்கள் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கி இருந்தபோது, யாழ் கோட்டையில் இருந்த இந்தியப் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தனர்.

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. அவ்விடத்தில் நின்ற பதின்மூன்று பேர் பலியானார்கள்.

யாழ் கோட்டையில் இருந்து யாழ்ப்பாண நகரை நோக்கி முன்னர் இலங்கை இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.



மாலதி (சகாயசீலி)

துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டிருக்க, காங்கேசன்துறையில் இருந்து இரண்டு டாங்கிகள் புறப்பட்டன.

பிரம்படி வீதி ரயில் பாதையை ஒட்டியதாக இருந்தமையால் புத்திசாலித்தனமான ஒரு பாதையைத் தெரிவு செய்தனர் இந்தியப் படையினர்.

காங்கேசன்துறையில் இருந்து பிரம்படி வீதிவரையான ரயில் தண்டவாளத்தை ஒட்டியதாக டாங்கிகளை ஓட்டிச் செல்வது என்பதுதான் திட்டம்.

அப்படிச் செல்வதால் கண்ணிவெடிகளிலும் மாட்டிக்கொள்ள வேண்டி ஏற்படாது. புலிகளும் அவ்வழியாக டாங்கிகள் வரும் என்று எதிர்பார்க்க மாட்டார்கள்.

இந்தியப் படையினர் போட்ட திட்டம் வெற்றியளித்தது. இந்தியப் படையினரின் இரண்டு டாங்கிகள் ரயில் தண்டவாளத்தை ஒட்டிய பாதை வழியாக

மண்ணெண்ணெய் எடுத்துவந்த பரா கொமாண்டோ வீரன் அந்தக் குடிசைமீது ஊற்றிக் கொளுத்தி விட்டான்.

உள்ளே கிடந்த பிணத்துடன் குடிசை பற்றி எரிந்தது.

மற்றொரு கொமாண்டோ வீரன் தம்மிடம் பணயக்கைதிகளாக இருந்த ஊரவர்கள் சிலரை ஒன்றாகச் சேர்த்து கயிற்றால் கட்ட ஆரம்பித்தான். அப்படிக் கட்டிவிட்டு டாங்கிகளின் சக்கரங்களால் ஏற்றிக் கொன்றுவிடலாம்.

அவனது செயலை பராகொமாண்டோ அதிகாரி ஒருவர் கண்டுவிட்டார். கைதிகளை டாங்கிக்குள் ஏறுமாறு சொல்லிவிட்டு, அவனது முயற்சியை தடுத்ததால் அப்பாவிகள் ஆறுபேர் உயிர்த்தப்பினார்கள்.

கிட்டத்தட்ட அரைமணிநேரத்துக்குள் பரா கொமாண்டோக்களை ஏற்றிக்கொண்டு டாங்கிகள் இரண்டும் வந்த பாதை வழியாக திரும்பிச் சென்றன.

103 பரா கொமாண்டோக்களில் எட்டுப் பேர் பலியாகி இருந்தனர். ஆறுபேர் காயம் அடைந்திருந்தனர்.

**பிரபாகரனை பிடிக்கத் தீட்டப்பட்ட திட்டம் தோல்வியில் முடிந்தது. ஆனால் அதற்காக கொடுக்கப்பட்ட விலை மிக மிக அதிகம்.**

சீக்கிய காலாட் படையினர் 29 பேரும், பரா கொமாண்டோக்கள் எட்டுப்பேருமாக 37 படையினரை இந்தியா இழந்திருந்தது.

டாங்கிகள் பிரம்படி ஒழுங்கைக்குள் வந்து திரும்பிய பாதைகளில் கண்ட காட்சிகள் நெஞ்சை உலுக்குவதாக அமைந்திருந்தன.

**டாங்கிகளின் சக்கரங்களால் உடல்கள் நசிக்கப்பட்டிருந்தன. அந்த உடல்கள்மீது ஏறித்தான் டாங்கிகள் சென்றிருக்கின்றன என்பது தெரிந்தது.**

**வீடுகளுக்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட பொதுமக்களின் உடல்கள் எப்படி வீதிக்கு வந்தன? தூக்கிக்கொண்டுவந்து டாங்கிகள் முன்பாக போடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.**

**நசிந்து உருத்தெரியாமல் சிதைந்து கிடந்த பிணங்களை ஒன்றாக ஒரு இடத்தில் குவித்துவைத்தனர் ஊர்மக்கள்.**

**கிட்டத்தட்ட 40 உடல்கள் அவ்வாறு குவிக்கப்பட்டன. அனைவருமே ஏதுமறியா**

முன்னேறத் தொடங்கின.

விமானத்தாக்குதல்களும் ஆரம்பமாகின. மூன்று பிரிகேட் படைப்பிரிவுகள் நடவடிக்கையில் இறக்கப்பட்டன.

விமானக் குண்டுவீச்சுகள், ஷெல் வீச்சுக்கள் மத்தியில் இந்தியப் படைகள் டாங்கிகள் சகிதமாக முன்னேறின.

வீதிகளில் கண்ணிவெடிகளைப் புலிகள் புதைத்துவைத்துவிட்டு காத்திருந்தனர்.

அதனை எதிர்பார்த்து இந்தியப் படை மாற்றுத் திட்டம் ஒன்றை வகுத்தது.

பரந்த வெளிகள், தோட்டக் காணிகள் ஊடாக டாங்கிகள் முன்னேறத் தொடங்கின.

### முதலாவது பெண்புலி

யாழ்ப்பாணம் கோப்பாயில் புலிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது.

கோப்பாயில் இந்தியப்படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்துவதில் பெண் புலிகளும் களத்தில் இறங்கினார்கள்.

**அம் மோதலில்தான் புலிகள் இயக்க பெண்கள் அணியில் முதலாவது பெண் புலி பலியானார்.**

**பலியான பெண் புலியின் பெயர் 2வது லெப்டினன்ட் மாலதி. (பேதுறு சகாயசீலி- ஆட்காட்டிவெளி மன்னார்)**

மாலதி பலியான போர்க்களம் தொடர்பாக அவருடன் இணைந்து சண்டையிட்ட




சென்ற பெண் புலிகள் மாலதியின் உடல் தாம் வைத்திருந்த இடத்தில் பூவரசமரத்தின் கீழ் இருப்பதைக் கண்டு தூக்கிவந்தனர். என்று நினைவு கூர்ந்துள்ளார்.

மாலதியின் உடலை யாழ்ப்பாணம் குருநகரில் மக்களின் அஞ்சலிக்காகப் புலிகள் வைத்திருந்தனர்.



இதற்கிடையே யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடமருகே பலியான சீக்கிய காலாட்படையினரின் உடல்களை ஏற்றி வந்து, யாழ் நகரில் ஆரிய குளம் சந்திக்கருகில் முன்பு பௌத்த விகாரை இருந்த பகுதியில் பார்வைக்கு வைத்திருந்தனர்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் அந்த உடல்களைக் கையளிக்க புலிகள் முன்வந்தனர். அவற்றைப் பொறுப்பேற்க இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் மறுத்துவிட்டனர்.

## போரில் பலியான புலிகளின் தளபதி

1987 அக்டோபர் பத்தாம் திகதிக்குப் பின்னர் இந்திய இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

குடிமனைகள்மீது இலங்கைப்படையினர் தாக்குதல்கள் நடத்துவதை இந்திய அரசு பலமுறை கண்டித்திருந்தது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் அப்பாவிக் குடிமக்கள் பலியாவது தொடர்பான கவலையை இந்திய மத்திய அரசு முன்னர் வெளிப்படுத்தி வந்தது.

அதே இந்திய அரசின் இராணுவத்தினர் அதே குடிமக்கள்மீதும், குடிமனைகள் நோக்கியும் ஷெல்தாக்குதல்களை சரமாரியாகத் தொடுத்துக் கொண்டிருந்தனர்.

யாழ் கோட்டையில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தபோது, பலாலி இராணுவத் தளத்தில் இருந்து பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது.

அந்த இராணுவ நடவடிக்கைக்கு 'ஒப்பரேஷன் பவான்' என்று பெயர் சூட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதுதான் 'ஒப்பரேஷன் பவான்' நடவடிக்கையின் இலக்கு.

அதேநேரம் பிரம்படி முற்றுகைக்குள் சிக்கிய பரா கொமாண்டோக்களை மீட்டெடுக்கவும் அதிரடியான திட்டம் ஒன்று தீட்டப்பட்டது.

பலாலி இராணுவத் தளத்தில் இருந்தும், யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்தும் இந்தியப் படையினரை முன்னேறவிடாது புலிகள் எதிர் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர்.

புலிகளின் எதிர்ப்பை முறியடித்து மெதுவாகத்தான் முன்னேற வேண்டியிருந்தது.

அவ்வாறான நகர்வு மூலமாக கொக்குவில் பகுதியை சென்றடைய வேண்டுமானால் சில நாட்கள் செல்லலாம். அதற்குள் பரா கொமாண்டோக்களின் கதை முடிந்துவிடும்.

எனவே பிரதான முனைகளால் முன்னேறும் முயற்சிகளைச் செய்து புலிகளின் அணிகளை அங்கே இழுத்து சண்டையிட்டபடியே, புலிகள் எதிர்பாராத வழியால் பிரம்படி வீதிக்குச் செல்லத் திட்டம் வகுக்கப்பட்டது.

### டாங்கிகள் வருகை

அக்டோபர் 13ம் திகதி அதிகாலை ஹெலிகொப்டர்கள் வானில் தோன்றி முன்னேறி பிரம்படி ஒழுங்கை வரை வந்து சேர்ந்தன.

பிரம்படியில் இருந்த பராகொமாண்டோக்களுக்கும் டாங்கிகள் முன்னேறிவரும் செய்தி சங்கேத மொழியில் அறிவிக்கப்பட்டது.

பரா கொமாண்டோக்கள் பிரம்படி வீதியையும் ரயில் பாதையையும் இணைக்கும் பகுதியை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

புலிகள் ஆங்காங்கே பதுங்கி இருந்து தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்த போதும், டாங்கிகள் திடீரென்று வரும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

இரண்டு டாங்கிகளில் ஒன்றை செலுத்தி வந்தவர் மேஜர் அணில் கவுல். முன்னால் வந்தது அவர் ஓட்டிவந்த டாங்கிதான்.

பிரம்படி வீதியை நோக்கி டாங்கியைத் திருப்பிய அணில் கவுல் அந்த இடத்தின் தரை அமைப்பை பார்வையிட தனது தலையை வெளியே நீட்டினார்.

ஒரு மறைவின் பின்னால் பதுங்கியிருந்து டாங்கியை கவனித்துக்கொண்டிருந்த புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் அணில் கவுலின் தலையைக் குறிவைத்துச் சுட்டார்.

சூடுபட்டதும் அணில் கவுல் தலையை உள்ளே இழுத்துக் கொண்டார். அவரது கண்ணுக்கு அருகே தோட்டா உராய்ந்து கொண்டு சென்று காயம் ஏற்படுத்தியிருந்தது.

டாங்கிகள் வந்து சேர்ந்ததும் அவற்றை சுற்றி பாதுகாப்பு அரணாக பராகொமாண்டோக்கள் சூழ்ந்துகொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினர்.

### ஊருக்குள் வேட்டை

டாங்கிகளில் பரா கொமாண்டோக்கள் ஏறிக்கொண்டிருந்தபோது, ஒரு கொமாண்டோ தீப்பந்தம் ஒன்றைக் கொளுத்தி அருகில் உள்ள வீடொன்றுக்குள் எறிந்தான்.

அந்தவீட்டுக்குள் தாயும் மகளும் இருந்தனர். மகளது கணவர் பரா கொமாண்டோக்களின் துப்பாக்கிப் பிரயோகத்தால் பலியாகி இருந்தார். அவரது உடல் அருகே இருந்து அழுதுகொண்டிருந்த மனைவி தீப்பந்தம் வந்து விழுந்ததைக் கண்டுவிட்டார். அவர்களது வீடு ஓலையால் வேயப்பட்டிருந்தது. தீப்பந்தத்தை அணைத்துவிட்டு தாயும், மகளும் வீட்டைவிட்டு பின்வழியால் ஓடித் தப்பினார்கள்.

தீப்பந்தம் வீசியும்கூட வீடு எரியவில்லை என்பதால், எங்கோ

அப்பாவிக் குடிமக்கள்.

### கண்டவர் அதிர்ந்தனர்

அக் காட்சியைக் கண்ட பத்திரிகையாளர்கள் நம்ப முடியாமல் திகைத்துப்போயினர். இவற்றை நேரில் கண்ட தமிழ் பத்திரிகையாளர் ஒருவரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

**"இந்தியப் படை இப்படி நடந்துகொள்ளும் என்று கனவிலும் நினைக்கவில்லை. பயந்து ஓடியவர்கள் எல்லாம் அவர்களுக்கு எதிரிகளாகத் தெரிந்திருக்கிறார்கள். ஆண், பெண், வயோதிபர், குழந்தைகள் என்ற பேதமே பாராமல் காந்தி பிறந்த நாட்டின் படைகள் சுட்டுத்தள்ளியிருக்கின்றன. அப்படியானால் இந்தியப் படையினர் எதற்காக இங்கே வந்தார்கள்?**

**இலங்கைப் படையினரை தடுத்து நிறுத்திவிட்டு தமிழ் மக்களைச் சுட்டுக் கொல்லத்தான் வந்தார்களா? எதிரிப்படைகளைக் கூட டாங்கிகளால் நசித்துக் கொல்லுவதை நாகரிக உலகம் ஏற்றுக்கொள்வதில்லை. அப்பாவி மக்களின் சடலங்கள்மீது டாங்கிகள் பயணம் செய்திருக்கின்றன?**

**முதலாவது களத்திலேயே அமைதிப் படை தனது நம்பகத்தன்மையை இழந்துவிட்டது.**

**இந்தியப்படை நம்மை எதுவும் செய்யாது என்ற நம்பிக்கையுடன் வீடுகளுக்குள் இருந்தவர்கள் வீதிகளில் பிணமாகக் கிடக்கக் காணப்பட்டனர்.**

**"இலங்கைத் தமிழர்களை இனிமேல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"** என்று தான் கண்டவற்றையும், உணர்ந்தவற்றையும் தனது பத்திரிகைக்கு எழுதிக் கொடுத்தார் அந்தப் பத்திரிகையாளர்.

ஆனால் அந்தப் பத்திரிகையின் ஆசிரியரோ அவர் எழுதிக் கொடுத்ததை பிரசுரிக்க மறுத்துவிட்டார்.

மறுத்தமைக்கு ஆசிரியர் சொன்ன காரணம்: "உமது செய்தியை வெளியிட்டால் நாளைக்குத்தான் எமது பத்திரிகை வெளியாகும் கடைசி நாளாக இருக்கும்!"

அப் பத்திரிகையாளர் எழுதியது பிரசுரமாகாமல் இருந்தாலும், அவரது கருத்தை உறுதிப்படுத்தும் விதமான சம்பவங்கள் விரைவாக நடந்தேறத் தொடங்கின.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையில் இந்தியப் படை அணிகள் பலாலித் தளத்தில் இருந்து பலமுனைகளில்



சந்தோசம் (உமைநேசன்)

பெண்புலி ஒருவர் பின்வருமாறு நினைவு கூறுகிறார்;

இரவு ஏழு மணி. தொலைத் தொடர்பு சாதனத்தில் அந்தச் செய்தி வந்தது.

சாவகச்சேரி புத்தூர் சந்தியில் இருந்து கைதடி நோக்கி இந்தியப் படையினர் வருகின்றனர் என்றும், அவர்களை முன்னேற விடாமல் தடுக்குமாறும் உத்தரவு வந்தது.

மகளிர் அணியின் ஒரு பிரிவு கோப்பாய் கைதடி வெளியில் கிறேசருக்கு அருகில் இருந்த காவலரணில் நின்று மோதலுக்கு தயாரானது.

இரவு ஒரு மணியளவில் பெரிய சத்தத்துடன் வாகனமொன்று காவலரணை நோக்கி வந்தது.

இராணுவ வாகனங்களில் வராமல் லொறிகளில் வந்தனர் இந்தியப் படையினர்.

இந்தியப் படையினர் என்று தெரிந்ததும் பெண் புலிகளின் துப்பாக்கிகள் சீறத் தொடங்கின. இந்தியப் படையினரும் லொறிகளில் இருந்து கீழே குதித்து பாதுகாப்பான நிலை எடுத்தபடி தாக்குதலை ஆரம்பித்தனர்.

பரந்த வெளியான பகுதி என்பதால் நிலவு வெளிச்சத்தில் பெண் புலிகளை இனம் கண்டு தாக்குவது இந்தியப் படையினருக்கு வசதியாக இருந்தது.

முன்னணியில் நின்று சண்டை செய்து கொண்டிருந்த மாலதி முன்னோக்கி ஓடி நகர முற்பட்டபோது இரண்டு கால்களிலும் துப்பாக்கிரவைகள் துளைத்தன.

விஜி என்னும் மற்றொரு பெண்புலி தரையோடு தரையாக நகர்ந்து மாலதியை இழுத்து வந்தார். மாலதியின் உயிர் பிரிந்திருந்தது.

சண்டை தொடர்ந்தது. இந்தியப் படையினரின் கை மேலோங்கியது.

முதல்நாள் சண்டை முடிந்து பார்த்தபோது எம்மில் நான்கு பேரைக் காணவில்லை.

மாலதி, சஞ்சி, கஸ்தூரி, கயா. இந்த நால்வரில் மாலதி இறந்தது தெரியும்? மிகுதி மூன்றுபேரின் கதி?

மறுநாள் மீண்டும் சண்டை. முன்னேறிச்

### தளபதி பலி

யாழ் கோப்பாய் பகுதியில் இந்தியப் படையினருடன் நடைபெற்ற மோதலில் புலிகளின் படையணி ஒன்றுக்கு தலைமை தாங்கிச் சென்றவர் சந்தோசம்.

திருமலை மாவட்ட புலிகளின் தளபதியான சந்தோசம் தலைமையில் சென்ற அணியினர் கடும் மோதலில் ஈடுபட்டனர்.

இந்தியப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்து கொண்டிருந்தது.

மோதலில் சந்தோசம் பலியானார். புலிகளுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பாக அது அமைந்தது.

லெப்டினன்ட் கேணல் சந்தோசம் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்தவர். யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவராக இருந்தவர். சொந்தப்பெயர் உமைநேசன்.

திருமலையில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்கள் பலவற்றில் பங்குகொண்டவர் சந்தோசம்.

இராணுவ நடவடிக்கைகளில் அனுபவம் வாய்ந்த தமது தளபதிகளில் ஒருவரைக் கோப்பாய் களத்தில் புலிகள் இழந்தனர்.

கோப்பாய் பகுதியைக் கைப்பற்றியதோடு, பலாலியில் இருந்து உரும்பிராய் நோக்கியும் இந்தியப் படையினர் முன்னேறினார்கள்.

உரும்பிராயில் ஆரம்பமானது மற்றொரு படுகளம். (தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அரசியலமைப்பு வேறு: அரசியல்தீர்வு வேறு!

அலசுவது– இராஜதந்திரி

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடவடிக்கைகள் இந்த ஆண்டில் உத்வேகம் பெறும் என்று சந்திரிகா அரசு கூறியுள்ளது.

அரசியல் தீர்வுப் பொதி பற்றி பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சளைக்காமல் பேசி வருகிறார். ஏனெனில் அத்தீர்வுப் பொதியின் பிரதான சிற்பி அவரே.

தீர்வுப்பொதிமட்டுமல்ல; இலங்கையின் அரசியலமைப்பு மாற்றம் குறித்தும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அண்மைக்காலங்களில்] குறிப்பிட்டு வருகிறார்.

இரு வருடங்களுக்கு முன்னர் சந்திரிகா அரசு பதவிக்கு வந்த போது, புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டு வருவதும் அந்த அரசின் வாக்குறுதிகளில் ஒன்றாக இருந்தது.

தற்போதுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை தமது தேர்தல் பிரசாரங்களின்போது ஜனாதிபதி சந்திரிகா தாறுமாறாக விமர்சித்தார். அத்துடன் தாம் பதவிக்கு வந்ததும் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைக் கலைப்பதே தமது முதல்பணியாக இருக்குமெனவும் அவர் கூறினார்.

**சந்திரிகா மட்டுமல்ல; பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை கடுமையாக விமர்சித்திருந்தார். ஒருகெட்ட ஆவியை விரட்டுவது போல் நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை ஒழித்துக்கட்ட**

இந்நிலையில் புதிய அரசியல் அமைப்புக்கான நகல் பிரதி விரைவில் வெளியிடப்பட்டு நாட்டு மக்களின் கருத்துக்கள் அதுபற்றி அறியப்படும் என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

சுதந்திர இலங்கையின் நான்காவது அரசியலமைப்பாகவே சந்திரிகா அரசின் உத்தேச அரசியலமைப்பு விளங்கவுள்ளது.

1948ம் ஆண்டு சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியலமைப்புத் தயாரிக்கப்பட்டது. 20 வருடங்களின் பின்னர் 1971ம் ஆண்டில் இரண்டாவது அரசியலமைப்பு வெளி வந்தது. ஏழுவருடங்களின் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகஞ்செய்து மூன்றாவது அரசியலமைப்பு மறைந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் கைவண்ணத்தில் உருவாகியிருந்தது.

கடந்த 17 வருடங்களுக்கும் மேலாக ஜே.ஆர்.தயாரித்த அரசியலமைப்பே அமுலில் இருந்து வருகின்றது. அத்துடன் பல திருத்தச் சட்டங்களும் அதில் இடம் பெற்றுள்ளன.

இலங்கையில் இதுவரை காலமும் வெளிவந்த அரசியலமைப்புச் சட்டங்கள் ஆட்சிமுறை, நிர்வாகமுறை பற்றிய விடயங்களையே பெரிதும் கொண்டிருந்தனவே தவிர, இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதத்தில் எந்தவொரு அரசியலமைப்பும் விளங்கவில்லை.

இனப்பிரச்சினைக்கான அணுகு முறைகள் ஒப்பந்தங்கள் மற்றும் தீர்வுத்திட்டங்கள் என்ற வகையிலேயே புறம்பாக அணுகப்பட்டன. ஆனால் அவைகூட தோல்வியில் முடிந்தன; அல்லது எதிர்பார்த்த பயனைத் தராதவையாகவே இருந்தன.



— ஜி.எல்.பீரிஸ் —

வந்ததும் கசக்கி எறியப்படலாம்.

ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அப்படி இருக்க முடியாது

அரசியலமைப்பை மாற்றுவதுபோல இனங்களுக்கிடையேயான அடிப்படை அம்சங்கள் குறித்த விடயங்களிலும் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படும்பட்சத்தில் இனப்பிரச்சினை என்பது தொடர்ந்து இருக்கவே செய்யும்.

கால மாற்றங்களுக்கு ஏற்றவகையிலும், புதிய சர்வதேச நிலவரங்களுக்கு ஏற்ற விதத்திலும் ஒருநாட்டின் அரசியலமைப்பை வேண்டுமானால் மாற்றியமைக்கலாம்.

ஆனால் அந்த அரசியலமைப்பு மாற்றத்துடன் ஓர் இனத்தின் அடிப்படைத் தனித்துவத்தை நிர்ணயிக்கும் விடயங்களையும் அடிக்கடி மாற்ற முடியாது.

பிரதேச பாரம்பரியம், கலாச்சாரம், மொழி, மதம், வாழ்க்கை முறை, விவசாய-பொருளாதார செயற்பாடுகள் என்று ஓர் இனம் எப்போதும் தனக்கென ஒரு தனித்துவத்தை எக்காலமும் கொண்டிருக்கின்றது.

இத்தனித்துவமான அம்சங்களுக்கு வேட்டு வைக்கப்படும் பட்சத்திலேயே பிரச்சினைகள் தோன்றுகின்றன.

இலங்கையிலும் நடந்தது அதுவே; நடந்து கொண்டிருப்பதுவும் அதுவேயாகும்.

தமிழர்களின் பிரதேசங்கள் திட்டமிட்ட முறையில் குடியேற்றங்களுக்குள்ளாகின. கல்வி, தொழில் வாய்ப்பு என்பனவற்றில் அவர்கள் புறந்தள்ளப்பட்டனர். அவர்களது மொழி உரிமை மறுக்கப்பட்டது. இதனால் அவர்களின் கலாச்சார பாரம் பரியங்களுக்கு நெருக்கடிகள் ஏற்பட்டன.

காலப்போக்கில் தமது சொந்த இடங்களில் கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழும் உரிமையைக்கூட அவர்கள் இழந்ததுடன் மந்தைக்கூட்டங்கள் போன்று அகதிகள் என்ற நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

சந்திரிகா அரசுக்கு நாட்டில் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவந்து புதிய ஆட்சிமுறையொன்றுக்கு வழியமைப்பது முக்கியமானதாக இருக்கலாம்.

ஆனால் அரசியலமைப்பையும், அதனோடு இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்குவது எவ்விதத்திலும் காத்திரமான இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழியமைக்காது என்றே கருதமுடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது ஆழமான வடுக்களைக் கொண்டதாக இருக்கின்றது.

**நாட்டில் ஐக்கியத்தோடு வாழ்வதா? அல்லது பிரிந்து போவதா? என்பதைத் தீர்மானிக்கவேண்டியவர்களாக வடக்கு-கிழக்கின் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.**

இலங்கை சுதந்திரமடைந்தது முதற்கொண்டு இன்றுவரை இடம் பெறும் சம்பவங்கள், அரசியல் மாற்றங்கள் என்பன இலங்கையில் தமிழினத்தை படிப்படியாக அழிப்பவையாகவே இருக்கின்றன.

கடந்த 13 வருடகாலத்தில் இலங்கையின் பொருளாதாரம், சுபீட்சம் யாவும் நாசமாகிப் போயுள்ளன என்று ஆட்சியாளர்கள் கூக்குரலிடுகின்றனர்.

ஆனால் கடந்த 13 வருடகால யுத்தம் இலங்கையின் இரண்டாவது தேசிய இனமான தமிழினத்தை ஏறத்தாள ஏப்பம் விட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள ஆட்சியாளர்கள் தவறி வருகின்றனர்.

**சந்திரிகா அரசுக்கு வேண்டுமானால் புதிய அரசியலமைப்புத் தேவைப்படலாம். ஆனால் இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கு வேண்டுவதெல்லாம் எவ்வித விஷமமோ, அல்லது நச்சுத்தன்மைகளோ அற்ற அரசியல் தீர்வாகவே இருக்கின்றது.**

இந்நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வு என்பதே இலங்கையின் சமாதான-சகவாழ்வுக்கு வழிவகுக்குமே தவிர; அரசியலமைப்புக்கல்ல.

பூகோள அரசியல், சமூக, பொருளாதார நிலவரங்களுக்கு ஏற்ற வகையில் அரசியலமைப்புகளை மாற்றுவதில் எவ்வித தவறுமில்லை.

அதேசமயம் சர்வதேச ரீதியாக இனங்களின் தனித்துவங்கள் எப்படிப் பேணப்படுகின்றன. ஒரே நாட்டில் இருக்கும் பல்வேறு இனங்கள் தமது சுயாட்சி-சுயநிர்ணய உரிமைகளை எவ்வாறு பெற்றுக் கொள்கின்றன என்பதற்கு உதாரணமாகப் பல்வேறு வியக்கத்தக்க அரசியல் மாற்றங்கள் நிகழ்வதையும் இலங்கையின் ஆட்சியாளர்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

எனவே அரசியலமைப்பை மாற்றுவதன் மூலமோ அல்லது அதிகாரப்பரவலாக்கம் என்ற விடயத்தை அதில் சேர்ப்பதன் மூலமோ இனப்பிரச்சினைக்கு எவ்வித தீர்வையும் கண்டு விடமுடியாது.

ஒரு நாட்டின் அரசியலமைப்பு என்பது, அந்நாட்டின் சகல இனங்களையும், அவற்றின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

ஆனால் இலங்கையில் காலத்துக்குக்காலம் அமுலுக்கு வந்த அரசியலமைப்புகள் இனரீதியான அம்சங்களைத் தகுந்த விதத்தில் அணுகியிருக்கவில்லை.

ஆகவே கொளுந்துவிட்டெரியும் இனப்பிரச்சினைக்கு ஆணித்தரமான முறையில் இறுதியும் முடிவுமான தீர்வு முதலில் காணப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களை முற்று முழுதாக, அவர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக அத்தீர்வு அமையவேண்டும்.

**இவையாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வின் முக்கியத்துவத்தை பெரும்பான்மையினத்தவரான சிங்களவர்களும் தகுந்த விதத்தில் புரிந்து கொள்ள வேண்டும்.**

இதன் மூலமே ஒரு பரந்துபட்ட சமாதான-சகவாழ்வுக்கு அடித்தளமிட முடியும்.

அந்த அடித்தளத்தின் அடிப்படையிலேயே இலங்கையில் எந்தவொரு அரசியலமைப்பும் வெற்றி பெறமுடியும் எனக் கருதமுடியும்.

**வேண்டுமென்று பேராசிரியர் பீரிஸ் கூறியிருந்தார்.**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவியிலிருந்துகூட விலகி, புதிய அரசியலமைப்பை உருவாக்கும் விதத்திலேயே அவர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் இணைந்து கொண்டார்.

இருந்த போதிலும், எந்த ஆட்சி முறையை பொதுஜன ஐக்கிய முன்னணியினர் கடுமையாக விமர்சித்தார்களோ, அந்த ஆட்சி முறையிலேயே அவர்கள் தற்போது சுகம் காணுவதை அவதானிக்க முடிகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையிலுள்ள அம்சங்களே ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இன்று அரசியல்-இராணுவ அணுகுமுறைகள் குறித்து நினைத்த மாத்திரத்தில் முடிவுகளை எடுக்கும் வல்லமையைக் கொடுத்துள்ளன.

இதன் காரணமாகவே அந்த ஆட்சிமுறையை தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டதுபோல உடனடியாகவே நீக்காமல் தொடர்ந்து சந்திரிகா ஆட்சியாளர்கள் அனுசரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தயாரித்து வெளியிடவுள்ள உத்தேச அரசியலமைப்புத்திட்டம் எவ்விதத்தில் இருக்குமென்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

சந்திரிகா அரசு கொண்டுவரவுள்ள புதிய அரசியலமைப்பு, இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கியதாகவே இருக்குமென்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

**இந்நிலையில் புதிய அரசியலமைப்பு முக்கியமா? அல்லது இனப்பிரச்சினைக்கான தீர்வு முக்கியமா? என்ற கேள்விகளே எழுந்திருக்கக் காணப்படுகின்றன**

இன்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு சார்பாகக் கொண்டுவரும் புதிய அரசியலமைப்பு, நாளை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு

---

# எங்கே நிம்மதி?

**யாழ்ப்பாணத்திற்கு நேரில் விஜயம் செய்திருந்தார் 'இந்திய ருடே' சஞ்சிகை நிருபர் ஜி.சி. சேகர். அயல்நாட்டுப் பத்திரிகையாளர் ஒருவரின் பார்வையில் யாழ்ப்பாணமும். அங்குள்ள அரசியல் நிலவரமும் எப்படித் தெரிகின்றன. என்பதை இக்கட்டுரை புலப்படுத்துகிறது .**

பத்து வருடங்களாக யாழ்ப்பாணத்தி லிருந்து ரெகுலராக ஏற்றுமதியான ஒரே பொருள், தீவிரவாதமாகத்தானிருக்கும். குறிப்பாக, விடுதலைப்புலிகளின் கைவரிசை. இப்போது மக்களுக்கு உபயோகமான பொருள் ஒன்று கொழும்புக்கு ஏற்றுமதியாவது காலத்தின் கோலம். அது வெங்காயம்.

இலங்கை ராணுவம் புலிகளை யாழ்ப் பாணத்திலிருந்து விரட்டி அதைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து சரியாக ஒரு வருடம் கழித்து சகஜ நிலை திரும்பியிருப்பது போலத்தெரிகிறது. கடைகளில் போதுமான அளவு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கின்றன. உள்கட்டமைப்பு வசதிகள் சீரமைக்கப் படுகின்றன. ஆனாலும் பதற்றம் குறைந்த பாடில்லை.

யுத்த சமயத்தில் வீடுவாசலை விட்டுக் கிளம்பிய மக்களில் பெரும்பாலானோர் ஊர் திரும்பவில்லை. 1981ல் எட்டு லட்சமாக இருந்த மக்கள் தொகை இப்போது 4.21 லட்சமாக குறைந்திருக்கிறது. மூலைக்கு மூலை ராணுவ சோதனைச்சாவடிகள். அவை உள்ளூர் மக்களை சோதனை போடுகின்றன. இரவு நேர ஊரடங்கு உத்தரவு இன்னும் தளர்த்தப்படவில்லை. ராணுவத்தின் மீது மக்களின் சந்தேகம் இன்னும் அதிகரித்திருக்கிறது.

ராணுவத்தினர்-யாழ் பொதுமக்களுக்கு இடையே இணக்கத்தை உண்டு பண்ண படாதபாடு பட்டுவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா யாழ்ப்பாணத்திலும் வடக்கில் மற்ற மூன்று மாவட்டங்களான வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகியவற்றிலும் அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடக்கும் என்று அறிவித்தார். ஆனால் தமிழர் கட்சிகளின் பலத்த எதிர்ப்பினால் தேர்தலை மூன்று மாதம் ஒத்திவைக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். தேர்தல் நடக்க இருந்த இடங்கள்: யாழ்ப்பாணம் நகராட்சி, தீபகற்பத்தில் மூன்று நகராட்சிகள், யாழ்ப்பாணத்தில் 12ம், கிளிநொச்சியில் 3ம், வவுனியாவில் 4ம், மன்னாரில் 4ம் ஆக மொத்தம் 23 பிரதேச சபாக்கள்.

ஜனாதிபதிக்கு சித்து வேலை காட்ட இதை விட்டால் வேறு வழியில்லை. புலிகள் அல்லாத தமிழர் கட்சிகளை வைத்து தேர்தல் நடத்தி அதன்மூலம் புலிகளை ஓரங்கட்ட சந்திரிகா விரும்பும் அதே நேரத்தில் நாடாளமன்றத்தில் தனது அதிகாரப் பகிர்வு திட்டத்தைக் கொண்டுவர இதே கட்சிகளின் ஆதரவு அவருக்குத் தேவைப்படுகிறது. தேர்தல் நடத்த இது சரியான நேரமில்லை என்று இந்தக் கட்சிகள் அனைத்தும் சொன்னதும் தேர்தல் ஒத்திவைப்புக்கு அவர் இணங்கவேண்டியதாயிற்று.

யாழ் பகுதியில் நம்பகமான அமைதி மறுபடியும் நிலவ வேண்டும் என்பது முக்கியம். அந்த அமைதி, கொந்தளிப்பு நிலவும் யாழ் தீபகற்பத்திற்குள் மேலும் மக்களை ஈர்க்க வழி செய்ய வேண்டும் என்பதோடு யாழ்ப்பாணத்தை சீரமைக்கத் தேவைப்படும் வெளிநாட்டு உதவி கிடைப்பதற்கும் வழி செய்வதாக இருக்க வேண்டும்.

"யாழ்ப்பாணத்தை அதன் பழைய நிலைக்குக் கொண்டுவர இலங்கைக்கு ரூ.600 கோடி தேவை" என்று ஒப்புக்கொள்கிறார் ஒரு அரசு அதிகாரி. கடந்த மாதம்தான் சில நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் இலங்கைக்கு 900 மில்லியன் டாலர் (ரூ.3,300 கோடி) தர ஒப்புக்கொண்டன. யாழ்ப் பாணத்தில் அமைதி திரும்பினால் அதற்கு தரப்படும் உதவி தனி.

இங்கே உணவு இப்போது ஒரு பிரச்சனையே இல்லை. திரும்பி வரும் குடும்பங்களைக் குடி அமர்த்த நிர்வாக அதிகாரிகள் பரபரப்பாகச் செயல்பட்டாலும் கட்டுமானப் பணிகள் முழுமையாக நடைபெறவில்லை. இதுபோக அரசு, ஆயிரக்கணக்கான வீடுகளை மராமத்து செய்ய வேண்டும்; 1990 முதற்கொண்டே கணக்கிட்டு நஷ்டஈடு தரவும் வேண்டும்.

ஆனால் புலிகள் இல்லாத தமிழர் அதிகார மையம் உருவாக்குவது என்ற சந்திரிகாவின் காய்நகர்த்தலுக்குப் பலன் கிடைக்குமா? மக்கள் இப்போதும் புலிகளை ஆதரிக்கிறார்கள்.

"புலிகள் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகளை சுமத்தலாம். ஆனால் அவர்களை ஒதுக்கித் தள்ளும் மனநிலை மக்களுக்கு இல்லை. எந்த ஒரு ஒப்பந்தமும் புலிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு நேர்ந்த கதிதான் அதற்கும்," என்கிறார் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர்.

சந்திரிகா ஆதரவு கட்சிகளும் உள்ளாட்சித் தேர்தல் அறிவிப்பால் துள்ளிக் குதிக்கவில்லை. "வாக்களிக்கும்படி ராணுவம் மக்களை நிர்பந்தித்தால் தேர்தலே கேலிக்கூத்தாகிவிடும். பாதிக்கும் மேற்பட்ட மக்கள் இன்னும் வீடு திரும்பாத நிலையில் தேர்தல் எப்படி நியாயமாக இருக்கும்?" என்று கேட்கிறார் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலர் டக்ளஸ் தேவானந்தா.



அதிகாரப் பரவலுக்கான திட்டங்களைப் புலிகள் அல்லாத தமிழர் கட்சிகள் ஆதரவுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்று சந்திரிகா நம்புகிறார். ஆனால் அதற்கு அரசியல் சாசன திருத்தம் கொண்டுவர வேண்டும். அதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு வேண்டிய 10 எம்.பி.க்களின் ஆதரவு சந்திரிகாவுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

புலிகளைப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வரமுடியும் என்று சந்திரிகாவுக்கு கொஞ்சமும் நம்பிக்கை இல்லை. இரண்டு தரப்புமே எதிரும் புதிருமான நிலை எடுத்திருக்கின்றன. புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று அரசு விரும்புகிறது. ஆனால் புலிகள் தலைவர் பிரபாகரனோ, ராணுவம் முதலில் யாழ்ப் பாணத்திலிருந்து வெளியேற வேண்டும் என்கிறார். இரண்டு நிபந்தனைகளுமே ஏற்றுக் கொள்ளப்படப்போவதில்லை.

யாழ்ப்பாணத்தில் ராணுவத்திற்கு கிடைத்த வெற்றியைக் கண்ட தீவிரப்போக்குள்ள சிங்களர்கள் இனப்பிரச்னைக்கு ராணுவத்தின் மூலமே தீர்வு காணும்படி கோருகிறார்கள். "அது மிகக் குறுகிய சிந்தனையோட்டம். அரசியல் தீர்வுதான் சரி. அதுதான் அமைதி திரும்ப வழி. பலத்தின் துணை கொண்டு தனியரசு நிறுவும் போக்கில் புலிகள் போகிறவரையில் அதை முறியடிக்க ராணுவ நடவடிக்கை தேவைப்படும்" என்று இந்தியா டுடேயிடம் கூறினார் கதிர்காமர்.

சந்திரிகாவும் விடுதலைப்புலிகளும் பல்வேறு வியூகங்களை முயற்சித்துப் பார்த்தாலும் கூட அமைதி என்னவோ கைநழுவித்தான் போகிறது. உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்திருந்தால் அரசின் மனோதிடம் கூடியிருக்கக்கூடும். ஆனால் அதன் மூலம் அமைதி திரும்பியிருக்குமா என்பது கேள்விக்குறிதான்.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி!

## பூலான்தேவி

விக்கிரம் மல்லாவின் துப்பாக்கி வெடித்த ஓசையால் என் காதுகள் இரண்டும் அடைத்து விட்டதைப்போல இருந்தது.

என்னைப் பிடித்துக் கொண்டிருந்த வன் தன் பிடியை விட்டபோது, நான் காதுகளைப் பொத்திக் கொண்டேன்.

கீழே மல்லாந்து சரிந்தவனைப் பார்த்தபோதுதான் விக்கிரம் மல்லா அவனைத்தான் சுட்டிருக்கிறான் என்று தெரிந்தது. அவன் நெஞ்சில் இருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்து கொண்டிருந்தது.

விக்கிரம்மல்லா அப்படிச் செய்வான் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்று விட்டார்கள்.

நான் கீழே விழுந்து கிடந்தவனையும் விக்கிரம் மல்லாவையும் மாறிமாறிப் பார்த்தேன். கீழே விழுந்தவன் நெஞ்சைப் பிடித்தபடி துடிதுடித்துக் கொண்டிருந்தான். கால்களை உதறி உதறி கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருந்தான்.

அப்போதுதான் பாபுசிங் குஜார் "டேய் மல்லா! என்று கத்தியபடியே ஓடிவந்துகொண்டிருந்தான்.

"என் பின்னால் வந்து நில்! வா!" என்றான் விக்கிரம் மல்லா. ஒரே பாய்ச்சல் ஓடி விக்கிரம் மல்லாவின் முதுகின் பின்னால் நின்றுகொண்டேன்.

பாபுசிங் குஜாரின் இடுப்பு பெல்டில் கைத்துப்பாக்கி தொங்கிக் கொண்டிருந்தது. அவன் முகம் கோபத்தில் துடித்துக் கொண்டிருந்தது.

"ஏனடா சுட்டாய்?" என்றான் மல்லாவை முறைத்தபடி.

"சாகேப்! கோபப்படாதீர்கள் சாகேப்! அவன் என்னுடன் திமிராக நடந்து கொண்டான்! நான் சுடாவிட்டால் அவன் என்னைக் கொன்றிருப்பான். அதுதான் நான் முந்திக் கொண்டேன்!" என்று பச்சைப் பொய் சொன்னான் விக்கிரம் மல்லா.

மல்லா சொன்னதை பாபுசிங் குஜார் நம்பவில்லை என்று அவன் முகத்தில் தெரிந்தது. கீழே விழுந்து கிடந்தவன் அருகில் மண்டியிட்டு அமர்ந்து மூச்சு வருகிறதா என்று பார்த்தான் பாபுசிங் குஜார்.

மறுநொடியே பாபுசிங் குஜாரின் முகத்தில் ஒரு குரூரம் தெரிந்தது. அவன் உதடுகள் ஏதோ சொல்லத் துடித்தன. பற்களை நறநறவென்று கடித்தபடி எழுந்தான்.

அவன் கோலத்தைப் பார்க்க எனக்கு பயமாக இருந்தது. அடுத்து என்னாகப் போகிறதோ என்று நெஞ்சுக்குள் படபட வென்று இருந்தது.

"இங்கு நீ.. நீ தலைவனா, அல்லது நான்.. நான் தலைவனா?" என்று உரத்துக் கத்துவது போலக் கேட்டான் பாபுசிங் குஜார்

"நீங்கள்தான் சாகேப்!" என்றான் பணிவான குரலில் மல்லா. எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. இந்த மல்லா ஏன் இவனிடம் பயந்து கொண்டு இருக்கிறான்? என்று நினைத்தேன்.

எனக்கு மட்டும் துப்பாக்கியால் சுடத் தெரிந்திருந்தால் மல்லாவின் துப்பாக்கியைப் பறித்து பாபுசிங் குஜாரை சுட்டுத் தள்ளியிருப்பேன்.

"என்னைக் கேட்காமல் ஏனடா நாயே இவனைச் சுட்டாய்?"

குஜார் என் மல்லாவை நாயே என்று சொன்னபோது எனக்குள் கோபம் நெருப்புமாதிரிப் பற்றிக் கொண்டது. பரட்டைத்தலை கரடி என் மல்லாவை நாய் என்று சொல்லுகிறானே.

"யாரடா நாய்? நீதானடா நாய்!" மல்லாவின் முதுகுக்குப் பின்னால் இருந்து திடீர் வேகத்தில் கத்திவிட்டேன்.

சட்டென்று திரும்பிய மல்லா "வாயை மூடு!" என்றான். பாபுசிங் குஜாருக்கு கோபம் உச்சியில் ஏறிவிட்டது.

"அவளைப் பிடியுங்கடா, மல்லா அந்த சிறுக்கியை என்னிடம் விட்டுவிடு!" என்றான் குஜார்.

குஜாரின் உத்தரவை நிறைவேற்ற அவனது ஆட்கள் இரண்டுபேர் காலெடுத்து வைத்தபோது, விக்கிரம் மல்லாவின் குரல் எழுந்தது.

"சாகவேண்டுமானால் வாருங்கள்" என்றான் மல்லா. அம்மாடி, என்ன ஒரு கம்பீரமான குரல்! அவர்கள் அப்படியே நின்று விட்டார்கள்.

பாபுசிங் குஜார் தனது நிதானத்தை இழந்துவிட்டான்.

"டேய்! கீழ்ச்சாதி நாயே! யாரையடா மிரட்டுகிறாய்?" என்று கத்திக்கொண்டே தன் இடுப்பு பெல்டில் இருந்த கைத்துப்பாக்கியை இழுத்தெடுத்தான்.

கைத்துப்பாக்கியை உயர்த்தி மல்லாவைக் குறிபார்க்க குஜாருக்கு அவகாசம் போதவில்லை.

மல்லா-விக்கிரம் மல்லா முந்திக் கொண்டான்.

கைத்துப்பாக்கியுடன் வெறி பிடித்த மிருகம்போல குஜார் நிமிர்ந்தபோது-

**தருவது 28 ரசிகன்**

**கடந்தவாரம்**

**கொள்ளைக் கோஷ்டித் தலைவன் பாபுசிங் குஜாரை ஏமாற்றிவிட்டு விக்கிரம் மல்லாவைச் சந்திக்கச் செல்கிறாள் பூலான்தேவி. ஆனால் பாபுசிங் குஜார் விழித்துக் கொள்கிறான். பூலான் மாட்டிக்கொள்கிறாள். அவளுக்குத் தண்டனையாக கொள்ளைக் கோஷ்டியினர் அவளை அனுபவிக்கலாம் என்று உத்தரவு போடுகிறான். விக்கிரம் மல்லா தலையிடுகிறான். கொள்ளைக் கோஷ்டியில் ஒருவனை விக்கிரம் மல்லா சுட்டுத் தள்ளுகிறான்.**

**இனி..**

மல்லாவின் துப்பாக்கி- குஜாரின் மார்பைக் குறிவைத்து வெடித்தது.

குஜார் ஒரு கோழை. பயந்தாங் கொள்ளி. "அய்யோ..." என்று கத்தியபடியே தன் கைத்துப்பாக்கியை ஒரு புறமாய் வீசிவிட்டு,



பூலான்

மார்பைப் பிடித்தபடி திரும்பி ஓடத் தொடங்கினான்.

விக்கிரம் மல்லா மீண்டும் குறிபார்த்தான். விசையைத் தட்டினான்.

இப்போது பின் பிடறியில் துப்பாக்கிக் குண்டு குபுக்கென்று துளைத்தது.

அப்படியே முன்புறமாய் சரிந்து விழுந்து மண்கவ்வினான் குஜார்.

எனக்கு இப்போது பயம் வரவில்லை. கண்முன்பாக கண்ட சாவுகளால் அதிர்ச்சி வரவில்லை. ஐயோ பாவம் என்று இரக்கம் வரவில்லை.

உள்ளமெல்லாம் குளிர்ந்தது போல இருந்தது. விக்கிரம் மல்லாவை கட்டிக் கொண்டு ஆடவேண்டும் போல இருந்தது. கைகளை விரித்துக்கொண்டு ஓடி ஓடிக் கூவ வேண்டும் போல இருந்தது.



விக்கிரம் மல்லாவின் ஆட்கள் துப்பாக்கிகளை உயர்த்திக் கொண்டு மல்லாவைச் சுற்றி நின்று கொண்டார்கள்.

கொள்ளைக் கோஷ்டியில் இருந்த முப்பது பேரில் 10 பேர்தான் மல்லாவின் விசுவாசிகள். மீதிப் பேர் எல்லாம் குஜாரின் ஆட்கள்.

பாபுசிங் குஜாரின் ஆட்கள் தங்கள் துப்பாக்கிகளோடு நாம் நின்ற இடத்தை நோக்கி நகரத் தொடங்கினார்கள்.

குஜாரின் ஆட்கள் எண்ணிக்கையில் அதிகம். அதனால் எனக்கு சற்றுப் பயமாக இருந்தது. மல்லவோ அவனது ஆட்களோ பயந்ததாகத் தெரியவில்லை. துப்பாக்கிகளை உயர்த்திக் கொண்டு தயாராக நின்றார்கள்.

பாபுசிங் குஜாரின் ஆட்கள் சட்டென்று மண்டியிட்டு அமர்ந்தார்கள். நிலத்தில் தமது ஆயுதங்களை வைத்தார்கள். மல்லாவை நோக்கி தலைவணங்கினார்கள்.

"விக்கிரம் மல்லாவுக்கு ஜே" என்று கத்தினார்கள் மல்லாவின் ஆட்கள். குஜாரின் ஆட்களும் "தலைவர் விக்கிரம் மல்லாவுக்கு ஜே" என்று கத்தியபோது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில், "விக்கிரம் மல்லாவுக்கு ஜே" என்று நானும் சேர்ந்து கத்திவிட்டேன்.

மல்லா திரும்பி என்னைப் பார்த்தான். முதன் முதலாக கனிவாகச் சிரித்தான். அந்தச் சிரிப்புக்குள் நான் என்னை மறந்து போனேன்.

முதன் முதலாக, என் வாழ்க்கையில் நான் நினைத்தது எல்லாம் நடக்கத் தொடங்கி இருக்கின்றன.

பாபுசிங் குஜார் என்ற நாய் செத்துத் தொலைந்துவிட்டது. என் மல்லா- விக்கிரம் மல்லா இந்தக் கூட்டத்தின் தலைவனாகி விட்டான்.

மல்லா என்னைப் பார்த்து சிரித்த சிரிப்பில் விருப்பம் தெரிந்துவிட்டது. அவனும் என்னை விரும்புகிறான்.

அய்யோ....அய்யோ....நான் எப்படிச் சொல்வேன். என் கால்கள் தரையில்தான் நிற்கின்றனவா?

என் வாழ்நாளில் நெஞ்சு நிறைய இப்படியொரு சந்தோஷத்தை நான் அனுபவித்ததே கிடையாது.

"என் துர்க்கையம்மா! உனக்கு நன்றியம்மா! இந்தச் சந்தோஷத்தை எனக்கு எந்நாளும் தா. என்னை துரத்திய நாய்களை நான் இனித் துரத்தப் போகிறேன்.! இனித்தான் பூலான் எழப்போகிறாள். உன் மகள் எழப்போகிறாள்" முணு முணுத்துக் கொண்டிருந்தேன்.

விக்கிரம்மல்லா தலைவனானதும் அவனுக்கு நெருக்கமான மாதுசிங், பாரத்சிங் இருவரும் லெப்டினண்ட்களாக நியமிக்கப் பட்டனர்.

மல்லா என்னை தனியாக அழைத்தான். எனக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. நன்றி சொல்ல வேண்டும். பாராட்டுச் சொல்ல வேண்டும். மனம் திறந்து நெகிழவேண்டும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டுதான் போனேன்.

மல்லாவின் முன் சென்றதும் எல்லாமும் மறந்து போய்விட்டது.

"நீ இங்கிருக்க விரும்பாவிட்டால் வீட்டுக்குச் செல்லலாம்! இங்கே இருக்க விரும்பினால் எங்களில் ஒருவராக இருந்து கொள்ளலாம். பயப்பிடாமல் உன் முடிவைச் சொல்லலாம்!"

என்றான் மல்லா. விட்டால் என்னை அலாக்காகத் தூக்கிக் கொண்டுபோய் வீட்டில் விட்டுவிடுவான் போலிருந்தது.

நான் அவசரமாகச் சொன்னேன்:

"இங்கேயே இருக்கிறேன்!"

"ஆபத்துகள் வரும்!"

"தெரியும். இங்கேயே இருக்கிறேன்!"

"கொள்ளையடிக்க வேண்டும். தேவைப் பட்டால் கொலையும் செய்ய வேண்டும்!"

"தெரியும். நான் உங்களோடுதான் இருக்கப்போகிறேன்!" உங்களோடு என்ற வார்த்தையை அழுத்திச் சொன்னேன். ஆனால் என் மல்லாவுக்கு மரமண்டை.

"எங்களோடு இருப்பவர்களில் நீ மட்டும் தான் பெண். அதனால் உனக்கு பாதுகாப்பு இருக்காது. பயமில்லையா?" என்றான். உங்களோடு என்பதை தன் ஆட்களையும் சேர்த்து அர்த்தப்படுத்திக் கொண்டான். மரமண்டை மரமண்டை.

சே....எப்படித்தான் இந்த மரமண்டைக்கு புரியவைக்கப் போகிறேன் என்று சலிப்பாக இருந்தது. "பயமில்லை, நீங்கள் தான் இருக்கிறீர்களே!" என்று சொல்லிக் கொண்டே, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மல்லாவை நேராகப் பார்த்தேன்.

"அப்படியானால் சரி, மாதுசிங்!" என்று மல்லா கூப்பிட்ட குரலுக்கு மாதுசிங் ஓடி வந்தான்.

"பிணங்களை என்ன செய்தாய்?"

"குழிவெட்டிப் புதைத்துவிட்டோம்!"

"உடுப்புக்கள்!"

"கழற்றி வைத்திருக்கிறேன்!"

"அதில் ஒன்றை இவளுக்குக் கொடு. இன்றுமுதல் இவள் எங்களில் ஒருத்தி" என்றான் மல்லா.

மாதுசிங் தன் பூனைக் கண்களால் என்னை வியப்பாகப் பார்த்தான். அடுத்ததாக விக்கிரம் மல்லா சொன்ன வார்த்தைகள்தான் என்னை தரையில் இருந்து தூக்கி வானத்தில் எறிந்தது.

"இன்று முதல் இவள் என் சொத்து. எனக்கு உரியவள். இதனை எல்லோருக்கும் தெரிவித்துவிடு" என்றான் மல்லா உறுதியான குரலில்.

மாதுசிங் சென்றபின்னர் விக்கிரம் மல்லா என்னிடம் சொன்னான்;

"பயப்பிடாதே! உனது பாதுகாப்புக்காகத் தான் அப்படிச் சொன்னேன்!"

சட்டென்று என் மகிழ்ச்சி வடிந்து போனது. ஆனாலும் நான் தளரவில்லை. மல்லாவை என்னுடையவன் ஆக்கியே தீருவது என்று முடிவு செய்து கொண்டேன்.

மாதுசிங் பூட்ஸ் சப்பாத்துக்களையும் சீருடையையும் கொண்டுவந்து தந்தான். சீருடை என் கைக்கு வந்ததும் நினைத்துக் கொண்டேன்: 'பூலான் இன்றோடு புதிய அவதாரம் எடுக்கப்போகிறாள்.'

**(தொடர்ந்து வரும்)**

## அடேங்கப்பா – சொன்னது நீதானா?

முதலில் மூச்சைப் பிடித்துக்கொண்டு இதனைப் படியுங்கள். இறுதியில் ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருக்கிறது.

"பிலிப்பைன்ஸ் நாட்டு சர்வாதிகாரியின் மனைவி இமெல்டா மார்கோஸ் வெளிப் படையாகவே ஆடம்பரச் செலவுகளைச் செய்கிறார். தான் வசிக்கும் அரண்மனையை விலைமதிக்க முடியாத பொருட்களால் அலங்கரிக்கிறார்.

அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று கணக்கில்லாத ஆடை, அணிகலன்களையும் மற்றப் பொருட்களையும் அள்ளிக்கொண்டு வருகிறார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் மக்களுக்கு ஒரு பிடிச்சோறு இல்லாதபோதும், பல ஆடம்பரமான மாளிகைகளையும், பிரமிப்பூட்டும் பொழுதுபோக்கு அரங்குகளையும், பல கோடி ரூபாய் செலவில் பெரும் கட்டிடங்களையும் எழுப்புகிறார்.

இதனால் அயல் நாட்டவரின் பார்வையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் மதிப்பு உயருமாம். சொந்த நாட்டுப் பிரஜைகளின் மதிப்பைப் பெறவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லைப் போலும்.

நாளுக்கு ஐந்து அல்லது ஆறு முறையாவது இமெல்டா தனது உடையை மாற்றிக் கொள்கிறார். ஒருமுறை அணிந்த உடையை மறுமுறை அணிவதில்லை.

இதைப்பற்றி அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவர் அவரிடம் கேட்டபோது: "நான் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள். ஒரு ஏழைப்பெண் இந்தளவுக்கு உயர்ந்து இப்படி டாம்பீக வாழ்க்கை வாழ்கிறாள் என்பதைப் பார்க்கும்போது, எனது தாய்நாட்டின் ஏழை மக்கள் பெருமைப்படுகிறார்கள் அவர்களுக்கும் உற்சாகம் ஏற்படும்" என்று கூறியுள்ளார் இமெல்டா. இந்தப் பேட்டி லைஃப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

இமெல்டா கனவுலகில் வாழ்ந்து தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்.



மக்களின் வயிற்றெரிச்சலை புரிந்து கொள்ள முடியாத இமெல்டாவுக்கு விழிப்புக்காலம் விரைவிலேயே வரும்.

எப்படியோ தனது கணவரின் செல்வாக்கு அசைக்க முடியாதது; அதனால் தன்னை யாரும் ஒன்றும் செய்யமுடியாது என்ற தைரியத்தில் இமெல்டா, நாட்டுப் பணத்தை தனது சொந்த விருப்பப்படி செலவு செய்வதை, பாவம் அவரால் கூட மறைக்க முடியவில்லை."

என்ன, படித்துவிட்டீர்களா? இதை எழுதியது யார் தெரியுமா? செல்வி ஜெயலலிதா! (யாரது மயங்கிவிழுந்தது?)

ஜெயலலிதா எழுதிய 'எண்ணங்கள் சில' என்ற புத்தகம் 1983ல் வெளியாகியது. அதில் ஒரு பகுதிதான் மேலே உள்ள தத்துவ முத்துக்கள்.

## ஐ.நாவில் ஒரு அண்ணன்

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளராக இருந்த பூட்ரோஸ் பூட்ரோஸ் காலியின் பதவி காலியானது தெரிந்த சங்கதி.

இப்போது ஐ.நா.செயலாளராக இருப்பவரை வாய் நிறைய அண்ணன் என்று கூப்பிடலாம்.

ஐ.நா சபையில் செயலாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள முதல் கருப்பரும் அண்ணன்தான். அதாவது அவரது பெயர் கோஃபி அண்ணன். வயது 58.

அண்ணனுக்கு மாதச் சம்பளம் இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்.

ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் சரளமாகப் பேசக்கூடிய அண்ணனுக்கு



தமிழும் தெரிந்திருந்தால் நமக்கெல்லாம் குஷியாக இருந்திருக்கும்.

## பெண் பொலீசின் நடனம்

பெண் பொலிஸ் அதிகாரியொருவர் செய்துள்ள காரியம் அமெரிக்க மக்களையே கொஞ்சம் ஆச்சரியப்படவைத்துவிட்டது.



அப்படி என்ன செய்தார் என்கிறீர்களா? பெரியதாக ஒன்றும் இல்லை, இரவு விடுதிகளில் துணிகளை நழுவவிட்டபடி காபரே டான்ஸ் ஆடினாளாம்.

கடந்த பலவருட காலமாக பகுதி நேரத் தொழிலாக காபரே ஆடிச் சம்பாதித்திருக்கிறாள். சமீபத்தில்தான் உயரதிகாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டாள்.

அவளது பெயர்: டெப்ரா பின்ச். அமெரிக்காவின் புளொரிடா மாநிலத்தில் பொலிஸ் சார்ஜன்டாக பணியாற்றி வந்தாள்.

காலை ஒன்பது மணி முதல் மாலை ஐந்து மணிவரை டெப்ரா சீருடையுடன் மிடுக்காகக் காணப்படுவாள். டெப்ரா என்றாலே குற்றவாளிகளுக்கு கிடு நடுக்கம். புரட்டி எடுத்துவிடுவாளாம்.

பொலிஸ் சீருடைக்கு விடை கொடுத்த பின்னர் 'பன்னிஃ பீச்சிளம்' என்ற விடுதிக்குச் சென்றுவிடுவார். கொஞ்சம் கொஞ்சமாக தன் ஆடைகளை களைந்து ரசிகர்களை போதையேற்றுவார். டெப்ராவின் ஆட்டத்துக்காக தனியான ரசிகர் பட்டாளமே இருக்கிறது.

சமீபத்தில்தான் டெப்ராவின் காபரே நடன விடயம் உயர் அதிகாரிகளுக்கு தெரிய வந்தது. அழைத்து விசாரித்தார்கள். டெப்ரா உண்மையை ஒப்புக்கொண்டாள். "உனது சேவை இனித் தேவை இல்லை" என்று சொல்லி வேலையைவிட்டு நீக்கி விட்டார்கள்.

வேலை போய்விட்டதே என்று டெப்ரா கவலைப்பட்டிருப்பாள் என்றா நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை.

"விடுதியில் கொஞ்சம், கொஞ்சமாக என் ஆடைகளை களைந்து, ரசிகர்களை




உற்சாகப்படுத்துவதில் உள்ள இன்பம், குற்றவாளிகளைக் கைது செய்யும்போதும் கிடைப்பதில்லை. வேலை போனால் போகட்டும்" என்கிறாள் டெப்ரா.

இத்தனைக்கும் இந்தக் கவர்ச்சிக் கன்னியின் வயது என்ன தெரியுமா? 41.



படிப்பகம்

www.padippakam.com



# குடும்பம் ஒரு கதம்பம்



➜ தம் முயற்சியில் சற்றும் மனம் தளராது 22 பிள்ளைகள் பெற்ற தம்பதியையும், அவர்களது பிள்ளைகளையும் கடந்தவாரம் பார்த்தோம். அது ஒரு உலக சாதனை!

இந்தவாரம் ஒரு இந்தியச் சாதனை. ஆந்திராவிலுள்ள ஸ்ரீஹரி கோட்டாவைச் சேர்ந்தவர் ஜாலையா. வயது 44. மனைவி பெயர் பார்வதம்மாள். வயது 40. ஜாலையா ரொம்ப ஜாலியான பேர்வழி. மனைவிமீது கொள்ளைப் பிரியம். இறுதிவரை தமது குடும்பம் குதூகலமாக இருக்க வேண்டும் என்பது ஜாலையாவின் உறுதியான கொள்கை. அரசியல்வாதிகள் போல ஜாலையா அடிக்கடி கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை. கொள்கையில் உறுதியாக இருந்தார். விளைவு: வீடு முழுக்க கொலுப்பொம்மைகள் மாதிரி 18 பிள்ளைகள்.

அதில் ஏழுபேர் ஆண்கள், பதினொருபேர் பெண்கள். இரட்டைப் பெண் குழந்தைகளும் அடக்கம்.

இத்தனை குழந்தைகளை ஏன் பெற்றுக் கொண்டீர்கள்? என்று பார்வதம்மாளிடம் கேட்டால், "இவர் கேட்டால்தானே, நான் சொல்ல விட்டால்தானே!" என்கிறார். ஜாலையா வெட்கப்பட்டுச் சிரிக்கிறார்.


படத்தில் 17 பிள்ளைகள்தான் இருக்கின்றனர். 18வது பிள்ளை எங்கே என்று கேட்கிறீர்களா? பார்வதம்மாளின் வயிற்றுக்குள் பத்திரமாக இருக்கிறது. ஜாலையா நீ ரொம்ப பெரிய ஆளய்யா!

# பந்து பெரிது

↑ இரண்டும் பிரமாண்டமான பந்துகள். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் அபுதாபி நகரில் உள்ள கடற்கரை மணலில் இந்த பிரமாண்டமான கால் பந்துகளை வைத்திருந்தனர். ஆசிய நாடுகளின் 11வது கால்பந்துக் கோப்பைக்கான போட்டியின் தொடக்க விழாவைச் சிறப்பிக்கவே இந்த ஏற்பாடு! கிரிக்கெட் விளையாட்டு செல்வாக்குப் பெறத் தொடங்கிவிட்டதால் கால்பந்து விளையாட்டின் பக்கம் ரசிகர்களைக் கவர புதுமைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

# வைரவிழாக் கார்



தீயிட்டது '26ல் திருத்தப்பட்டது '96ல்

➜ பழையதையெல்லாம் தேடியெடுத்துப் பாதுகாக்கும் ஆர்வம் வெளிநாடுகளில் வேகமாக வளர்ந்து வருகிறது. படத்தில் உள்ள கார் இருக்கிறதே அது ரொம்ப ரொம்பப் பழையது. 1920ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் கார்ப் பந்தயங்களில் தூள் கிளப்பிய கார் இது. இதன் செல்லப் பெயர் 'பப்ஸ்'.

1926 இல் கார் பந்தயம் ஒன்றில் தறிகெட்டு ஓடி ரசிகர்கள்மீதே மோதி விட்டது. பலர் பலியானார்கள். கோபம் கொண்ட ரசிகர்கள் இக்காரை தீயிட்டுக் கொளுத்தி விட்டார்கள்.

அப்படியே எரிந்த நிலையில் கிடந்த பப்ஸை 70 வருடங்களின் பின்னர் சமீபத்தில் எடுத்து திருத்தி அமைத்து புதுக்கார்போல பொலிவூட்டி விட்டார்கள்.

அக்காலத்தில் மணிக்கு 171.02 மைல் வேகத்தில் ஓடி சாதனை படைத்த இக் காரை இப்போது இங்கிலாந்திலுள்ள 'மியூசியம் ஒஃவ் ஸ்பீட்'டில் மக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர்.

தட்டையான நீண்ட வடிவமே காற்றைக் கிழித்து முன்னோக்கி ஊடுருவிப் பாயும் இதன் வேகத்துக்குக் காரணம். இக்காருக்குள் இருப்பது விமான எஞ்சின். எரிபொருளும் விமானத்திற்கு பாவிப்பதுதான். இதன் உடல் அலுமினியத்தால் செய்யப்பட்டது. 'ஓல்ட் இஸ் கோல்ட்'. பழையதே ஆனாலும் தங்கம் தங்கம்தான்.




# தகவல் பெட்டி

## தரையைத் தொடும் வான் பறவைகள்

➜ விமானங்கள் விழுவது சாதாரண சம்பவமாகிக்கொண்டிருக்கிறது. இயந்திரப் பறவைகள் அடிக்கடி குப்புறவிழுந்து தரையை முத்தமிடத் தொடங்கிவிட்டன. பிலிப்பைன்ஸ் விமானம் ஒன்று நடுவானில் திடீரென்று அடம்பிடிக்கத் தொடங்கியது. இனிப் பறக்க மாட்டேன், என்னை இறக்கிவிடு அல்லது நீங்கள் எல்லோரும் இறந்துபோவீர்கள் என்பது போல சிணுங்கத் தொடங்கியது. விமான ஓட்டி புத்திசாலியாக இருந்தமையால் பக்குவமாகத் தரை இறக்கிவிட்டார். மெத்தென்ற பச்சைப் புல்வெளியில் பதட்டமில்லாத இறக்கம். அதனால் பயணிகள் உயிர்தப்பினார்கள்.

சற்றுப் பிசகி இருந்தாலும் விமானம் தெருவில் விழுந்து நொறுங்கியிருக்கும். இப்போது பாருங்கள் மூக்கை மட்டும்தான் தெருவுக்குள் நீட்டிக்கொண்டிருக்கிறது. வான் பறவை ஒன்று தரையில் ஓடும் வாகனங்களை நலம் விசாரிக்கிறதோ?



ஆபத்தான அலுமினியப் பறவைகள்



படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்

## நிரோஷா எங்கே?

நடிகை ராதிகாவின் சகோதரிதான் நடிகை நிரோஷா என்பது தெரிந்த சங்கதி. நடிகர் ராம்கியை காதலித்தார் நிரோஷா. காதல் இடை நடுவில் முறிந்து போனது. சில வருடங்கள் சென்று மீண்டும் ராம்கியும் நிரோஷாவும் தமது காதலைப் புதுப்பித்துக் கொண்டார்கள்.

நடிகை ராதிகாவும், வீட்டாரும் கண்டித்தும் கேட்கவில்லை நிரோஷா. ராம்கியை மலையாக நம்பியிருந்தார் நிரோஷா.

ராம்கியும் நிரோஷாவும் நெருங்கிப் பழகினார்கள். அதனால் ராதிகாவுக்கும் நிரோஷாவுக்கும் இடையே உறவு முறிந்தது.

வீட்டாரையும், ராதிகாவையும் பகைத்துக் கொண்டு ராம்கியுடன் சுற்றிய நிரோஷாவை பொட்டென்று கைவிட்டார் ராம்கி.

மனமுடைந்த நிரோஷா வீட்டாரின் முகத்தில் விழிக்க முடியாமல் கொழும்புக்கு புறப்பட்டு வந்துவிட்டார் என்று செய்தி வெளியாகியது. கொழும்பில் உள்ள பிரபல தொழிலதிபர் ஒருவருடன் தங்கியிருப்பதாக வீட்டார் நினைத்து இருந்தார்களாம். கொழும்புக்கு வந்த நிரோஷா தன்னைச் சந்திக்கவில்லை என்று அத் தொழிலதிபர் ராதிகா வீட்டாருக்கு தெரிவித்திருக்கிறாராம். அப்படியானால் நிரோஷா எங்கே போனார்? அப்செட்டாகி இருக்கின்றனர் ராதிகா வீட்டார்.

## நக்மாவின் உற்சாகம்

பிரபு-நக்மா நடித்து திரைக்கு வந்துள்ள படம் பெரியதம்பி. படம் வெளியான பின்னரும் படப்பிடிப்பில் நடந்த சங்கதிகள் வெளியாவது ஓயவில்லை.

படப்பிடிப்பில் பிரபுவுடன் நடித்துக் கொண்டிருந்தாராம் நக்மா. அப்போது ஸ்ருடியோவுக்குள் ஒரு கார் வந்து நின்றது. கறுப்புக் கண்ணாடிகள் போட்ட காரிலிருந்து ஒருவர் இறங்கி நக்மாவிடம் வந்து குசகுசுத்தாராம். படப்பிடிப்புக்கு 'குட்பை' சொல்லிவிட்டு காரில் ஏறிப் பறந்தார் நக்மா. காருக்குள் இருந்தவர் சரத்குமார். இறங்கிவந்தவர் அவரது உதவியாளர்.

மறுநாள் படு உற்சாகமாக வந்து படப்பிடிப்பில் கலந்து கொண்டாராம் நக்மா. உற்சாகத்திற்கு என்ன காரணம்?

## ஐந்து தேவா – இரண்டு ரகுமான்

பொங்கல் படங்களில் ஐந்து படங்களுக்கு இசையமைத்துள்ளார் தேவா. தீபாவளிக்கு வெளியான படங்களிலும் அதிக படங்களுக்கு இசையமைத்தவர் தேவாதான்.

பொங்கலுக்கு வெளியான பத்துப் படங்களில் ஏ.ஆர்.ரகுமான் இசையில் இரண்டு படங்கள் வெளியாகியுள்ளன. ஒரே நேரத்தில் ரகுமான் இசையில் இரண்டு படங்கள் வெளியாவது இதுதான் முதல் முறை. மணிரத்னத்தின் 'இருவர்', பிரபுதேவா, அரவிந்தசாமி கஜோல் நடித்துள்ள 'மின்சாரக் கனவு' ஆகிய படங்கள் ரகுமான் இசையில் வெளிவந்துள்ளன.

மணிரத்னத்தின் 'இருவர்' படத்தில் ஐஸ்வர்யாவின் தாராளம் கண்டு தணிக்கைக் குழுவினர் மிரண்டுவிட்டனர். எக்கச்சக்கமான இடங்களில் ஐஸ்வர்யாவை கத்தரியால் பதம் பார்த்துவிட்டனர். விடுவாரா மணிரத்னம், மறு பரிசிலனைக்காக வாதாடி பல அரிய காட்சிகளை மீட்டெடுத்து விட்டார்.

* 'ராஜகுமாரனு'க்குப் பின்னர் பிரபு நடி... புரடக்ஷன்ஸ், முதன் முறையாக மலை... மோகன்லால் கதாநாயகனாக நடிக்க...
* கே. பாலு தயாரிக்க, சி. ரங்கநாதன் இயக்கு... யாக முதலில் ரக்ஷனா நடிப்பதாக இருந்த...
* கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் ... நடிகர் வினோத்குமாரும் ('ஹீரோ' ப... நடிகர் மனோஜ் கே. ஜெயனும் ... கிசுகிசுக்கப்படுபவர்) நடிக்கின்றனர்.
* சுரேஷ் கிருஷ்ணா இயக்கும் 'ஆஹா' ப... நடிப்பது தெரிந்த செய்தி. இப்படத்தில்... என்பது இன்னொரு செய்தி.
* மனோபாலா இயக்கும் 'நந்தினி' பட... நடித்து வருகிறார் சுஹாசினி மணிர... பாடலைப் பாடுகிறார்.
* கே. விஸ்வநாத் இயக்கி எண்ப... கதாநாயகியாக நடித்தவர் மஞ்சு பார்... இவர் கலைப்புலி எஸ். தாணுவின் வ...
* விஜயசாந்தியைத் தொடர்ந்து தெலுங்... விட்டார். மலையாளத்தில் சுரேஷ் கோ... ரோஜா நடிக்கிறார்.
* அருண்குமார்-மந்த்ரா நடித்த 'ப்ரியம்... 'கோபுரதீபம்' படத்தைத் தயாரித்து வ... இவர் அருண்குமார் நடிக்கும் படமொ...
* தமிழில் பொங்கலுக்கு வெளியான ஏ.... பெயரிலும், மணிரத்னத்தின் 'இரு... மொழிமாற்றப்பட்டு வெளியாகவுள்ளன...
* மீண்டும் நடிப்பதற்காக அமெரிக்கா... தயாரிக்க, அவரது மகன், எபி நடி... கதாநாயகியாக அல்ல, கதாநாயக...



பார்த்திபன்-ஜோதிமீனா
படம்: வாய்மையே வெல்லும்

### முகப்பில்

ரூபஸ்ரீ / நிரோஷ...

பின்புறம் கலண்டரில் மாதுரி டிக்ஷித் பிரபுதேவா



## வருத்தம்

வி.ஐ.பி. படத்தில் பிரபுதேவா மட்டும்தான் முதலில் நடிப்பதாக இருந்தது. அவரது மார்க்கெட் சற்று ஆட்டம் கண்டதால்தான் இன்னொரு நாயகனாக அப்பாஸையும் போட்டார்கள். அதனால் பிரபு தேவாவுக்கு மெல்லிய வருத்தம்தான்.

ஆனாலும் படப்பிடிப்பில் பிரபுதேவாவும் அப்பாஸும் நெருங்கிய நண்பர்களாகி விட்டார்களாம். அவர்களோடு ஒட்டி உறவாடும் மற்றொருவர் ரம்பா.

## ரம்பாவுக்கு புதுப் பட்டம்

நடிகை ரம்பா எபிட்ஸ் விள... படத்தில் நடித்தாலும் நடித்தா... நடிகை என்று பட்டம் கட்டிவிட்ட...

அது மட்டுமல்ல, ரம்பாவின் ... புணர்ச்சியைக் கண்டு புல்லரித்து... புள்ளிகள் சிலருடன் ரம்பாவுக்கு தெ...

அந்தப் புள்ளிகளோடு அடிக்... ரம்பா. ஆட்சி மாறினால்தான் வ... சில்லறை நபர்களின் தெ...



தபு

## தபுவின் நம்பிக்கை

'காதல் தேசம்' படத்தின் மூலம் தமிழ்ப் பட ரசிகர்களின் இதயத்தை திருடியவர் தபு. மணிரத்னத்தின் 'இருவர்' படத்திலும் தபு நடித்துள்ளார்.

இந்திப் படவுலகில் நம்பர் வன் இடத்தைப் பிடிப்பதில்தான் கவனம் செலுத்துகிறார். அதற்காக தனது கால் அழகை 'பிளாஸ்டிக் சர்ஜரி' மூலம் மெருகூட்டியிருக்கிறார் தபு.

ஒவ்வொரு நடிகைகளும் தமது வெற்றிக்கு சில பிரத்தியேக அழகுகளை நம்பியிருக்கிறார்கள். தபு தனது கால் அழகை நம்பியிருக்கிறார்.

படவுலகில் முன்னேற வேண்டுமானால் சில ஹீரோக்களின் அல்லது இயக்குநர்களின் தயவு அவசியம். தபுவுக்கும் முன்னணிக் ஹீரோக்கள் சிலர் சிபாரிசு செய்கிறார்களாம்.

அது பற்றி தபு என்ன சொல்கிறார் தெரியுமா? "என்னுடன் நடிக்கும் ஹீரோக்களுடன் நான் சகஜமாகப் பழகுவது உண்மைதான். சில சமயங்களில் அந்தப் பழக்கம் சற்று அதிகமாகவே சென்றுவிடுவதும் உண்டு. ஆனாலும் ஒரு எல்லையுடன் தடை போட்டு விடுவேன். அந்த எல்லையை மீற இதுவரை யாரையும் அனுமதித்தது கிடையாது!" என்கிறார் தபு. தபு சொல்லும் எல்லை எதுவென்று யாரும் மண்டையைக் குடைய வேண்டாம்.



அப்பாஸ்-ஜீவா
படம்: மனசுக்குள் வரலாமா

## பிரபுவுக்குப் பிடித்த ஜோடி

சதைப்பிடிப்பான வாட்டசாட்டமான நடிகைகளுடன் நடிப்பதுதான் பிரபுவுக்குப் பிடிக்குமாம்.

குஷ்பு, நக்மா பட்டியலில் பிரபுவின் விருப்பத்தைக் கவர்ந்திருப்பவர் மந்த்ரா. குஷ்புவுக்குப் பின்னர் பிரபுவுக்கு பொருத்தமான ஜோடி அமையவில்லை. நக்மாவும் சரியாக வரவில்லை. பெரியதம்பி படப்பிடிப்பில் நக்மா காட்டிய பந்தாவும் பிரபுவுக்குப் பிடிக்கவில்லையாம்.

முத்தம் கொடுக்க மறுத்துவிட்டு பின்னர் நக்மா மன்னிப்புக் கேட்டாலும்கூட பிரபு அதை மறக்கவில்லையாம். அதனால்தான் 'தேடினேன் வந்தது' படத்தில் மந்த்ராவை சிபாரிசு செய்தாராம் பிரபு.

மந்த்ராவின் மந்திரம் பிரபுவை மயக்கினால், இந்த ஜோடி மேலும் பல படங்களில் தொடரலாம். மந்த்ராவின் மந்திரம் வேலை செய்கிறதா என்று பார்க்கலாம்.

## புதிய படம் 'வாலி'

காதல் நாயகனாகவே நடிப்பதில் அஜித்குமாருக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டதாம்.

அதனால் புதிய படமொன்றில் மாறுபட்ட பாத்திரத்தில் நடிக்கப்போகிறார்.

புதுமுக இயக்குநர் ஒருவர் இயக்கப் போகும் அப்படத்திற்கு 'வாலி' என்று பெயர் சூட்டியுள்ளனர். அஜித்குமார் முதன்முதலாக இரட்டை வேடத்தில் நடிக்கப்போகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

...க்கும் தமிழ்ப்படமொன்றை இயக்கவிருக்கும் சிவாஜி ...யாளப் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது. இதில் ...ள்ளார்.

...ம் 'ஆஹா என்ன பொருத்தம்' படத்தில் ராம்கிக்கு ஜோடி ...து. பின்னர் சங்கவியைக் கதாநாயகியாக்கி விட்டார்கள்.

# மினி சினி

...'கூட்டாளி' படத்தில் தெலுங்கு ...டத்தில் நடித்தவர்), மலையாள ...(தற்போது ஊர்வசியுடன்

...த்தில் ரகுவரன், பானுப்பிரியா ...றக்கிய வேடமொன்றில் குஷ்பு நடிக்கவிருக்கிறார்

...தில் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்திற்கு ஜோடியாக ...ம். இவர் இந்தப் படத்தில் சொந்தக் குரலில் ஒரு

...ளில் வெளிவந்த 'சங்கராபரணம்' படத்தில் ... நீண்டகாலம் படவுலகில் இருந்து ஒதுங்கியிருந்த ...பி. படத்தில் நடித்து வருகிறார்.

...லிருந்து ரோஜாவும் மலையாளப்பக்கம் சென்று ...ிக்கு ஜோடியாக 'த கிளையண்ட்' என்ற படத்தில்

...' படத்தை அடுத்து ராமராஜன்- சுகன்யா நடிக்கும் ...ருகிறார் அசோக் சாம்ராஜ். இதைத் தொடர்ந்து ...ன்றைத் தயாரிக்கவுள்ளார்.

...பி.எம்மின் 'மின்சாரக் கனவு', 'மெருப்கலலு' என்ற ...ர்','இத்தரே' என்ற பெயரிலும் தெலுங்கில் ...

...ாவில் இருந்து வந்த அம்பிகா கே.டி.குஞ்சுமோன் ...க்கும் 'கோடீஸ்வரன்' படத்தில் நடிக்கவுள்ளார். ...னுக்குத் தாயாக நடிக்கவுள்ளார் அம்பிகா.

...ம்பரப் ...ர், எய்ட்ஸ் ...ார்கள். ... சமூகப் பொறுப் ...போன தமிழக அரசியல் ...நருக்கம் அதிகமாகியுள்ளதாம். ...கடி 'டிஸ்கஷன்' நடத்துகிறாராம் ...ம்பு. ...ல்லை, வருமானவரிப் பிரச்சனைகள் போன்றவற்றில் இருந்து தப்புவதற்காக நடிகைகள் பிரபல புள்ளிகளை கைக்குள் போட்டுக் கொள்வது வழக்கம்தான்.

# 96ல் வெளியான படங்கள்: செந்தில்—21—மணி—19

1996ம் ஆண்டு அதிக படங்களில் நடித்த நகைச்சுவை நடிகர் செந்தில். அவருக்கு அடுத்தபடியாக கவுண்டமணி 19 படங்களில் நடித்திருக்கிறார்.

நகைச்சுவை-குணச்சித்திரம் வில்லத்தனம் மூன்றிலும் 96ல் கொடிகட்டிப் பறந்தவர் மணிவண்ணன். கடந்த ஆண்டில் மட்டும் அவர் நடித்த படங்களின் எண்ணிக்கை 20.

கடந்த ஆண்டில் மொத்தம் 12 படங்களில் நடித்துள்ளார் வடிவேலு.

1996ல் ரஜினி ரசிகர்களுக்கு மட்டுமே ஏமாற்றம். ரஜினியின் ஒரு படம் கூட வரவில்லை.

கார்த்திக் நடித்த ஆறு படங்கள் கடந்த ஆண்டில் வெளியாகின. கடந்த ஆண்டில் முன்னணி ஹீரோக்களில் கார்த்திக் படங்கள்தான் எண்ணிக்கையில் முதலிடம் பெறுகிறது.

கமல்-இரண்டு படம், பிரபு-மூன்று படம், சத்யராஜ்-இரண்டுபடம், விஜயகாந்த்-மூன்று படம், சரத்குமார்-இரண்டு படம், அர்ஜுன்-இரண்டு படம், அஜித்குமார்-நாலு படம், பிரபுதேவா-இரண்டு படம், அரவிந்தசாமி-ஒரு படம், நெப்போலியன்-இரண்டு படம், பாண்டியராஜன்-ஐந்து படம்.

நடிகைகளில் சுகன்யா-ஆறு படம், குஷ்பு-நாலு படம், ரம்பா-நாலு படம், ரோஜா மூன்று படம், நக்மா-மீனா-ரேவதி, ஊர்வசி-வினிதா ஆகியோர் தலா இரண்டு படம், ரஞ்சிதா-மூன்று படம், சங்கீதா-ஐந்து படம், சங்கவி-மூன்று படம், தேவயாணி-மூன்று படம், சுவாதி-மூன்று படம்.

# நாயகன் சரண்ராஜ்

பெப்ரவரி மாதம் வெளியாகப் போகும் படமொன்றின் பெயர்: 'ராம்போ ராஜா ரிவால்வர் ராணி'.

ராஜாவாக சரண்ராஜ் நடிக்கிறார். ராணியாக மும்பை அழகி டாலி நடிக்கிறார்.

மசாலாப் பட ரசிகர்களுக்கு திகட்டாத விருந்தாகத் தரப்போகிறார்களாம். வில்லனாக நடித்து கதாநாயகனாகி மறுபடி வில்லனாக நடிக்கத் தொடங்கியவர் சரண்ராஜ். இப்போது இப்படத்தின் மூலம் மீண்டும் கதாநாயகனாக மாறியிருக்கிறார்.

இயக்கம்: ஏ.டி.ரகு. இசை: மகேந்திரகுமார். பாடல்கள்: மருதபரணி.

# 96ல் இசையமைத்தவர்கள்

1995ல் தேவாவின் இசையில் 25 படங்கள் வெளிவந்தன. 1996ல் தேவாவின் இசையில் வெளியான படங்களின் எண்ணிக்கை 23.

96ல் வெளியான படங்களில் தேவாவுக்கு அடுத்த நிலையில் இருக்கும் இசையமைப்பாளர் சிற்பி. எட்டுப்படங்களுக்கு இசை அமைத்திருந்தார்.

ஏ.ஆர்.ரகுமான்-5 படங்கள், வித்யாசாகர்-ஏழுபடங்கள், இளையராஜா-ஐந்து படங்கள், கார்த்திக் ராஜா-மூன்று படங்கள், ஆதித்யன்-மூன்று படங்கள்.

# அப்பாஸின் பட்டாஸ் பதில்கள்

அப்பாஸிடம் கேட்ட கேள்விகளுக்கு பட்டாசு போல அப்பாஸ் சொன்ன பட் பட் பதில்கள்.

**கே: உங்களுடைய குறிக்கோள்?**

**அப்பாஸ்:** பெரிதாக எதையாவது சாதிப்பது.

**கேள்வி: உங்களைக் கவர்வது?**

**அப்:** கவர்ச்சியான, அழகான, பகட்டான பெண்கள்.

**கே: பெண்கள் பின்னால் சுற்றுவதை விரும்புகிறீர்களா?**

**அப்:** ஓ.. கிடைக்க சிரமமாக இருக்கும் பெண்கள் பின்னால்..!

**கே: உங்கள் வரவால் அஜித்குமார் புகழ் மங்கிவிட்டதா?**

**அப்:** இதை நான் நம்பமாட்டேன். நான் யாருக்கும் போட்டி கிடையாது.

# நீள....மான படம்

96ல் வெளியான தமிழ்ப் படங்களில் மிக நீளமான படம் 'இந்தியன்'. அதன் நீளம் 4,987 மீட்டர். நீளம் குறைவான படம் 'கிரைம்'. அதன் நீளம் 2,003 மீட்டர்.



ராம்கி-குஷ்பு
படம்: கல்யாண வைபோகம்



ஐஸ்வர்யாராய
படம்: இருவர்



அஜித்குமார்
படம்: ரெட்டைஜடை வயசு



டிஸ்கோ சாந்தி

# ஹீராவிடம் பிடித்த குணம்? அஜித்குமார் விபரிக்கிறார்!

'காதல் கோட்டை' படத்தின் பின்னர் வெற்றிக் கோட்டையைப் பிடித்திருப்பவர் அஜித்குமார். இமேஜைப் பற்றிக் கவலைப்படாமல் அஜித் கொடுத்துள்ள பேட்டி இது.

**கே: உங்கள் வயது என்ன?**

**அஜித்:** 25. என் பிறந்த நாள் 1.5.1971. வயதை மறைக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை.

**கே: வயதுக்கான தோற்றம் தெரியவில்லையே?**

**அஜித்:** நன்றி.

**கே: உங்கள் குடும்பப் பின்னணி பற்றி கூறுங்களேன்?**

**அஜித்:** என் தந்தை கேரளாவில் உள்ள திருச்சூரைச் சேர்ந்தவர். என் அம்மா கல்கத்தாவைச் சேர்ந்தவர். இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள்.

என் அண்ணன் நியூயோர்க்கில் பணிபுரிகிறார். தம்பி மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் 'டாக்டரேட்' பண்ணிக் கொண்டிருக்கிறான். நான் பத்தாவதுடன் படிப்பை நிறுத்திவிட்டேன். எப்போது புத்தகத்தை திறந்தாலும் என்னுடைய எண்ணங்கள் வேறு பாதையில் செல்லும்.

**கே: எந்தப் பாதையில்?**

**அஜித்:** மோட்டார் பைக் ஓட்டுவது, துப்பாக்கி சுடுவது மற்றும் கிரிக்கெட் விளையாடுவது. மொடலிங் செய்தேன், மோட்டார் பைக் சவாரிகளில் கலந்து கொண்டேன்.

**கே: உங்கள் முதல் படம் எது?**

**அஜித்:** 'பிரேம புஸ்தகம்' என்னும் தெலுங்குப்படம் (சமீபத்தில் காதல் புத்தகம் என்ற பெயரில் தமிழில் வெளியாகிய படம்)

**கே: இளம் பெண்கள் மத்தியில் அரவிந்தசாமிக்கு இருந்த கிரேஸ் உங்களுக்கும் கிடைத்துள்ளதே?**

**அஜித்:** அதை எப்படி நான் சொல்ல முடியும், எனக்குப் பெண் ரசிகைகளிடமிருந்து நிறையக் கடிதங்களும், போன் கோல்களும் வருகின்றன. அதையெல்லாம் நான் பொருட்படுத்துவதில்லை. என் நடிப்பைப் பற்றி வரும் கடிதங்களை மட்டும் படிப்பேன்.

**கே: ஹீராவையும் உங்களையும் இணைத்து கிசு கிசுக்கள் வருகிறதே?**

**அஜித்:** ஹீராவைக் காதலிப்பது உண்மை. அதனைப் பற்றி வெளியில் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை.

**கே: ஹீராவின் விருப்பம் என்ன?**

**அஜித்:** எது தேவை என்பதை நன்றாக உணர்ந்திருப்பவர். மிகவும் சோஷியல் டைப். ஹீரா அவர் செய்யும் தவறுகளை மறைக்காமல் சொல்பவர். இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளோம். எங்களுடைய உறவு திருமணத்தில் முடிந்தால் மகிழ்ச்சி. இல்லையெனில் நல்ல நண்பர்களாக இருப்போம்.

**கே: ஐந்து ஆண்டுகளின் பின்னால் எப்படி இருக்க ஆசைப்படுகிறீர்கள்?**

**அஜித்:** பென்ஸ் கார் வாங்க ஆசை. ஆனால் நிகழ்காலத்தில் நிறைய நிறைய அனுபவிக்க ஆசை!

# 96ல் திருமணங்கள்

1996ல் திருமணம் செய்துகொண்ட நட்சத்திரங்களின் விபரம்.

டிஸ்கோ சாந்தி தெலுங்கு நடிகர் ஹரியை மணந்து கொண்டார். அதன் பின்னர் டிஸ்கோ சாந்தியின் கவர்ச்சி ஆட்டத்தை காணும் பாக்கியம் பறிபோய்விட்டது.

நடிகர் ரகுவரனும் நடிகை ரோகிணியும் மணந்துகொண்டனர்.

நடிகை மாதவி முன்னர் கமலுடன் நெருக்கமாக இருந்தவர். கடந்தாண்டு அமெரிக்கத் தொழில் அதிபர் ஒருவரை கைப்பிடித்துவிட்டார்.

நடிகை வைஷ்ணவி ஒளிப்பதிவாளர் அரவிந்தை திருமணம் செய்து கொண்டார்.

நடிகர் செல்வா முன்னாள் மந்திரி இந்திரகுமாரியின் மகளை மணந்தார்.

# வருகிறான் ரீல் மன்னன்

பாண்டியராஜன் 'கோபாலா கோபாலா' படத்தை இயக்குவதற்கு முன் 'ரீல் மன்னன்' என்ற படத்தை இயக்கத் திட்டமிட்டிருந்தார். சில காரணங்களால் 'ரீல் மன்னன்' படத்தைக் கிடப்பில் போட்டுவிட்டுக் 'கோபாலா கோபாலா' படத்தை இயக்கி வெளியிட்டார்.

இது நன்றாக ஓடவே, அடுத்து 'ரீல் மன்னன்' படப்பிடிப்பை ஆரம்பிக்க இருக்கிறார்.

# பகைவனில் ஜி.வி.

இயக்குநர் மணிரத்னத்தின் சகோதரரும், 'அக்னி நட்சத்திரம்', 'தளபதி' போன்ற படங்களின் தயாரிப்பாளருமான ஜி.வி., சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் 'பகைவன்' படத்தில் சிறிய வேடமொன்றில் நடிக்கிறார்.

இதற்கு முன்னர் ஜி.வி. 'ஈரமான ரோஜாவே', 'ராஜா கைய வச்சா' ஆகிய படங்களில் சிறிய வேடங்களில் நடித்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# முதுமையை வெல்ல

## இளமையான யோசனைகள்!

**பொ**துவாகவே முதுமையடைந்தவர்கள் மனக் கவலையாலும் வீட்டில் உள்ளோர் தங்களைக் கவனிப்பதேயில்லை என்ற தவறான எண்ணத்தை வளர்த்துக் கொள்வதாலும் தங்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்துவதில்லை. மேலும் வயதானாலே எல்லோர்க்கும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவதும் இயல்பாகும். எனவே முதுமை ஒரு சுமை அல்ல என்று கருதி, உடல் நலத்தைப் பேண வேண்டும். நோயற்ற வாழ்வு வாழ்வதற்குக் கீழ்க்கண்டவற்றைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம்:



* எதிர்பார்ப்புக்களை அதிகமாக்கிக் கொண்டு வீண் கவலைகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது.
* குடும்பத்தில் இளைய தலைமுறையினரிடம் பழகுகையில் தம் சொல்லாலும், செயலாலும் வீண் விவாதங்களும், குழப்பங்களும் வராமல் பார்த்துக் கொள்வதோடு அண்டை, அயலாரிடமும் அப்படியே நடந்துகொள்ளவேண்டும்.
* எப்பொழுதும் தங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகளில் மட்டுமே கலந்து கொண்டு மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்.
* நீங்கள் இளமையில் அனுபவித்ததையே நினைத்துக் கொண்டு இப்போதும் அதே போல் இருக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது. வாழ்க்கையில் முதுமையில் மகிழ்ச்சியாக இருக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன.
* உணவுப் பழக்க வழக்கத்தில் மிகவும் கவனமும், கட்டுப்பாடும் வேண்டும். பச்சைக்காய்கறிகள், பழங்கள், பால் முதலானவற்றைச் சீரான அளவில் உண்ணுதல் வேண்டும்.
* கூடுமானவரையில் சுறுசுறுப்பாகவும், ஓரளவு உடற்பயிற்சி முதலியன செய்து கொண்டும் இருத்தல் வேண்டும். வயது கூடியதும் எலும்புகள் வலிமைகுன்றி எளிதில் உடையவோ, நொருங்கவோ கூடும். எனவே கவனம் தேவை.
* இரவு உணவு உண்டபின், சிறிது தூரம் நடந்து பின்னர் உறங்க வேண்டும். அப்போது தான் நல்ல தூக்கம் வரும். அப்படித் தூங்கினால் தான் உடலுக்கு நலம் பயக்கும். வயதானவர்களுக்குத் தூக்கம் ஒரு சிறந்த மருந்து.
* எப்போதுமே மனதில் கவலையும், மனக் கிலேசமும், கோபமும் இருக்கக் கூடாது.
* சளி, தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் வந்தாலும் உடனடியாகத் தக்க நிவாரணம் பெறுதல் மிகவும் முக்கியமானதாகும்.
* மாதம் ஒரு முறை குடும்ப வைத்தியரைச் சென்று பார்த்து உடலைச் சோதித்துக் கொள்வது மிகவும் நலலது.
* வயதானவர்கள் இராமாயணம், மகாபாரதம், பைபிள், குர்ஆன், பகவத் கீதை மற்றும் நன்னெறி நூல்களைப் படிப்பதன் மூலம் பொழுதைப் போக்கி விடலாம். மூளைக்கு நல்விருந்தாகவும் அது அமையும்.

# மீன் பிரியர்கள் கவனிக்கவும்

**க**டல் உணவுகள் எனப்படும் மீன், இறால், நண்டு, கணவாய் போன்றவை உடல் நலத்திற்கு நன்மை அளிப்பவை. முக்கியமாக உயர் புரதமும், குறைவான கொழுப்பும் கொண்ட இவைகள் ஆரோக்கியத்திற்கு மிக உகந்தவை என உலகெங்கிலும் உள்ள மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்படுகின்றன. எனினும் 'கன்ஸ்யூமர் ரிப்போர்ட்' என்ற பத்திரிகையில் மீன் உணவு பற்றிவந்து கொண்டிருக்கின்ற பல செய்திகள் மகிழ்ச்சி அளிப்பனவாக இல்லை.

நகரங்களுக்கு அனுப்பப்படுகின்ற மீன்களில் பாதிக்கு மேல் பக்ரீரியா தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றன. இவற்றை விட கடலில் கலக்கப்படும் தொழிற்சாலைக் கழிவுகள், நச்சுப்பொருட்கள், இரசாயனப் பொருட்கள் போன்றவைகளும் நாம் உண்ணும் மீன்கள் மூலம் நம் உடலில் சேர்ந்து உடல் நலக் கேடுகளை உண்டாக்குகின்றன.

அத்தோடு இறந்த மனிதர்கள் மற்றும் விலங்குகளின் உடல் அழுகாமல் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் ஃபோர்மலின் என்னும் கொடிய இரசாயனப் பொருளும் மீன்கள் மீது தடவப்படுகின்றன. இதுவும் கடல் நீரில் கலக்கிய காரீயம், மேர்க்குரி போன்ற இரசாயனங்களும் குழந்தைகளுக்குப் பிறவிக் கோளாறுகளையும், பெரியவர்களுக்கு புற்றுநோய், மற்றும் நரம்பு தொடர்புடைய நோய்களையும் தோற்றுவிக்கின்றன, என்று இப்பத்திரிகை தெரிவிக்கிறது.

அப்படியென்றால் மீன் உண்பது முற்றிலும் பாதுகாப்பற்றதா? என்ற கேள்விக்கும் அந்தப் பத்திரிகையே பதிலையும் தந்திருக்கிறது.

மீன்கள் அழுகிச் சிதையாதவரை மேற்குறிப்பிட்ட பெரிய ஆபத்து எதுவுமில்லை. அதிலும் குறிப்பாக ஆடு, மாடு, பன்றி, கோழி போன்றவற்றினால் ஏற்படும் உடல் நலக் குறைபாடுகளைவிட மிகக்குறைவான அளவு பாதிப்பே மீன்களால் ஏற்படக் கூடும். நல்ல, புதிய மீன்களைக் கவனமுடன் தேர்ந்தெடுத்துச் சமைத்தால் இந்த ஆபத்தையும் வெகுவாகக் குறைத்து விடலாம்.



மீன் வாங்கும் போது மீன் கெட்டியாக இருப்பதுடன் கண்கள் பளிச்சென்றும், செவிகள் சிவந்த நிறமுடனும் இருக்கிறதா என்று பார்த்து வாங்குங்கள்.

வட்ட வட்ட வில்லைகளாக மீனை வெட்டும்போது, மீன் பிதுங்காமல் இருக்கிறதா என்று பாருங்கள். எப்போதும் ஒரே வகையான மீனையே வாங்காதீர்கள். மாற்றி மாற்றி வாங்குங்கள். உடல் சிதைவுறும் காலமும், நோய் எதிர்ப்புத் திறனும், புரதம், கொழுப்பு அளவும் மீன் வகைக்கு வகை மாறுபடுகின்றன.

கூடியவரை அன்று வாங்கிய மீனை அன்றே சமைத்துவிடுங்கள்; அல்லது வாங்கி வந்த மீனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிடுங்கள்.

மீனை தண்ணீரில் நன்கு தேய்த்துக் கழுவ வேண்டும்.

கடைசியாக, முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று: மீனைச் சமைக்கும்போது அது நன்கு அவியவோ அல்லது பொரியவோ விடுங்கள். நன்கு சமைக்கப்படுகின்றபோது மீனில் உள்ள பக்ரீரியாக்கள், நச்சுப்பொருட்கள் முற்றிலும் அழிந்துவிடும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இளமை இதோ இதோ

**தி**னமும் 30 முதல் 40 நிமிடங்கள் வீதம் வாரத்திற்கு 4 முதல் 5 நாட்கள் விரைவான நடைப்பயிற்சி செய்வதால் வரும் நன்மைகள்:



- இரத்த ஓட்டம் மற்றும் இரத்த அழுத்த நிலையை மேம்படுத்துகிறது.
- தசைகளுக்கு இயக்கத் திறனையும், வலிமையையும் தருகிறது.
- சுறுசுறுப்பை அதிகரிக்கச் செய்கிறது.
- உடலில்- எரிக்கும் ஆற்றலின் அளவை மிகுதிப் படுத்துகிறது.
- செயற்திறனை அதிகரிக்க உதவுறது.
- மன இறுக்கம், பரபரப்பு ஆகியவற்றைக் குறைக்க உதவுகின்றது.
- உங்கள் மன ஆற்றலைப் பெருக்க உதவுகிறது.
- இரத்த நாள இறுக்க நோய் உருவாவதை மட்டுப்படுத்துகின்றது.
- எலும்புகளுக்கு உரமூட்டி., எலும்பு மென்பாடு மட்டுப்படுத்த உதவுகின்றது.
- நீரிழிவு நோயைத் தவிர்க்க உதவுகின்றது.
- முதுமையைத் தள்ளிப் போடுகின்றது.
- தன்னம்பிக்கையை வளர்க்கின்றது.

# அழகு அழகு கால் அழகு

1. **தி**னமும் எளிய உடற்பயிற்சி கால்களுக்கு நல்லது. வாரம் மூன்று முறையாவது ஒரு மைல் தூரம் நடக்க வேண்டும். டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களும் மேற்கொள்ளலாம். இவற்றால் கால்களுக்குச் சீரான இரத்த ஓட்டம் கிடைக்கும்.
2. உயர்ந்த குதிகள் கொண்ட பாதணிகள் கூடாது. அப்படியே அவற்றை 'ஃபாஷன்' எனக் கருதி அணிய நேர்ந்தாலும், நாள் முழுவதும் அணிவதைத் தவிர்க்க வேண்டும். அவ்வப்போது கழற்றி வைத்து வெறும் காலுடன் நடக்க வேண்டும்.
3. மிகச் சூடான நீரில் கால்களைக் கழுவக் கூடாது. வெதுவெதுப்பான நீர் நல்லது. அதிக சூடு இரத்த நாளங்களைத் திடீரென்று விரிவாக்கி விரிசல் காண வைத்து விடும்.
4. நீண்ட நேரம் நிற்பதைத் தவிர்க்கவும். அதனால் இரத்தம் ஒரே இடத்தில் தேங்க நேரும். அடிக்கடி எழுந்து உலாவ வேண்டும். நிற்பதை விடக் காலாற நடப்பது நல்லது.
5. இறுக்கமான காலணிகள் கூடாது. அதே போல் உடற்பயிற்சி செய்யும்போது நெகிழ்ச்சியான காலாடைகளையே அணிய வேண்டும்.



6. அடிக்கடி கால்களுக்கு மசாஜ் செய்து கொள்ளலாம்.
7. உடல் எடையை ஒரே சீராக வைத்துக் கொள்வதால் கால்களுக்கு ஆரோக்கியம் கிடைக்கும்.

# எத்தகைய மணமகனைத் தேர்ந்தெடுப்பது?

'**தை** பிறந்தால் வழி பிறக்கும்!'

தையும் பிறந்துவிட்டது. சகோதரிகள் பலருக்கு வழியும் பிறந்துவிட்டது. கணவனின் கை பிடித்து மகிழ்ச்சி உலாவருகின்ற இளம் தம்பதிகளைப் பார்க்கும்போது நாமும் மகிழ்ந்து "பல்லாண்டு வாழ்க"வென அவர்களை வாழ்த்துகிறோம்.

பத்துவயதை எட்டியதும் எமது பெண் குழந்தைகளின் தோற்றத்தில் ஏற்படும் மாற்றங்கள் எமக்குப் பூரிப்பைத் தருகின்றன. வண்ணம் வண்ணமான ஆடைகளை வாங்கிக் கொடுத்து அவள் அழகுகண்டு ஆனந்தம் அடைகிறோம். அதே வேளை தாய் மனதில் இனந்தெரியாத வேதனையும் எழுகிறது. 'பண்பாடு வழுவாத குடும்பத்தில் வந்த எம்பெண், அப்பண்பாட்டை உடைத்தெறிந்து விடுவாளோ' என்ற ஏக்கமும் எழவே செய்யும். இத்தகைய ஏக்கம் தோன்றியதும் நம் மகளை எப்போதும் சந்தேகப்பார்வையுடன் பார்க்கத் தொடங்குகிறோம். அப்போது அவளுடைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் ஐயப்பாட்டையே வெளிப்படுத்தும். அவ்வாறான நிலை ஏற்படுமானால் தாய்-மகள் உறவில் விரிசல் தோன்ற ஆரம்பிக்கும்.

பெண்களுக்கு 13க்கும் 19க்கும் இடைப்பட்டகாலம் மிகமிக உன்னதமானது. இருப்பினும் அக்காலமே பல தொல்லைகளையும் கொண்டு வந்து சேர்த்து விடும் காலமாக மாறிவிடவும் கூடும். இதனை 'ரீனேஜ்' (TEENAGE) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்.

இக்காலத்தில் பெற்றாரின் அளவுடனான கண்டிப்பும் கட்டுப்பாடும் மிக மிக அவசியம். அதுவும் அளவுக்கு மீறியதாக அமைந்து விடலாகாது. பிள்ளைகளின் போக்கினை உன்னிப்பாகக் கவனித்து நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

தனக்கு வரப்போகும் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளும் இக்காலத்தில் தான் தோன்றும். வரம்பு மீறல்களும் தவறுகளும் ஏற்படவும் வாய்ப்புகளும் இதே பருவத்தில் தான் அதிகம். இந்த இளம் பருவத்தை எவ்வாறு கடக்க வேண்டும் என்று ஒவ்வொரு தாயும் தன் மகளுக்குப் புகட்ட வேண்டும்.



அவ்வாறு அறிவு புகட்டும் முறைகளை வகுத்துக் கூறும் நூல்களோ அறிவுரை வழங்கும் ஆய்வுகூடங்களோ கிடையாது. ஆகவே இதே பிரச்சனை காலத்தை வெற்றிகரமாகக் கடந்துவந்த வேறு பல தாய்மார்களின் அனுபவங்களைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

நமது பெண் குழந்தைகளுக்கான கணவனை நாமே தேர்ந்தெடுத்துக் கொடுக்கும் காலம் மெல்ல நழுவிச் சென்று கொண்டிருக்கிறது. அதற்கேற்றவாறு நாமும் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நாம் தேர்ந்தெடுக்கும் மணமகன் நம் பெண்ணுக்குப் பொருத்தமானவன்தான் என்று நாம் மட்டும் திருப்திப் பட்டுவிட்டால் போதாது. காலமெல்லாம் வாழ வேண்டிய நம் மகளின் உள்ளமும் உடலும் நாம் தேர்ந்தெடுக்கும் மணமகனுக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டியது அவசியம்.

பணக்கார வீட்டில் சம்பந்தம் வைத்துக் கொண்டால் பெரும் தொகை சீதனப்பணமும் பங்களா, கார் போன்ற வசதிகளும் கிடைக்கும் என்று கணக்குப்போடும் மணமகனிடம் நம் பெண்ணை ஒப்படைத்து விடலாகாது.

வெறும் புற அழகைக் கண்டு மயங்கி விழும் தன்மையுடையவனையும் தேர்ந்தெடுத்து விடலாகாது. பொதுவாக சம அந்தஸ்தில் உள்ளவர்களுடைய சம்பந்தம் தான் சரியாக இருப்பதை நடைமுறையில் காண்கிறோம்.

நாம் தேர்ந்தெடுக்கும் மணமகன் நம் பெண்ணைவிட ஓரளவு கல்வி அறிவில் சற்றுக் கூடியவனாக இருப்பது நல்லது.

திருமணம் நிச்சயமாவதற்கு முன்னர் இருவரையும்-ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கு ஏற்றாற்போல தனித்துப் பேசுவதற்குச் சந்தர்ப்பமளிப்பதில் பாதகமில்லை. ஒருவரையொருவர் புரிந்து கொண்டால் எதிர்காலத்தில் பிணக்குகள் அதிகம் உருவாக வழி ஏற்படாது.

நமது பெண்குழந்தையை எமக்கு ஒரு சுமை என்று கருதிவிடலாகாது. எப்படியாவது எவனுடைய கையிலாவது பிடித்துக் கொடுத்துவிட்டால் நிம்மதி என்ற எண்ணம் எம்மிடம் தோன்றலாகாது. 'எமது மகள் வாழையடி வாழையாக வாழ்ந்து எமது வம்சத்தை வளர்க்க வேண்டும்' என்ற கடமைப் பாட்டுடன் மணமகனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்!

# ஆண் பெண்ணாய் மாறினால்.....



**பி**றப்பால் ஆணாய்ப் பிறந்த ஒருவர் நாளடைவில் பெண்ணாய் மாறினால் அந்தப் பெண்ணால் முறைப்படி ஒரு ஆணைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா?

இங்கிலாந்து சட்டப்படி அது முடியாது.

'ஃபோர் யுவர் ஐஸ் ஒன்லி' என்ற ஜேம்ஸ் பொண்ட் படத்தில் ரோஜர் மூரின் காதலியாக நடித்தவர் கரோலின் காஸ்லி. இவர் உண்மையில் ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறியவர்.

இப்போது இவருக்கு வயது 40. இன்றுவரை இவர் திருமணம் செய்து கொள்ளவில்லை.

பிறப்பின்போது ஒருவர் என்ன பாலோ (SEX) அதைச் சிகிச்சை மூலம் மாற்ற முடியாது என்கிறது பிரிட்டிஷ் சட்டம். அதன்படியே கரோலினுக்கும் தீர்ப்புக் கூறப்பட்டுவிட்டது. 1980ம் ஆண்டிலேயே கரோலின் ஒரு பரிபூரண பெண்ணாக மாறி விட்டாலும் சட்டம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

பாவம் மனுஷி துடியாய்த் துடிக்கிறார்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BA

பெயர்:..............................

முகவரி:..............................

....................................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01-02-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**நளினி ராஜேஸ்வரன்**
மே/பா பி.ஏ. அருமைநாயகம்,
இலங்கை வங்கி, வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பரிசு பெற்றவர்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றிபெற்ற அதிர்ஷ்டசாலிகளில் ஒருவர் இவர்தான்.
திருமதி ஜோதிமலர் இராஜேந்திரன்
இல. 15, எல்லை வீதி,
மட்டக்களப்பு.




படிப்பகம்

www.padippakam.com

# தேன் கிண்ணம்

வழிந்தோடும்
விழி நீர் கூடி–உனது
வடிவத்தை
வரைந்து பார்க்கிறது!
–o–
உன் நினைவுப் பாதங்கள்
என்னை
வழி கூட்டிப் போகின்றன;
தொறுங்கிப் போன
வாழ்க்கைக் கூடாக
நடு நடுங்கியவாறு
நடந்து போகிறேன்!
–o–
உனது வாய் இடியோசையை
உரைத்து சிந்தது;
எனது இதயம்
கண்ணீர் வெள்ளத்தில்
மூழ்கித் தவித்தது!
–o–
ஆண்டாண்டு காலமாக
அழுது வழியும்–என்
கண்ணீரால்–உனது
பிரிவின் வெப்பத்தைக்
குளிர்விக்க முடியவில்லை!
–o–
மணலிலே பட்ட
பாதச் சுவடு போல
உனக்குப் பின்னால்–என்
மகிழ்ச்சிகள் யாவும்
மறைந்தொழிந்தன!
–o–
காதலின் காணிக்கையாக
உண்மையாகவே
உனதிதயம் உண்டியலிடப்பட்டிருந்தால்
என் வாழ்வு இப்படி
எரிந்தெரிந்து சாகும்
சாபத்தைப் பெற்றிருக்காது!
–o–
அடி மனதின் வேதனைகளை
அழித்துத் துடைத்து விட்டு
அழகான கீதமொன்றை
என் உள்ளத்தில் இனி
எவராலும் எழுத முடியாது!
–o–
வருடங்கள் பல நூறு
வாழ்ந்து விட்டதான
வெறுப்பை
உன் காதல் என் மீது
விதைத்தும் போயுள்ளது.
–o–

செல்வி பஹீமா ஜஹான்–
மெல்சிரிபுர.

## ஓர் ஆத்மாவின் விண்ணப்பம்

எந்தக் காலத்தின் சுமைகளை
உன் நெஞ்சில்
இறக்கி வைத்து
அமைதி கொள்வது?
*
ஊழிக் காலப்
பேய்க்காற்று
என்னை உலுக்கியெடுத்து
காவு கொள்வதாய்
தினக் கனவில்
நானும் என் கிராமமும்!
*
உயிர்களைப் பிழிந் தெடுக்கும்
ஓலங்கள் நிறைந்த
ஒரு சூழலில்
என்றைக்கு இரத்தம்
உறையும் என்ற
எதிர்பார்ப்பு மட்டும்
எச்சங்களாய்....!
*
உன் வாசல் கதவு
என் வருகைக்கான
எதிர்பார்த்திருத்தலாய்...
என் எண்ணத் தூதுகள்
திரும்பவும் திரும்பவும்
உன்னை நோக்கியே
வட்ட மடிக்கின்றன!
*
உன் முகாமடி வழிக் கதவும்
என் சிறைச் சாலை வழிக்கதவும்
ஒன்று தானா?
எந்த ஊருக்கு
என்னை வரச் சொன்னாய்?
தாழையடி மணற்திடலில்
ஒன்றாய் இருந்த இடத்திற்கா...?
*
என்னைக் கட்டிப் போட்ட
அந்த மின் கம்பத்தருகிலா...?
அல்லது
அமாவாசை இரவில்
நீயும் நானும் தழுவியிருந்த
ஜன்னலோர வேப்பங் கன்றுக்கருகிலா..?
*
அச்சச் சுமைகளோடு
பிரிந்து விட்டோமே கண்ணே!
இன்னுமொரு அமைதிப் பூங்கா
எம்பூமியில் அவதரித்து...
நானும் நீயும்
ஒன்றாய் வாழ்ந்து..
இதயம் கொள்ளா
எதிர் பார்ப்புகளுடனேயே
என் மூப்பு பற்றிய
விறைத் துதிர்ப்பு
*
இன்னும் நான்
நானாகவே இருக்கிறேன்;
என் தேசம் பற்றிய
விடுதலை யுணர்விலும்
உன் சோகங்கள்
பற்றிய துயரத்திலும்...
*
எப்போதாவது
சந்திப்போம்...!

மானுடபுத்ரன்.

## தாக்குதல்

இரவுகள் எப்போதும்
வெளிச்சமானவை!
ஒருவரை ஒருவர்
இலகுவாக
புரிய முடியும்!
***
பகலில்
முகங்களில்–முக
மூடிகளை சுமக்கும்
மனிதர்கள்
நான்...! நீ...! அவள்...!
***
இரவுகள் எப்போதும்
நிர்வாணமானவை:
வெட்கமற்று
எங்குமாகி
பற்றி படர்ந்து...!
***
கலகலப்பு
அழிந்து
இயந்திரமாய்
இயங்கும்–பகலை
மறப்போம்.
***
ஏழைகளுக்கு இரவு
இனிமையானது:
பசியின்றி
படுத்துறங்க
முடிவதால்
இரவின் அழகை
நேசிக்கிறேன்;
நட்சத்திர
முத்தக் கணம்
அதுதான்
***
ஆயினும்
இரவுகள்
கொடுமையானவை...!
***
இறப்புகள்
இரவில்தான் அதிகம்
மிக.. மிக.. மிக.....

சுபாவரன்–கண்டி.

## இதயம் இடம் மாறியவர்கள்.

இதயம் எவருக்கிருக்கிறது,
வெகு சிலரைத் தவிர...?
→❤⇨❤
கறுப்புக் கொள்கைகளுக்கு
குளிரூட்டும் அந்த
இயற்கை எந்திரத்தின் பெயர்,
இதயமாம்....!
→❤⇨❤
மானிடம் உயிரோடில்லை;
மனிதம் மரணித்து,
கல்லறையிலிருக்கிறது!
கறுப்பு இதய மனிதர்கள்,
வெள்ளை மனசுகள் பற்றி
விரிவுரையாற்றுகிறார்கள்....!
→❤⇨❤
மாடு நனைவது பற்றி,
ஒநாய்களுக்கேன்–
கண்ணீர் வடிப்பு?
கறுப்பிதயக் கனவான்கள்,
தங்கள் இருதயங்களை
சரிபார்த்துக் கொள்ளவேண்டும்!
இதயமும் குதமும்
இடம் மாறியிருக்கக்கூடும்!

–சம்மாந்துறை மஷூறா–

## கவலைப்படாதே கண்ணே!

மரணம்
உயிர்களுக்குத்தான்!
விடியல்
இரவுகளுக்குத்தான்!
•
நீ
கவலைப்படாதே
கண்ணே...!
•
இந்த உலகம்
ஒரு நாள் அமைதிபெறும்;
இந்த யுத்தமும்
ஒரு நாள்
ஓய்வெடுக்கும்!
•
வெள்ளைப் புறாக்களெல்லாம்
சலவை செய்து கொண்டு
சந்திக்கு வரும்!
•
சுதந்திரக் காற்றும்
சும்மா;
சுகமாக வீசும்...!
•
அழுகுரல்கள்,
ஆயுதக்குரல்கள் ஒழிந்து
அமைதி....
எங்கும் அமைதி நிலவும்!
•
ஆனால்,
•
இந்தக் காட்சியெல்லாம்
காண
நாம் உயிரோடு
இருப்போமா?
நீ கவலைப்படாதே
கண்ணே!
•

எஸ்.பி.எம்.அலியார்–
பொத்துவில்–01.

## விட்டில்!

உன்னைப் போன்ற
போலிகளின்
காதல் மனுக்கள்
ஏராளம் வந்துள்ளன
*–*
எப்படி
ஏற்றுக் கொள்வது?
நீ கொடுத்த
சோகத்தின் இலட்சணங்கள்
இதயம் முழுவதும்
வியாபித்திருக்கையில்,
ஏது இடம்
இன்னொருவனுக்கு?
*–*
எத்தனை
இதயத்தின் வாசல்கள்
திறந்து கொண்டதும்
உன்னால் தான்:
அறைந்து மூடப்பட்டதும்
உன்னால் தான்!
*–*
இதயக் கதவுகளைத்
தட்டும் கரங்களுக்கு
வலிக்கலாம்:
இடிகளையும்,
பிரளயங்களையும்
உன்னால் தாங்கிய
இந்த இதயத்திற்கு
வலிக்காது!
*–*
உன் காதலெனும்
விளக்கில் விழுந்து:
செத்தும் சாகாமலும்
நடைப் பிணமாய்
வாழும் இந்த
விட்டில்
இனி,
விளக்குகளை நாடாது!
*–*

அ.பர்ஹானா– கொழும்பு.

# யார் இவர்கள்?



↓ பெண்வேடமிட்டுள்ள இந்த நடிகருக்கு ரஜினியுடன் நடிக்கும் வாய்ப்பு கைகொட்டியும் வாய்க்கு எட்டவில்லை. யார் இவர்? கூர்ந்து பாருங்கள் முகத்தை.





↑ சிறு குழந்தையாகவும், பின்னர் இளைஞனாகவும் இரு தோற்றங்களில் இருப்பவர் யார் தெரிகிறதா? பம்மாத்துக்களில் கில்லாடியான இவரது பெயர் சமீபகாலத்தில் பிரபலமாகியது. இவர் பிறந்தது இலங்கையில். மாட்டிக் கொண்டது தமிழ்நாட்டில்.

# இந்த வாரம் உங்கள் பலன்

(26.01.1997 தொடக்கம் 01.02.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன், வியாழன், வெள்ளி. |
| மீனம் | - சனி, கேது. |
| கன்னி | - இராகு, செவ்வாய். |

★ சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- | வீண் முயற்சி, அந்நியர் பகை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- | மனக் கவலை, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| புதன்- | தொழில் பேறு, பெரியோர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- | இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், செல்வாக்கு நிலை. | பகல் | 12 | மணி |
| சனி- | வீண் தொல்லை, மனக் கவலை. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- | தொழில் மந்தம், மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- | பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| சனி- | காரியானுகூலம், பயனுள்ள செயல். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- | காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- | பொருள் வரவு, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- | தொழில் விருத்தி, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- | இனசன மகிழ்ச்சி, பெரியோர் நட்பு. | பகல் | 11 | மணி |
| சனி- | காரியத்தடை, பிரயாண மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- | வீண்குறை கேட்டல், அந்நியர் பகை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- | இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- | பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, செலவு மிகுதி. | பி.ப. | 4 | மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- | வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, பணக் கஷ்டம் நீங்கும். | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- | மன மகிழ்ச்சி, காரியசித்தி. | பகல் | 12 | மணி |
| சனி- | வெளியிடப் பயணம், மனக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | மனக்குறை நீங்கும், பயனுள்ள செயல். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. | 3 | மணி |
| புதன்- | தொழில் விருத்தி, கடன் தொல்லை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், பயனற்ற செயல். | பி.ப. | 4 | மணி |
| சனி- | காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, காரியத்தடை. | பி.ப. | 3 | மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன் - | புதிய முயற்சி, கடன்தொல்லை நீங்கும். | பகல் | 12 | மணி |
| வியாழன்- | பிரயாணக் கஷ்டம், தொழில் மந்தம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- | கௌரவம், செல்வாக்கு மிகுதி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- | உறவினர் தொல்லை, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- | வீண் முயற்சி, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, மனக்கிலேசம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- | இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 3 | மணி |
| சனி- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மனக் கிலேசம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | பிரயாணக் கஷ்டம், கடன் தொல்லை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- | முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- | மனக்கவலை, உறவினர் பகை. | மு.ப. | 9 | மணி |
| சனி- | காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 4 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- | பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- | காரியானுகூலம், பொருள் பேறு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், அந்நியர் சகவாசம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- | தொழில் விருத்தி, இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், தொழில் சிறப்பு. | காலை | 7 | மணி |
| சனி- | புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- | காரியானுகூலம், பொருள் பேறு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- | பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- | பெரியோர் பகை, வீண் தொல்லை. | பி.ப. | 1 | மணி |
| சனி- | முன்னேற்ற நிலை, பண வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் பகை, மனக் கவலை. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- | வீண்குறை கேட்டல், மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- | தொழில் மந்தம், வீண் பிரயாணம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, செல்வாக்கு நிலை. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- | தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7


படிப்பகம்





## நாய்க்குட்டி

சின்னச் சின்ன நாய்க்குட்டி;
செல்லமான நாய்க்குட்டி;
பட்டுப் போன்ற நாய்க்குட்டி;
பாசமுள்ள நாய்க்குட்டி!

வாலை ஆட்டும் நாய்க்குட்டி;
வம்பு செய்யும் நாய்க்குட்டி;
காவல் காக்கும் நாய்க்குட்டி;
காலைச் சுற்றும் நாய்க்குட்டி!

துணியைக் கடிச்சு இழுக்குது;
துரத்தி விட்டா முறைக்குது;
பந்தைக் காலால் உதைக்குது;
பாலை நக்கிக் குடிக்குது!

நாங்கள் விரும்பும் நாய்க்குட்டி;
நன்றியுள்ள நாய்க்குட்டி;
அப்பா தந்த நாய்க்குட்டி;
அழகான நாய்க்குட்டி!

-எஸ்.புகழேந்தி-

அறிவை வளர்த்திட வேண்டும்-மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்;
சிறியாரை மேம்படச் செய்தால்-பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

## வரதன் புகட்டிய பாடம்

ஓர் ஊரில் ஒரு சமயம் கடும் மழை பெய்தது. தொடர்ந்து பல நாட்கள் நீடித்த மழையினால் எங்கு பார்த்தாலும் மழை வெள்ளம்.

பல குடிசைகள் நீரில் மூழ்கின. கால் நடைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. பயிர்கள் அழிந்து நாசமாயின. மரங்கள் பல வேரோடு சாய்ந்தன.

மக்கள் பசியாலும், குளிரினாலும் வாடினார்கள். சின்னஞ்சிறு குழந்தைகள் பாலுக்காக அழுதார்கள்.

அவ்வூரில் இருந்த சில இளைஞர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஊர் ஊராகச் சென்று நிதி திரட்டினார்கள்.

இவ்வாறு நிதி திரட்டச் சென்றவர்களில் வரதன் என்ற இளைஞன், பொன்னம்பலம் என்ற செல்வந்தனிடம் செல்ல நேர்ந்தது. அவன் அந்தச் செல்வந்தனிடம் சென்று,

"ஐயா எங்கள் ஊரில் பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டு நாங்கள் நிதி திரட்டி வருகிறோம். தாங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாரி வழங்க வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டான்.

பொன்னம்பலமோ மகா கஞ்சன். அவனது வாழ்நாளில் அவன் யாருக்குமே ஒரு சதம் கொடுத்து உதவியதில்லை. எச்சில் கையால் காக்கை துரத்தாதவன். அவன் வீட்டிற்கு யாராவது பிச்சைக்காரர்கள் வந்தால் ஒரு பிடிச் சோறு கூடப்போடாமல் விரட்டி விடுவான். அவ்வளவு தூரம் அவன். ஒரு கஞ்சனாக இருந்தான்.

அவன் வரதனிடம்,

"இதோ பார் தம்பி! என்னிடம் எதுவும் கிடையாது. வெள்ளத்தால் நானும்தான் பாதிக்கப்பட்டிருக்கிறேன். என் வயல் நிலங்கள் எல்லாம் வெள்ளத்தால் மூழ்கி விட்டன. பல இலட்சக்கணக்கான பயிர்கள் எல்லாம் அழிந்து நாசமாகி விட்டன. நானும் சரியான கஷ்டத்தில்தான் இருக்கிறேன். என்னிடம் எதுவுமில்லை. நீ போய் வா!" என்று ஈவிரக்கமில்லாமல் சொன்னான் செல்வந்தன்.



அவன் கூறியவற்றைக் கேட்ட வரதனுக்கு, செல்வந்தனின் மேல் வெறுப்பு ஏற்பட்டது. அவனுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும் என்று எண்ணினான்.

"பரவாயில்லை ஐயா. நீங்களும் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று தெரிகிறது. என்னிடம் இருக்கும் உண்டியலில் இருந்து ஏதேனும் பணம் எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் ஏழைகளுக்காகத்தான் நாங்கள் பணம் திரட்டிக் கொண்டிருக்கிறோம்." என்று கூறி தன்னிடம் இருந்த உண்டியலை செல்வந்தனிடம் நீட்டினான்.

இதைக் கேட்ட செல்வந்தனுக்கு மிகவும் அவமானமாகப் போயிற்று. அவன் மனம் தெளிவடைந்தது.

பிறகு அவன் தனது மனதிற்கு நிறைவைத் தரும் அளவிற்கு பணம், துணிகள், தானியங்கள் எல்லாம் கொடுத்து வரதனை அனுப்பி வைத்தான்.

## வாரம் ஒரு நாடு
### சென்ட் லூஸியா

தலைநகர் - கேஸ்ட்ரிஸ்
பரப்பு- 616 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை - 1.45 இலட்சம்
மொழி - ஆங்கிலம், ஃபிரெஞ்சு படொய்ஸ்
எழுத்தறிவு -78%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - கிழக்கு கரீபியன் டொலர்
தனிநபர் வருமானம் - 2870 டொலர்

**அமைவிடம்:**
சென்ட் லூஸியா, வின்வேர்ட் தீவுக் கூட்டத்தில் இரண்டாவது பெரிய தீவாகும். இது மார்டினிக்கின் தெற்கிலும், சென்ட் வின்சென்டிற்கு வடக்கிலும் அமைந்துள்ளது.


**வரலாறு:**
பிரிட்டனிடமிருந்து 1979ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி சுதந்திரமடைந்தது. 17 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் உள்ளது. பாராளுமன்ற ஜனநாயகம் நடைமுறையில் உள்ளது.



பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியான கவர்னர் ஜெனரலே நாட்டுத்தலைவர்.

**பொருளாதாரம்:**
விவசாயம் முக்கிய தொழில். கொப்பரை, தேங்காய் எண்ணெய், வாழைப்பழங்கள் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள். பிளாஸ்டிக், ஆடைவகைகள், பியர் போன்றவை உற்பத்திப் பொருட்கள். சுற்றுலாத்துறையும் முக்கிய வருமான மூலம்.

## நாகபாம்பு



நல்ல பாம்பு என்று அழைக்கப்படும் இந்தப் பாம்பு கொடிய விஷம் கொண்டது.

தனது எதிரியைக் கொத்துவதன் மூலம் இவை விஷத்தைப் பாய்ச்சும். இவை கொத்தியவுடன்-பல்லால் எதிரியின் சதையைத் தொட்டவுடன் ஏராளமான விஷத்தை உடலில் செலுத்திவிடும்.

ஆபிரிக்காவில் வசிக்கும் சில வகை நாகபாம்புகள் எதிரியின் கண்களில் நேரடியாக விஷத்தைப் பாய்ச்சும். முதலில் கண்களில் எரிச்சலைக் கொடுக்கும். பின்னர் கண் தெரியாமல் போய்விடும்.

கர்ப்ப காலத்தில் பெண் பாம்புகள் 8 முதல் 25 முட்டைகள் வரை இடும். மூங்கில் இலைகள், சிறு குச்சிகள் மூலம் கட்டப்பட்டுள்ள கூட்டில் அவை முட்டை இடும். 58 நாட்களுக்குப் பிறகு முட்டைகளில் இருந்து பாம்புக் குட்டிகள் வெளியே வரும். குட்டிகள் 25 சென்டிமீட்டர் நீளம் இருக்கும். இவை பெரிய பாம்புகளைப் போல தாக்கும் திறன் கொண்டவை. படம் கூட எடுக்கும்.

ஆபிரிக்கா, தெற்கு ஆசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் நாகபாம்புகள் அதிகம் வசிக்கின்றன.

சாதாரண நாகபாம்புகள் ஆறு அடி நீளம் இருக்கும். ஆண் பாம்புகள். பெண் பாம்புகளை விட நீளமாக இருக்கும். அவை எடை அதிகமாகவும், அதிக விஷத்தன்மை உடையதாகவும் இருக்கும்.

திடீரென ஆபத்து வந்தாலோ, எதிரி வந்தாலோ இவை தமது தலையை உயர்த்தி, விரித்து படம் எடுக்கும். யாராவது கிட்டே சென்றால் தான் தாக்கும்.

நாகபாம்புகள் பகலை விட இரவில் தான் சுறுசுறுப்பாகச் செயற்படும். அப்போது தான் இவை வேட்டையாடும். மீன்கள், தவளைகள், எலிகள், பல்லிகள் போன்றவைகளும் சிறு பறவைகளும் அவற்றின் முட்டைகளும் நாகபாம்புகளின் உணவு ஆகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.02.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 177
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 175

பரிசுக்குரியவர்:
குணசீலன் ஜெனிட்டா.
இந்து மகாவித்தியாலயம், பாண்டிருப்பு-01, கல்முனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சு.மதுரன்,<br>தமிழ் மத்திய மகாவித்தியாலயம், வவுனியா. | செல்வி ஃபாத்திமா ஃபாய்ஹா ஃபாரீஸ்,<br>கேம்பிரிஜ் தேசிய பாடசாலை, மாத்தளை. |
| ஆஷா பாலசிங்கம்,<br>கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, முகத்துவாரம். | மதிவதனி பரமசிவம்,<br>தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா. |
| செல்வன்-எம்.எஸ்.எம்.வாரீஸ்,<br>ஹிஜ்ரா வீதி, கிண்ணியா. | எவ்.ஷபானா,<br>கேகாலை வீதி, பொல்கஹவெல. |
| யோகினி திருக்கணேசன்,<br>சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | ரி.சசிநாத்,<br>நன்மாதா பாடசாலை, நுவரெலியா. |
| அ.அ.முஹம்மது அஸாம்,<br>சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | எம்.வினோதினி,<br>பெனிதுமுல்லை, நாவலபிட்டியா. |

## விடுகதைகளும் விடைகளும்

1. வெள்ளை மனிதனுக்குக் கறுப்புச் சட்டை.
   அது என்ன?
2. மூடித்திறக்கும் கதவுகள், சத்தம் செய்யாக் கதவுகள்.
   அது என்ன?
3. இருட்டுக் குகைக்குள் பளிங்குச் சிற்பங்கள், அடுக்கடுக்காய்.
   அது என்ன?
4. மூன்றெழுத்துப் பெயராகும், முற்றும் வெள்ளை நிறமாகும்.
   அது என்ன?
5. நித்தம் குளிக்கும் பெரிய கிடா, கூடவே குளிக்கும் குட்டிக்கிடா.
   அது என்ன?
6. இறக்கை மடக்காமல் பறக்கும் பறவை.
   அது என்ன?
7. தொட்டால் மணக்கும், சுவைத்தால் புளிக்கும்.
   அது என்ன?
8. கைக்குள் சிறைப்படும், கண்ணுக்குப் பளிச்சிடும்.
   அது என்ன?
9. நிலத்திலே பிறந்து, நீரில் வசிப்பான்.
   அது என்ன?
10. நபர்களோ பலர், ஆனால் குடுமியோ ஒன்று.
    அது என்ன?

**விடைகள்**

1. உழுத்தம்பருப்பு 2. கண் இமைகள்
3. பற்கள் 4. பஞ்சு
5. அம்மியும், குளவியும் 6. விமானம்
7. எலுமிச்சம்பழம் 8. வளையல்
9. கப்பல் 10. பூண்டு.

எஸ்.சைராபானு, பத்தரமுல்லை.

## கார்ல் மார்க்ஸ்

'நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் சமூகத்தின் பொதுவுடமையாக இருக்க வேண்டும்' என்னும் கொள்கையை வகுத்த பொதுவுடமைவாதி கார்ல் மார்க்ஸ்.



இவர் 1818ல் மேற்கு ஜேர்மனியில் பிறந்தார். பின்னர் இவர் சட்டப்படிப்புக்காக பொன் பல்கலைக்கழகத்திற்கு வந்தார். அங்கு இவர் வரலாறு, தத்துவம் ஆகியவற்றைக் கற்பதிலேயே ஆர்வமாக இருந்தார்.

பொன் மற்றும் பேர்லின் பல்கலைக்கழகங்களில் படித்த இவர் பட்டப்படிப்பு முடிந்ததும் பத்திரிகை ஆசிரியராக இருந்தார். பாரிஸில் சோஷலிச இயக்கம் பரவியிருந்த போது அங்கு இவர் சென்றார். அங்கு எங்கெல்ஸ் என்பவரின் நட்புக் கிடைத்தது. இந்நட்பு இவரது வாழ்நாள் முழுவதும் நீடித்தது.

இருவரும் லண்டன் சென்று, புகழ்பெற்ற பொதுவுடமை அறிக்கையை-1848ல் தயாரித்தனர். இவர் பல புத்தகங்களை எழுதியுள்ளார். அவற்றுள் 'டாஸ்கப்பிட்டல்' என்ற நூல் இவருக்குப் பெரும் புகழ் தேடிக்கொடுத்தது.

'மக்களின் அரசியலும், சமூக அமைப்பும் அவர்களுடைய பொருளாதார வாழ்க்கையைப் பொறுத்திருக்கின்றன. எனவே ஒரு நாட்டின் அரசியலை அறிந்து கொள்ள மக்களின் பொருளாதார வாழ்க்கையை ஆராய வேண்டும். பொருளாதார சூழ்நிலைக்கேற்ப மக்களிடையே வகுப்பு வேற்றுமை உண்டாகிறது. பின்னர் இவ்வகுப்பினருள் ஒரு பிரிவினர் மற்றவர் மீது ஆதிக்கம் பெற முயல்கின்றனர். நாளடைவில் தொழிலாளர்களுக்கு ஆதரவான சூழ்நிலை ஏற்பட்டதும் அவர்களுடைய அதிகாரம் மேலோங்கி முதலாளித்துவம் மறைந்து விடும். பின்பு சோஷலிச சமூகம் மலரும்' இதுவே மாக்ஸின் கொள்கை.

இக்கருத்துக்களை இவர் சளைக்காமல் பரப்பி வந்தார். இவரது கருத்துக்களைப் பின்பற்றி வந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர் முன்னாள் சோவியத் யூனியனின் தந்தை என்று கூறப்படும் லெனின் ஆவார்.

1883ல் இறந்த கார்ல் மாக்ஸின் கொள்கை இன்று சீனா மற்றும் பல பொதுவுடமை நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

## நான்கு இனங்கள்

மனித இனத்தை அறிவியல் அறிஞர்கள் நீக்ரோய்ட், மொங்கொலொய்ட், ஒஸ்டிரோலொய்ட், கொவ்காசாய்ட் என நான்கு பிரிவுகளாக பிரித்துள்ளனர்.

மனிதனின் தோல், தலைமுடி, கண்களின் நிறம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு மனித இனத்தை அறிஞர்கள் பிரித்துள்ளனர். இதில் இருந்துதான் மற்ற உட்பிரிவு இனங்கள் தோன்றின என்றும் கூறியுள்ளார்கள்.


நீக்ரோய்ட்


மொங்கோலொய்ட்


ஒஸ்டிரோலொய்ட்


கொவ்காசாய்ட்

www.padippakam.com

# அனிதா இளம் மனைவி 11



## நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன் சுஜாதா

### இதுவரை

அவர்கள் இளம் காதலர்கள்-ஆனந்த்-மல்லிகா.

இருவரும் சந்தோஷமாக இருக்க தனியான மலைப் பகுதிக்குச் சென்றனர். அங்கே புதர் ஒன்றுக்குள் ஒரு பிணம் கிடக்கிறது. ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான். பொலிசார் வருகின்றனர். அது ஓர் ஆண் பிணம். கொல்லப்பட்டவர் ஷர்மா என்று கண்டறிந்து அவரது வீட்டுக்குச் சென்று அவர் மனைவியிடம் விசாரிக்கிறார்கள். மனைவி பெயர் அனிதா. ஷர்மாவின் இரண்டாவது மனைவி. கொலையான ஷர்மாவின் முதல் மனைவியின் மகள் மோனிக்கா. சட்டத்தரணி கணேஷின் உதவியை நாடுகிறாள் மோனிக்கா.

அனிதாதான் தன் அப்பாவை- சொத்துக்காக கொலைசெய்திருக்கிறாள் என்று சந்தேகிக்கிறாள் மோனிக்கா.

கணேஷ் அனிதாவிடம் விசாரணை நடத்துகிறான். அனிதாவின் இளமையும், அழகும் கணேஷையும் கலவரப்படுத்துகின்றன. விசாரணையை முடித்து விட்டுச் சென்ற கணேசுக்கு அவசரமாக போன் செய்கிறாள் அனிதா. உடனே அனிதாவிடம் செல்கின்றான் கணேஷ். தன்னை யாரோ கொல்ல முயற்சித்ததாகக் கூறும் அனிதா அவனைத் தன்னுடன் தங்குமாறு வேண்டுகிறாள். அங்கே இரவு அந்த மர்ம மனிதனின் தாக்குதலுக்கு ஆளாகின்றான்.

மறுநாள் இன்ஸ்பெக்டர் ராஜேஷைச் சந்திக்கும் கணேஷ் மீண்டும் அனிதாவின் வீட்டுக்குச் செல்கிறான். பாஸ்கர் நொண்டியபடி நடப்பதை அவதானிக்கிறான்.

உயில் விஷயம் பற்றி மோனிக்கா வினவ, குளித்துவிட்டு வந்த அனிதாவின் மேல் கணேஷின் கவனம் திரும்பவே, அவனைக் கோபமாகத் திட்டித்தீர்த்துவிட்டு வெளியேறுகிறாள்.

அனிதாவை மணக்க விரும்புவதாக கூறுகிறான் கணேஷ்.

மற்றொரு திருமணத்தை மறுக்கும் அனிதாவுடன் உரையாடிவிட்டுப் புறப்படும் கணேஷ் அங்கே பாஸ்கரைக் காண்கிறான்.

வெறுப்படைந்த கணேஷ் பாஸ்கருடன் சண்டையிடுகிறான். அன்றிரவே மீண்டும் அனிதாவீடு திரும்பும் கணேஷ் மோனிக்காவுடன் ஷர்மாவின் அறையைச் சோதனையிடுகிறான். போட்டோ ஆல்பத்திலிருந்த கோவிந்தின் புகைப்படத்தை உருவிக் கொண்டு வீடு திரும்புகிறான்.

பாஸ்கர் அனுப்பிய ஆள் சாஸ்திரியை மடக்கும் கணேஷ் உண்மையை அறிகிறான். மோனிக்காவைச் சந்திக்கும் கணேஷ் அவளுடன் கனாட் பிளேஸிலுள்ள ஓட்டல் ஒன்றுக்குச் செல்கிறான்.

இனி.....

ஒரு வெள்ளைக்காரன் காலில் கட்டைச் செருப்பு, இடுப்பில் ஒரு டவல், அதில் சொருகின ஒரு பாக்கெட் சார்மினார், வெறும் உடம்பு. செம்பட்டைக் காடாகத் தலைமயிர். காட்டுக்குள் இரண்டு மரகதக்கல் போல் பச்சைக் கண்கள். இவைகளுடன் அவன் எதிரே இருந்த அந்தப் பெண்ணுக்குக் கீதையைப் போதனை செய்து கொண்டிருந்தான்.

பாப் டைலனின் பாட்டு அந்த அறை முழுவதும் பரவியிருந்தது. கணேஷ் அந்தக் கூட்டத்தில் மிக அன்னியமாக உணர்ந்தான். அவர்கள் உட்கார்ந்தார்கள். மோனிக்கா மெதுவாக மேஜையில் தாளம் போட ஆரம்பித்தாள்.

கணேஷ் மிக உரக்க, "இந்த இடத்துக்கா வரச் சொல்லி இருந்தான்?"

"ஆம்," என்றாள் மோனிக்கா.

"இங்கே எதுவும்பேச முடியாது? என் தொண்டை வற்றிவிடும்."

"ம்ஹூம்." தலையாட்டினாள் மோனிக்கா.

அந்த இடத்தில் இளமையின் உஷ்ணம் வரவர ஏறிக்கொண்டே சென்றது. மோனிக்காவின் மினி ஸ்கர்ட் சற்று அபாய மட்டத்தில் இருந்ததை அவனைத் தவிரமற்ற எல்லோரும் கவனித்துக் கொண்டிருக்க, கணேஷ் வாசலையே கவனித்துக் கொண்டிருந்தான். வந்திருந்தவர்கள் எவரும் ஷேர் வாங்கக் கூடியவர்களாகத் தெரியவில்லை.

ஓர் இப்பி (இந்திய ஹிப்பி) வந்து மேஜை மேல் உட்கார்ந்து கொண்டு, "பேபி!" என்றான்.

கணேஷ் மோனிக்காவைப் பார்த்தான். அவள் சளைக்காமல், "இய்யா ஷுகர் டால்!" என்றாள்.

கணேஷ், "பையா, நீதான் இவளுக்குப் ஃபோன் செய்தாயா?" என்றான்.

இளைஞன் திரும்பி அவனைப் பார்த்தான். "நீ யார்? என் அப்பாவா?" என்றான்.

"உன் தாத்தா," என்றான் கணேஷ்.

"ஹலோ க்ராண்ட் ஃபாதர்! ப்ளீஸ்ட் டு மீட் யூ!"

கணேஷ் தன் மூக்கைச் சுட்டு விரலால் தேய்த்துக் கொண்டான். மோனிக்கா சிரித்தாள். தைரியமடைந்த அவன் அவள் இடுப்பைச் சுற்றி கையை வளைத்து, "வா, மாடிக்குச் செல்லலாம். அங்கே ஒரு பில்லியர்ட்ஸ் மேஜை இருக்கிறது," என்றான்.

கணேஷ் எழுந்து அந்த ஹிப்பியை அவளிடமிருந்து பறித்துத் தூர எறிந்தான். எறியப்பட்ட ஹிப்பி அதனால் கோபமடைந்தான் என்பது மிகையாகாது. வெய்ட்டர் ஒருவனின் ட்ரேயிலிருந்து ஒரு கனமான பீங்கான் தட்டை எடுத்துக் கணேஷின் பக்கம் வீசினான்.

ஹிப்பிகள் எவ்வளவோ விதத்தில் நவீனமானவர்கள். ஆனால் கோபத்தில் பீங்கான் தட்டு எறிவதில் அவ்வளவு சாமர்த்தியமில்லை போலும். எறியப்பட்ட தட்டு அப்பொழுதுதான் கல்யாணம் செய்து கொண்டு தன் இளம் மனைவியுடன் உள்ளே நுழைந்து கொண்டிருந்த ஜர்னியில் சிங் என்ற சர்தார்ஜியின் தலைப்பாகையைத் தட்டிவிட்டது. சாதாரணமாகவே சர்தார்ஜிகள் சண்டைப் பிரியர்கள்! ஜ.சிங் புதிதாகக் கல்யாணமான, தலைப்பாகை இழந்த சர்தார்ஜி- அவன் அதிகக் கோபமடைந்தான் என்பதும் மிகையாகாது.

சிங் மின்னல்போல் ஹிப்பியின் மேல் பாய, சில உப ஹிப்பிகள் அதில் சேர்ந்து கொள்ள கணேஷ், சிங், ஹிப்பி1, ஹிப்பி 2, வெய்ட்டர், சிங் ஹிப்பி 3, என்று பொதுவாகவே அந்த ஓட்டலின் அமைதி கலைந்து விட்டது என்று சொல்வதும் மிகையாகாது.

ஐஸ்கிரீமின் மேல் யாரோ உட்கார்ந்தார்கள். கோல்ட் ஸ்பாட்டில் யாரோ குளித்தார்கள். மோனிக்கா மேஜைமேல் ஏறி நின்று கொண்டு கணேஷைத் தேடினாள். அந்த மேல் நாட்டு ஹிப்பி (சார்மினார் துண்டு) தன் எதிரே இருந்து சிஷ்யைக்கு இன்னும் கீதை போதித்துக் கொண்டிருந்தான்.

மானேஜர் டெலிஃபோனைப் பற்றிக் கொண்டு மேஜை அடியில் சென்று பார்லிமெண்ட் தெரு போலிஸ் நிலையத்திற்கு ஃபோன் செய்தார்.

OOO

கணேஷ் அந்த ஓட்டல் ரகளையிலிருந்து மோனிக்காவை இழுத்துக் கொண்டு சமையல் அறை வழியாகத்தப்பித்து வெளியே வந்து ஒரு சந்து, ஒரு டெய்லர் கடை, இவைகளைக் கடந்து தன் கார் நிறுத்தியிருந்த இடத்துக்கு ஓடினான்.

ஒரு காலில் செருப்பு இல்லாததாலும், மினி ஸ்கர்ட் இன்னும் மினியாகக் கிழிந்திருந்ததாலும் சற்றுச் சிரமத்துடன்தான் ஓட முடிந்தது மோனிக்காவினால்.

கணேஷின் ரூமுக்கு வந்ததும் அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"உன் மூக்கில்! உன் மூக்கில்!"

எதிரே கண்ணாடியில் பார்த்துக் கொண்டான் கணேஷ். மஞ்சளாக இருந்தது.

அதை வழித்து நாக்கில் தொட்டுப் பார்த்து, "மார் மலேட்," என்றான்.

அவள் இன்னும் சிரித்தாள். கணேஷ், "மோனிக்கா, எதற்காகப் பொய்சொன்னாய்?" என்றான்.

"என்ன பொய்?"

"உன்னை யாரோ அந்த ஓட்டலுக்கு டெலிஃபோனில் அழைத்தார்கள் என்று. பொய்தானே?"

"ஆம்."

"எதற்குப் பொய் சொன்னாய்?"

"நான் உன்னைக் காதலிப்பதால்," என்றாள் மோனிக்கா.

"அதைப் பிறகு விவாதிப்போம். இதை மாட்டிக்கொள்."

கணேஷின் ஆர்மா ஷர்ட் அவளுக்கு அழகாக இருந்தது. ஊசி நூல் போட்டுத் தன் ஸ்கர்ட்டைத் தைத்துக்கொண்டாள். பையன் கொண்டுவந்த டீயை மடக்கென்று குடித்தாள்.

கணேஷ் சட்டை மாற்றிக்கொண்டு வந்தான். அவளைப் பார்த்தான். "யூ லுக் ப்ரிட்டி. ஒரு பட்டன் இன்னும் போட்டுக் கொள்ளாமல் விட்டிருக்கிறாய். மேரா நாம் ஜோக்கரா?"

அவளுக்குப் புரியவில்லை. ஆனால் அவள் சற்று வெட்கப்பட்டுக்கொண்டு பட்டனைப் போட்டுக் கொண்டாள்.

"கணேஷ் நான் உன்னை அப்பட்டமாக ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். ஒரு வார்த்தையில் பதில் வேண்டும். ஆம். இல்லை."

"நீ கேட்கப்போகும் கேள்வி எனக்குத் தெரியும். பதில்: இல்லை."

"என்ன கேள்வி?"

"அதுதான் உனக்குத் தெரியுமே?"

"உனக்குத் தெரியாதே! நீ (தயங்கினாள்) அன்று இரவு...."

"கேட்காதே, கேட்காதே?"

"அனிதாவுடன்... அந்த அறையில்...."

"என்ன பேசிக் கொண்டிருந்தேனா? பொதுவாக உன் அப்பாவைப்பற்றி."

"என்ன செய்தாய்?"

"கம் எகய்ன்?"

"என்ன செய்தாய்?"

"மைடியர் கர்ல், நீ என்னைத்தவறாக எடுத்துக் கொண்டிருக்கிறாய். நான் உன்னைத்தவிர மோனிக்கா ஷர்மாவைத் தவிர- வேறு ஒருவரையும் கனவிலும் நினைக்கவில்லை. நினைத்ததில்லை!"

அந்தப் பதில் அவளைத் திருப்திப் படுத்தவில்லை.

"கணேஷ் நீ கிருஷ்ணனாக இருந்திருக்கிறாயோ?"

"ஏன்?"

"ஏன் பெண்கள் உன்மேல் அப்படி வந்து விழுகிறார்கள்?"

"அப்படியா? மோன்ஸ், நான் உறை பனி போலத் தூய்மையானவன். ஐ ஸ்பெஷலைஸ் இன் வர்ஜின்ஸ்! காலம் உனக்கு உண்மையை விளக்கும். ஒரு ஸர்தார்ஜி ஜோக் சொல்லட்டுமா? குருமுக் சிங் கிராமத்திலிருந்து முதல் தடவையாக ஜலந்தர் போனான்...."

"உன் ஜோக்கைக் கொளுத்து! இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்?"

"உன்னை வீட்டில் கொண்டு விடுகிறேன்."

"வேண்டாம். நான் தனியாகப் போகிறேன்."

"உன் அப்பாவைக் கொலை செய்தது யார் என்கிற பிரச்சினையில் நான் முழுவதும் இறங்கிவிட்டேன்."

"அந்த கோவிந்த் தான். அதில் என்ன சந்தேகம்?"

"நிறைய இருக்கிறது?"

"ஒரு நிமிஷம். நீ ஏன் லைன் மாறிவிட்டாய்? நீ வேலையை ஆரம்பித்தது ஓர் உயிலின் வியாக்கியானத்தில்...."

"காரணம் இரண்டு. முதல் காரணம் எனக்கு வேறு வேலை இப்போது கிடையாது. உங்கள் வீட்டு மர்மத்தில் முழுக் கவனம் ஏற்பட்டுவிட்டது. இரண்டு பெண்கள், இரண்டு அழகான பெண்கள்- அனிதா, மோனிக்கா, ஒருவரை ஒருவர் அளவுகடந்து வெறுக்கும் அழகான பெண்கள். இரு. இன்னும் நான் சொல்லி முடிக்கவில்லை. இரண்டாவது காரணம்: உன் அப்பா இறந்து போனதன் 'ஏன்?' உன் அப்பாவைக் கொன்றவன் கோவிந்த் என்று- வைத்துக் கொண்டால் எவ்வளவு கேள்விகள் எழுகின்றன தெரியுமா?"

"என்ன கேள்விகள்?"

"உன் அப்பாவின் உடலில் சம்பந்தமில்லாத காயங்கள் பல இருந்திருக்கின்றன. அது ஏன்? என்னையோ அல்லது அனிதாவையோ முந்தாநாள் இரவு யாரோ தாக்க முற்பட்டு இருக்கிறார்கள். அது ஏன்? அந்த கோவிந்த் விசுவாசமுள்ள வேலைக்காரன் என்பது பெரும்பாலும் தெரிகிறது. அவன் எங்கே போனான்? அவன்தான் கொலை செய்தான் என்றால், மற்ற விஷயங்கள் பொருந்தவில்லை. அப்புறம் பாஸ்கரின் விநோதமான நடத்தை. அவன் சொல்லியிருக்கும் பொய்கள். அவனுக்கு நான் இந்த கேஸில் இருப்பது பிடிக்கவே இல்லை. உன் சித்தி அனிதா உன் அப்பாவின் சொத்து வேண்டாம் என்று ஆணித்தரமாக சற்று அதிகமாகவே- மறுப்பது. அப்புறம் பொதுவாகவே உன் வீட்டில் நிலவும் செயற்கையான சூழ்நிலை. இறந்தவருக்காகத் துக்கம் போதாது. இறந்தபின் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் வேகம் போதாது. உடனே அவருடைய எஸ்டேட் விவகாரங்களை ஒழுங்குபடுத்தி வரி கட்டவோ, பாகம் பிரித்துக்கொள்ளவோ யாருமே ஆர்வமாக இல்லை. உன்னைத்தவிர. இந்தக் கேள்விகள் எல்லாவற்றையும் தெளிவாக்கக் கூடிய ஒரே ஒரு பதில் இருக்கிறது. அந்தப் பதிலைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

"அந்தப் பதில் கிடைத்த பின்தான் எனக்கு காசு வரும்?"

"ஆம்!"

"சரிதான்! எவ்வளவு நாட்களாகும்?"

"சொல்லத் தெரியவில்லை. நான் என்ன செய்யப்போகிறேன் என்றால்-உன் அப்பா இறந்ததிலிருந்து ஆரம்பித்து இன்றுவரை எனக்குக் கிடைத்திருக்கும் விபரங்களை சரிபார்க்கப் போகிறேன். நிஜங்கள், நேரில் பார்த்த சம்பவங்கள், நிகழ்ச்சிகள் நடந்த நேரங்கள் எல்லாவற்றையும் அவைகளை எல்லாம் சரிபார்த்த பின்தான் அவைகளை ஒட்டவைக்க முயற்சி செய்ய வேண்டும்."

"கணேஷ் நீ அனிதாவைச் சந்தேகப்படுகிறாயா?"

"அனிதாவையா?"

"பின் பாஸ்கரையா? என்னையா?"

"நான் எல்லோரையும் சந்தேகப்படுகிறேன். எவரையும் சந்தேகிக்கவில்லை. போகலாம். எனக்கு ஏர் ஹெட் குவார்ட்டர்ஸ் வரை போகவேண்டும்."

"எதற்கு?"

"இந்த கேஸ் சம்பந்தமாக?"

"ஏர் ஃபோர்ஸுக்கும் என் அப்பா இறந்து போனதற்கும் என்ன சம்பந்தம்?"

"உங்கள் வீட்டில் எல்லோரும் பொய் சொல்கிறீர்கள். அன்னப்பட்சி மாதிரி நான் பிரிக்க வேண்டியிருக்கிறது."

"நான் என்ன பொய் சொன்னேன்?"

"சற்று முன் அந்த ஓட்டலுக்கு என்னை இழுத்துப் போகப்பொய் சொன்னாயே!"

"அதற்குக் காரணமும் சொன்னேனே கணேஷ்."

"காதல் என்று சொன்னாய் இல்லையா? ஞாபகம் வருகிறது.... நாம் அடுத்த வெள்ளிக்கிழமை காதலிக்கலாம்."

"சில சமயங்களில் உன்னைக் கழுத்தை நெறித்துக் கொல்ல ஆசையாக இருக்கிறது."

அவள் தன்னை யூனிவர்ஸிட்டி ஏரியாவில் ஒரு சினேகிதியைப் பார்க்கக் கொண்டு விடுமாறு சொன்னாள். கணேஷ் அவளை அங்கே விட்டுவிட்டு விமானப்படைத் தலைமைச் செயலகத்துக்கு வந்தான். யூனிஃபாரம் அணிந்தவர்கள் மத்தியில் சற்று விநோதமாக உணர்ந்தான். ஸ்க்வாட்ரன் லீடர் ராமலிங்கத்துக்காகக் காத்திருந்தான். அவர் குடும்பத்து விவகாரம் ஒன்றை அற்புதமாக வாதாடி ஜெயித்திருக்கிறான். அதனால் பரிச்சயம். அவ்வப்போது ஏர் ஃபோர்ஸ் மெஸ்ஸில் குறைந்த விலைக்கு XXX ரம் வாங்க அவர் உதவி தேவை இருக்கும். இப்போது வேறுவிதத்தில் தேவை இருந்தது.

"ஹலோ கணேஷ்!" என்று அவன் முதுகைத் தட்டினார்.

"ஹலோ சார்! எப்படி இருக்கிறீர்கள்?"

"பார்த்தால் தெரியவில்லை? பாகிஸ்தானுடன் எந்த நிமிஷமும் சண்டை செய்யத் தயாராக இருக்கிறேனே! தெரியவில்லை?"

"அவர்கள் தாக்கப் போகிறார்களா?"

"வி ஆர் ரெடி, உட்காரலாம்."

ரிஸப்ஷனில் ஓரத்தில் அமர்ந்தார்கள்.

"ஆமாம், யார் அந்த ஃப்ளைட் லெஃப்டினெண்ட் ராஜா?"

"அதை நான் உங்களிடம் கேட்கத் தானே வந்தேன்?"

"புரியவில்லை."

"என் கேள்வி இதுதான். ஃப்ளைட் லெஃப்டினெண்ட் ராஜா என்று ஒருவர் ஆக்ராவில் ட்ரான்ஸ்போர்ட் விமான விபத்தில் இறந்து போனாராமே, அது உண்மையா?"

"ஆம்! 1965ல் ஆக்ராவில் பாக்கெட் விமானம் இறங்கும்போது விபத்துக்குள்ளாகியது. அதில் இறந்து போனவர்களில் ராஜாவும் ஒருத்தர்!"

கணேஷுக்குச் சட்டென்று ராஜாவின் மீது சற்றுப் பொறாமை ஏற்பட்டது.

"எதற்கு இந்த விவரம்?"

"ஒரு கேஸ்! ஓர் ஆள் ஒரு விவரம் சொன்னார். அதை நான் சரி பார்க்கிறேன்."

"சொன்னாரா, சொன்னாளா?"

"சொன்னாள்."

"நினைத்தேன். அந்தப்பெண் என்ன ஆனாள்? பெயர் நீரஜா. கொஞ்ச நாள் சுற்றிக் கொண்டிருந்தாயே!"

"ஓ எஸ். நீரஜா! இப்பொழுது ஒருவருக்கொருவர், புது வருஷ வாழ்த்துக்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம்...."

"இப்பொழுது யார்?"

"அப்படி எல்லாம் இல்லை. ஒரு மர்டர் கேஸ். மிக சுவாரஸ்யமாக இருக்கிறது."

"இன்னொரு சமயம் சொல். இப்பொழுது எனக்கு வேலை இருக்கிறது."

"சொல்கிறேன் தாங்ஸ்."

"பை! சமர்த்தாக இரு."

ஒரு திடீர் மன மாற்றத்தில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இன்ஸ்பெக்டர் ராஜேஷைச் சந்திப்பதற்குப் பதிலாக வசந்த் விஹாருக்குச் சென்றான் கணேஷ். 'அனிதா தனியாக இருக்கலாம்...'

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்








- பெயர்: ஏ. சியாம். வயது: 23 முகவரி: HOUSE NO-18, BLOCK NO-01, STREET NO-05, AL.OMARIYA., KUWAIT. பொழுது போக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.
- பெயர்: என். யோகச்சந்திரன். வயது: 23 முகவரி: 167, காலி வீதி, மொரட்டுவ. பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.
- பெயர்: யூ. இம்டியாஸ். வயது: 21 முகவரி: 115, கம்பளவெல, கம்பளை. பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.
- பெயர்: கே. ரட்னேஸ்வரன். வயது: 29 முகவரி: P.O.BOX-40229 DOHA, QATAR. பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.
- பெயர்: விஜயராணி. வயது: 22 முகவரி: 6ம் ஒழுங்கை, திருச்செந்தூர் வீதி, கல்லடி. பொழுதுபோக்கு: பேனா நட்பு.
- பெயர்: முகமட் இர்பான். வயது: 22 முகவரி: 180/6, லெயாட்ஸ் புரோட்வே, கொழும்பு-14. பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.
- பெயர்: எல். ஜமீல். வயது: 28 முகவரி: P.O.BOX-2209, AL-ARDIYA, KUWAIT. பொழுதுபோக்கு: பத்திரிகை.
- பெயர்: எஸ். முகமது லாபிர். வயது: 19 முகவரி: 1ம் வட்டாரம், தக்வா நகர், புல்மோட்டை. பொழுதுபோக்கு: வழமையானவை.
- பெயர்: எஸ். ராஜா. வயது: 23 முகவரி: 115, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை, கொழும்பு-2. பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.
- பெயர்: எஸ். சிவகுமார். வயது: 21 முகவரி: 52, டயகம கொலனி, டயகம. பொழுது போக்கு: வானொலி, கதைப்புத்தகம்.
- பெயர்: கே. சிறீதரன். வயது: 26 முகவரி: BREMGATWER STR-28, 8003. ZURICH, SWITZERLAND. பொழுது போக்கு: ரீ.வி.. உதைபந்து.
- பெயர்: ஐ. அப்துல் மாலிக். வயது: 22 முகவரி: 26, குரு நாகல் ரோட், கட்டுகஸ்தோட்டை. பொழுது போக்கு: பத்திரிகை.



படிப்பகம்

உணர்வோடு கலக்கும் உண்மைக் கதை

# தூக்கு மேடைக் குறிப்பு

13

ஜூலிஸ் பூசிக்

## சிறை வைத்தியர்

பொலிஸ் மாஸ்டர் வீஸ்னர்–பான்கிராப்ட்ஸ் சிறை நாடக மேடையில் விநோதமான பேர்வழி! இவன் இல்லாமல் பான்கிராப்ட்ஸை உன்னால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாது.

சிறை ஆஸ்பத்திரியில் இல்லையென்றால், இவன் சிறைத்தாழ்வாரத்தில் 'தன் குறுகிய கால்களால் மெல்ல அடிவைத்து, தனக்குள். எதையோ பேசிக்கொண்டு தன்னைப் பற்றிய ஒவ்வொரு சமாச்சாரத்தையும் கூர்ந்து கவனித்துக்கொண்டு நடந்து வருவதைப் பார்க்கலாம்.

இவ்விடத்தில் சுற்றித் திரிந்து முடிந்த அளவுக்குக் கிடைக்கிற விவரங்களைச் சேகரித்துச் செல்லும் பொருட்டு வந்திருக்கும் ஓர் அந்நிய நாட்டானைப்போல் இவன் தோன்றுகிறான்.

ஆனால், இவனுக்குப் பழகிய காவல்காரனைப்போல் சந்தடியில்லாமலும். வெகு வேகமாகவும் அறையின் பூட்டுக்குள் சாவியை நுழைத்துத் திறக்க முடிகிறது. இவனுடைய சுவாரஸ்யமற்ற ஹாஸ்யப் பேச்சு. இரண்டு அர்த்தத்தில் பேச இவனுக்கு வசதியாக இருக்கிறது.

ஆனால் நீ புரிந்து கொண்டு இவனைக் கிட்ட நெருங்க உதவியாக எதையும் அப்பேச்சில் இவன் வெளியிட்டு விடுவதில்லை. இவன் மற்றவர்களிடம் நெருங்குகிறான். ஆனால் மற்றவர்கள் தன்னை நெருங்க விடுவதில்லை.

இவன் எவ்வளவோ விஷயங்களைப் பார்க்கிறான். ஆனால் கோள் சொல்வதில்லை. மற்றவர்கள் பேரில் குற்றம் சாட்டுவதில்லை. புகை மயமாக இருக்கும் ஒரு அறைக்குள் இவன் நுழைந்தால், மூக்கை உரக்க உறிஞ்சிக்கொண்டு சொல்வான்:

"சரிதான்"–உதட்டை நாக்கினால் தடவுகிறான்– "அறையில் புகை பிடித்திருக்கிறீர்கள்"–திரும்பவும் உதட்டைத் தடவுகிறான்–"அது கூடாது. கண்டிப்பாகப் புகை பிடிக்கக்கூடாது."

ஆனால் அதைப் பற்றிப் புகார் கூற மாட்டான். ஏதோ ஒரு பெரிய கவலை எப்போதுமே மனதை வாட்டுவதுபோல இவனுடைய முகம் சுருக்கம் விழுந்திருக்கிறது. இவன் சேவை செய்கிற ஆட்சியின் பேரில், இவனுக்கு எவ்விதப் பற்றும் இருப்பதாகத் தோன்றவில்லை.

இப்போதும் சரி, முன்னேயும் சரி, இவன் இந்த ஆட்சியின் பேரில் நம்பிக்கை வைக்கவில்லை. இவன் இந்த ஆட்சியை எதிர்த்து மல்லாடுகிறவர்களுடன் எவ்விதத்திலும் சேர்ந்திருக்கவில்லை. இரண்டில் எந்தப் பக்கமும் இவன் சாயவில்லை.

என்னைக் கடமை உள்ளத்தோடும் கண்ணியமாகவும் இவன் கவனித்தான். இவனிடம் வரும் பெரும்பாலான நோயாளிகளிடமும் இப்படித்தான் நடந்து கொள்கிறான். நிரம்ப அதிகமாகச் சித்திரவதைக்கு ஆளான கைதிகளை, திரும்பவும் 'விசாரணை'க்கு இழுத்துப் போகாமல் அநேக சமயம் தடுக்கிறான். ஒரு வேளை, அது இவனுடைய மனச்சாட்சிக்கு நிம்மதியளிக்கக் கூடும். எனினும். சில சமயம் உதவி மிகமிக அவசியமாக இருக்கும்போது, இவன் உதவி செய்ய மறுக்கிறான். அந்தச் சமயம், அவன் பீதியடைந்திருக்கக்கூடும்.

ஆட்சி புரிவோர் பேரில் ஒருபுறம் பயம். அடுத்து என்ன நடக்குமோ என்று மறுபுறம் கிலி. இவ்விரண்டு பயங்களுக்குமிடையே தன்னந்தனியாக நிற்கும் பிரஜைகளுக்கும் இவனை உதாரணமாகக் கூறலாம். ஏதாவது ஒரு வழியைக் காண இவன் நாலாபுறமும் பார்க்கிறான் ஆனால் ஒன்றும் இவனுக்குப் புலப்படவில்லை.

எலி அல்ல; பொறியில் சிக்கிய நிஜமான சுண்டெலி. இவன் தப்புவதற்கு நம்பிக்கை இல்லாத வகையில் சிக்கிக் கொண்டுள்ள சுண்டெலி.

## இதுவரை

**செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்.**

**ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார்.**

**அவர் இறந்து விட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள்.**

**அவளை மட்டும் போலந்துக்கு கடினவேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப் போகிறார்கள். சிறையில் சித்திரவதைகள் மத்தியில் உறுதியோடு தாக்குப் பிடித்தவர்களைப் பற்றி விபரித்த பூசிக், சிறை அதிகாரிகள் பற்றியும் விபரிக்கிறார்.**

**அவர்களது முரண்பாடான குணங்களை சுவாரசியமாகச் சொல்கிறார்.**

## பிளிங்க்

இவன் வெறும் உருவம் அல்ல; பண்பு பூர்த்தியான மனிதனுமல்ல. இவ்விரண்டிற்கு இடையில் உள்ள ஒரு பிராணி. இவனை நிஜ மனிதனாக ஆக்கக்கூடிய தெளிந்த திருஷ்டி இவனிடம் இல்லை.

பான்கிராப்ட்ஸில் இருக்கும் ஜெர்மன் அதிகாரிகளில், இவர்கள் இருவர் மட்டுமே போர்முனைக்குச் சென்று நேரடியாகப் போரில் ஈடுபட்டவர்கள்.

ஹனுயர் ஒரு தையற்காரன், நோஸ்மோவாசி, கிழக்குப் போர்முனையிலிருந்து யுத்தம் மூண்ட சில காலத்திற்குள் இவன் திரும்பி விட்டான். காரணம், இவனுக்குப் பனி நோய் கண்டது. வாஸ்தவத்தில் அந்த நோயை இவனே உண்டுபண்ணிக் கொண்டான். ஸ்கிவிக் பாணியில், "ஜனங்கள் ஈடுபடக்கூடியது அல்ல யுத்தம்" என்று இவன் தத்துவம் பேசுகிறான். "அதில் நான் செய்வதற்கு ஒன்றுமில்லை" என்கிறான்.

ஹோபர் ஒரு செருப்புத் தொழிலாளி. பாட்டாத் தொழிற்சாலையில் வேலை பார்த்தான். பிரான்சில் நடந்த சண்டைகளில் போரிட்டான். பதவி உயர்த்தப்படும் என்று வாக்களிக்கப்பட்ட போதிலும். அதன் பிறகு இவன் இராணுவ சேவையை விட்டு விட்டான். தினம் இவன் எத்தனையோ சிக்கல்களில் மாட்டிக்கொள்கிறான். ஒவ்வொரு தடவையும் கையை வீசி, 'ஓ! ஸ்ஸூ' என்று அலுத்துக் கொள்வதோடு சரி.

இவ்விருவரும், உணர்ச்சியிலும் தலைவிதியிலும், ஒருவரே போல் இருக்கிறார்கள். ஆனால் ஹோபர்தான் மற்றவனைவிடப் பயமில்லாதவன்! உள்ளத்தை வெளியிடுபவன்; பூர்த்தியான பண்புடைய நிஜமனிதன், 'பிளிங்க்' (Flink) என்பது இவனுக்கு எல்லா அறைகளிலும் வழங்கும் பொதுவான பரிகாசப் பெயர்.

இவன் கடமை பார்க்கும் தினம், அறைகளில் அமைதி நிலவும் தினமாகும். நீ விரும்புவதையெல்லாம் செய்யலாம். உன் பேரில் இவன் எரிந்து விழுந்தால் அப்போதே "உன்னையல்ல" என்று இவன் கண்ணடித்துத் தெரிவிக்கின்றான்.

கீழே இருக்கும் இன்ஸ்பெக்டர் காதில் தன் சப்தம் விழுந்து தான் கடுமையாக இருப்பதாக அவன் நினைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, சப்தமிட்டு அதட்டுவதாகக் கூறுகிறான். கடுமையாக இருக்க இவன் முயற்சி செய்தால், அது பலிக்காது. இவன் கூறும் காரணங்களை யாரும் ஒப்புக் கொள்வதில்லை. இதனால். இவன் தண்டனை பெறாத வாரமே இல்லை.

'ஓ! ஸ்ஸூ!'–கையை வீசி. இவன் தன் வழியே போகிறான். இவன் காவலாளியாக இருப்பதற்குப் பதில் இன்றும் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி போலவே நடந்து கொள்கிறான். சுவர் எதிரே காசை விட்டெறிந்து இவன் கைதிகளுடன் அறையில் 'காசு ஆட்டம்' ஆடுவதை நீங்கள் பார்க்கலாம். ஒரு நிமிஷத்துக்குப் பிறகு, அறையை சோதிக்கும் பொருட்டுக் கைதிகளைத் தாழ்வாரத்திற்கு விரட்டுவான்.



சோதனை வெகுநேரம் நடந்தால், நீ ஆவலுடன் இவன் என்ன செய்கிறான் என்று எட்டிப் பார்த்தால் அறையில் நாற்காலியில் உட்கார்ந்து ஆசாமி தூங்குவதைப் பார்ப்பாய். நிரம்ப அமைதியாகவும், சௌகரியமாகவும் தூங்குவான். இந்த இடத்தில் இவனுக்கு ஆபத்து இல்லை. ஏனெனில் யாராவது மேல் அதிகாரி வந்தால், உடனே தாழ்வாரத்தில் நிற்கும் கைதிகள் இவனை எச்சரித்துக் காப்பாற்றுவார்கள்.

பகல் வேலை நேரத்தில், இவனுக்குத் தூக்கம் அவசியமாகிறது. ஏனெனில், எதையும் விட மேலாக இவன் காதலிக்கிற பெண், இவனுடைய இரவுத் தூக்கத்தைக் கெடுத்துவிடுகிறாள்.

பாசிசம் வெற்றி பெறுமா? அல்லது முறியடிக்கப்படுமா?

"ஓ! ஸ்ஸூ!" –இந்த சர்க்கஸ் ரொம்பக் காலத்துக்கு நடக்குமென்று நீ நினைக்கிறாயா?

அவர்களில் ஒருவனாக இவன் தன்னைக் கருதுவதில்லை. அதுதான் இவனைச் சுவாரஸ்யமான ஆசாமியாக்குகிறது. இன்னும் என்னவென்றால் அவர்களில் ஒருவனாக இருக்க இவன் விரும்பவில்லை. அப்படி இருக்கவுமில்லை.

வேறு ஒரு அறைக்கு நீ ஒரு இரகசியக் குறிப்பை அனுப்ப விரும்பினால் அதை பிளிங்க் எடுத்துச் சென்று சேர்ப்பிப்பான். வெளியிலுள்ள ஒருவருக்கு ஏதாவது நீ தெரிவிக்க விரும்பினால், பிளிங்க் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்வான்.

யாருடனாவது நீ பேசி, வேறு அநேக உயிரைக் காப்பாற்றும் பொருட்டு அவனை உன் வழிக்குத் திருப்ப வேண்டியிருந்தால் உன்னை அந்த ஆசாமியின் அறைக்கு அழைத்துச் சென்று, நீ பேசி முடிக்கும் வரையில் பிளிங்க் வெளியே காவல் புரிவான். ஜாக்கிரதையாக இருக்கும்படி, இவனை நீதான் அடிக்கடி வற்புறுத்த வேண்டியிருக்கிறது!

ஏனெனில் ஆபத்துக்களுக்கு நடுவே இருக்கும்போது. இவன் அதைப்பற்றி அதிகமாக உணர்வதே இல்லை; இவன் செய்கிற நல்ல காரியங்கள் எப்படிப்பட்ட முக்கியத்துவமுள்ளவை என்பது பற்றி இவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை.

தன்னால் முடிந்த அளவுக்கு நல்ல காரியத்தைச் செய்வது இவனுக்கு மன நிம்மதியைத் தருகிறது. ஆனால் இது இவனுடைய உண்மையான வளர்ச்சியில் குறுக்கிடுகிறது.

இவன் பண்பு பூர்த்தியாகவுள்ள மனிதன் அல்ல; ஆனால் அப்படிப்பட்டவனாக வளர்கிறான்.

## 'கோலின்'

இராணுவச் சட்டம் அமுல் நடந்தபோது ஒருநாள் மாலையில் நடந்தது இந்தச் சம்பவம்: எஸ்.எஸ். உடுப்பு உடுத்தியிருந்த ஒரு காவல்காரன், என் அறைக்கு வெளியே நின்றான். என்னை அறைக்குள் நுழைய விட்டவுடன் அவன் என் சட்டைப்பைக்குள் அலட்சியமாகக் கையை விட்டான். சோதித்தவாறு, 'எப்படி இருக்கிறாய்?' என்று காதோரமாக மெதுவாகக் கேட்டான்.

> **அவன் என் சட்டைப்பைக்குள் அலட்சியமாக கைவிட்டான். "எப்படி இருக்கிறாய்?" என்று காதோரமாகக் கேட்டான்.**

"எனக்குத் தெரியாது. நாளைக்கு என்னைச் சுட்டுக் கொல்லப் போவதாக அவர்கள் சொன்னார்கள்?"

"அதைக் கேட்டுப் பயந்துவிட்டாயா?"

"அதை நான் பல நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

ஒரு விநாடி அவன் என் கோட்பைக்குள் கையை விட்டான்.

"அப்படிச் செய்தாலும் செய்வார்கள். நாளைக்கு என்பது என்னவோ இருக்காது. சில நாட்களுக்குப் பிறகு ஒரு வேளை சுடலாம். சுடாமலிருந்தாலும் இருக்கலாம். ஆனால் இது போன்ற காலத்தில்.. எதற்கும் தயாராயிருப்பது நல்லது!"

பிறகு அவன் பேசவில்லை. சிறிது நேரம் மௌனம்.

"ஆனால் அவர்கள் சொன்னபடி செய்து விட்டால்... யாருக்காவது ஏதாவது சொல்லியனுப்ப விரும்புவாயா? அல்லது ஏதாவது எழுத விரும்புவாயா? இப்போது உடனடியாகப் பிரசுரிப்பதற்கு அல்ல; வருங்காலத்தில் பிரசுரிப்பதற்குத்தான், புரிகிறதா? நீ எப்படி இங்கு இழுத்துவரப்பட்டாய்? யாராவது உன்னைக் காட்டிக் கொடுத்தார்களா? எப்படி எப்படி யார் யார் நடந்து கொண்டனர் என்பதைப் பற்றித்தான்–உனக்குத் தெரிந்தது உன்னோடு அழியாமல் இருப்பதற்காகத் தான்."

உனக்கு எழுதப் பிரியமா? அடேயப்பா! என்ன கேள்வி. ஆசைப்படாதவனிடம் கேட்பதைப் போல!

ஒருநொடியில் அவன் காகிதமும் பென்ஸிலும் கொண்டு வந்தான். அவற்றை நான் ஜாக்கிரதையாக ஒரு இடத்தில்-சோதனையில் கண்டுபிடிக்க முடியாதவாறு ஒளித்து வைத்தேன்.

ஆனால் அவற்றை நிரம்ப நாட்கள் வரை தொடவே இல்லை.

எனக்கு நம்பவே முடியவில்லை. நல்ல காரியத்திலேயே நம்ப முடியாத அளவுக்குச் சிறந்த சேவை! இந்த இருண்ட கட்டிடத்தில், கைதாகிச் சில வாரங்கள் கழிந்த பிறகு உன்னை அதட்டியும் அடித்தும், சித்திரவதை செய்வது ஒன்றையே தொழிலாகக் கொண்டுள்ள ஆசாமிகளின் உடுப்பில், ஒரு மனிதனை–நிஜமனிதனைப் பார்ப்பதைவிட அதியற்புத ஆச்சரியம் ஒன்று இருக்க முடியுமா?

உனக்குத் தன் கரத்தைக் கொடுத்து, இந்தக் கொடுமைகளுக்குப் பிறகும் வாழக்கூடியவர்களுடன் ஒரு நொடி நேரம் பேசுவதற்கு உதவி செய்யும் மனிதனைக் காண்பது என்றால்.....!

அதுவும் சுடப்படுவதற்காக அவர்கள் பெயர்களைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில், இரத்தத்தைக் குடித்து வெறி கொண்டிருக்கும் மிருகங்களின் நடுவில், விரும்பினாலும் கூச்சல் போட்டு அழ முடியாதவாறு பயத்தினால் தொண்டை அடைத்து நிற்கும் ஆட்களுக்கு இடையில், அப்படிப்பட்ட ஒருவனைக் காண்பது என்றால்.....!

அப்படிப்பட்ட நேரத்தில் ஒரு நண்பனைப் பார்ப்பது– ஊஹூம், நம்ப முடியாது. இது உண்மையல்லவென்றால், நிச்சயம் ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் என் நிலையில் இருக்கும் ஒருவனிடம், தானாக வலிய வந்து ஒருவன் நட்புப் பாராட்டி, உதவி செய்ய முன்வருகிறான் என்றால், அவன் மனோ தைரியம் எத்தகையதாக இருக்க வேண்டும்! எத்தகைய துணிச்சல்!

சுமார் ஒரு மாதம் கழிந்தது. இராணுவச்சட்டம் ரத்துச் செய்யப்பட்டது. கூச்சல் ஒய்ந்தது. கொடூரமான நேரங்கள், நினைவுகளாக மாறின. மீண்டும் ஒருநாள் மாலை: நான் அதே காவலாளியுடன் 'விசாரணை' முடிந்து திரும்பிவந்தேன்.

"நீ தாக்குப் பிடித்துத் தப்பிப் பிழைத்து விட்டாய் இல்லையா? எல்லாம் சரிதானே?" –உபசரிப்பது போலப் பேசினான்.

அவன் குறித்தது என்ன என்பது எனக்குத் தெரியும்; அந்தக் கேள்வி என் மனதில் ஆழப்பதிந்தது.. அது, மற்ற எதையும் விடத் தெளிவாக அவனுடைய நேர்மையை எனக்கு உணர்த்திற்று. அந்தக் கேள்வியைக்கேட்க, தார்மீக உரிமையுள்ள ஒருவனே அதைக் கேட்டிருப்பான். அந்த விநாடியிலிருந்து நான் அவனை நம்பினேன். அவன் எங்களில் ஒருவன்.

முதல் பார்வையில் அவன் விநோதமான ஆசாமியாகத் தோன்றினான். தாழ்வாரத்தில் தனியாக நடந்தான்– நிதானமாக, மௌனமாக, உஷாராக, கவனமாக நடந்தான். அவன் எரிந்து விழுந்து கூச்சல் போடுவதே இல்லை.

(தொடர்ந்து வரும்)

# நீ யாயங்கள்

ஏழக்குக் கண்ணாடியைச் சரி செய்தபடி பதின்மூன்றாவது தடவையாக கடிகாரத்தைப் பார்த்தார் ஜெகநாதன். 'ம்... மணி மூன்றாகிறது. இன்னும் சிறிது நேரத்தில் பெண்பார்க்கும் படலத்திற்காகப் பிள்ளை வீட்டார் வந்து விடுவார்கள். இம்முறையாவது இந்த சம்பந்தம் கூடி வந்துவிட வேண்டும்.' என மனதில் இறைவனை வேண்டிக் கொண்டவர் தன்னை அறியாமல் கைகளையும் கூப்பிவணங்கிக்கொண்டார். பெண்ணைப் பெற்றவர் ஆயிற்றே!

இருபத்தைந்தாவது தடவையாக தன்னை அலங்கரித்துக் கொண்டு மாப்பிள்ளை வீட்டாருக்காகக் காத்திருந்தாள் சாருமதி. அவளது கண்களில் சலிப்பு தென்படவில்லை, பதிலாக எதிர்பார்ப்பு கலந்த ஏக்கம் தென்பட்டது. தவிப்புப் தென்பட்டது. இருபத்தெட்டு வயதும் முடிந்துவிட்டது; இன்னும் திருமணமாகவில்லை, என்பதை நினைக்க அவளுக்கு தவிப்புடன் கவலையும் பிறந்தது. இந்த சீதனப்பிரச்சனை மாத்திரம் இல்லாவிட்டால் இந்நேரம் குறைந்தது. இரண்டு குழந்தைகளுக்காவது அவள் தாயாகி இருப்பாள். 'சீதனம்.. சீதனம்.. சீ...தனத்தைத்தானா எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்? பெண்ணின் அழகு. அறிவு நற்குணம் எதுவுமே இவர்கள் கண்களில் தெரிவதில்லை. கடவுளே இந்த சீதனம் கேட்பது எத்தனை தவறானது?' முதல் தடவையாக மனம் சலித்தாள் சாருமதி.

ஆயிற்று, மாப்பிள்ளை வீட்டார் வந்து பெண்ணையும் பார்த்தாகிவிட்டது. வனப்புமிக்க சாருமதியை மாப்பிள்ளை உட்பட அனைவருக்கும் பிடித்துவிட்டது. மாப்பிள்ளை மதனின் கம்பீரமான உருவம் சாருமதிக்கும் பிடித்துவிட்டது.

'யாருக்கு யாரைப்பிடித்து என்ன பயன்? அடுத்து, சீதனம் பற்றிக் கேட்பார்களே,' என்று கலக்கத்துடன் திரை மறைவில் நின்றாள் சாருமதி.

மதனின் தாய்தான் முதலில் பேச ஆரம்பித்தாள். "எங்களுக்குப் பெண்ணைப் நன்றாகப் பிடித்துவிட்டது. சாரு, அழகாக அடக்கமாக இருக்கிறாள். சீதனம், கீதனம் என்று எங்களுக்கு எதுவும் வேண்டாம். பெண் வந்து எங்கள் வீட்டைப் பொறுப்பாகப் பார்த்துக் கொண்டால் போதும். தொடர்ந்து வேலைக்குப் போக வேண்டிய அவசியமும் இல்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று ஜெகநாதனைப் பார்த்தாள்.



ஜெகநாதன் மனைவி பார்வதியைப் பார்த்தார். அவள் ஜாடையால் உள்ளே அழைத்தாள். வந்திருந்தவர்களிடம் "ஒரு நிமிடம்" என்று கூறியவர் எழுந்து, உள்ளே சென்றார். சாருமதியும் தந்தையின் பின்னோடு சென்றாள். அப்பா, அம்மாவிடம் கூறினார்:

**எம் சண்முகராஜா-பதுளை**

"எனக்கு இந்தச் சம்பந்தம் பிடிக்கவில்லை பார்வதி. பையனுக்கு ஏதும் தீராத நோய் நொடி இருக்கோ என்னவோ? இல்லாவிட்டால் ஏன் சீதனம் வேண்டாம் என்கிறார்கள். என்ன குறையோ யார் கண்டது" என்றார் "அதானே ஏதாவது பெரிய இரகசியம் இருக்கும்; நீங்க போய் மாப்பிள்ளை வீட்டாருக்கிட்ட நாம யோசிச்சு, கடிதம் போடுகிறோம்னு சொல்லுங்க!" என்றாள் அம்மா. தலையை ஆட்டியபடி வெளியே சென்றார் அப்பா.

சாருமதிக்கு அழுவதா? இல்லை சிரிப்பதா? என்றே தெரியவில்லை. சீதனம் கேட்டாலும் குற்றம். கேட்காவிட்டாலும் குற்றமா? ஆண்கள், சீதனம் கேட்பது, இப்போது தவறான செயலாக அவளுக்குத் தெரியவில்லை; மாறாக நியாயமானதொரு செயலாகத் தென்பட்டது.

www.padippakam.com

# ஒரு நட்சத்திரம்

ஷஹிர்ஷா தாஸிம்–தர்கா நகர்

தூங்க ஆரம்பிக்கலாம் என்று அப்பாஸ் தீர்மானித்தான். எழுந்தான்; ஜன்னல் கதவைச் சாத்திவிடலாம் என்று நினைத்தவன் அதன் அருகே சென்றான்; எதிர் வீடு தெரிந்தது. ஓர் அறையில் விளக்கு எரிந்தது. மீண்டும் ஜன்னலில் அவள் உருவம்... அப்பாஸ் ஒரு மாதமாக அவளை அந்த அறையில் தரிசிக்கத் தவறுவதே இல்லை. பெருமூச்சு விட்டு, கண்களை மூடி ஆசுவாசப்படுத்திக்கொண்டான். கடிகாரத்தின் அலாரம் அடித்து ஓய்ந்தது. அவளது நினைவுகளை மறக்க மிகவும் சிரமப்பட்டான். அடிக்கடி அவள் வரவுக்காக ஜன்னலோடு நிருபணமாகிப் போனான். ஒவ்வொரு வினாடியும் அவளை நினைத்துக் கொண்டே இருந்தான். அப்பாஸ் மீண்டும் ஜன்னல் வழியே அவளை எட்டிப்பார்த்தான். அவள் தன் அறையில் உலவுவதைப் பார்த்தான். அவள் தனிமையில் அடிக்கடி சிரித்தாள். ஏனோ அவளது அசைவுகள் அப்பாஸுக்குள் புதிதான ஒரு விருப்பத்தை உண்டாக்கியது.

*வானவில் எதற்கு?*
*அவளே*
*வர்ணமாய்*
*வந்ததன் பிறகு.*
*தென்றலுக்கு*
*அங்கு என்ன வேலை?*
*விழுந்து விழுந்து*
*சிரிக்கிறதே...!*

சற்றுநேரம் கழித்து அப்பாஸ் தன் படுக்கைக்கு வந்து படுத்துக்கொண்டான். சற்று நேரம் கழித்து கதவைத் திறந்து கொண்டு அப்பாஸின் நண்பன் ஷஹீமுல்லா வந்திருந்தான். காதலையும், காதலிப்பவர்களையும் அடியோடு வெறுப்பவன்.

"என்னடா அப்பாஸ், தூக்கம் வரலியா?" என்றான்.

"தூங்க விடமாட்டேன் என்கிறது.."

"ஓ.. காதலா...?"

"ஏறக்குறைய அப்படித்தான்.." என்று சிரித்தான்.

ஷஹீமுல்லா அப்பாஸைச் சற்றே வியப்புடன் பார்த்தான்.

"எத்தனை நாள் இந்தப் பரிசோதனை?"

"எதிர் வீட்டுக்கு குடிவந்த முதல்நாள்ல இருந்தே என்னை அவள் வசப்படுத்திட்டா."

அன்று ஞாயிற்றுக்கிழமை-வானில் மெல்லிய நட்சத்திரங்கள் துளிர்விட ஆரம்பித்தன. அப்பாஸ் வெளிவேலைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பினான். ஆவலும் தயக்கமுமாய் ஜன்னலில் அவளைத் தேடினான். ஜன்னல் வெறுமையாகவே இருந்தது. ஜன்னல் திரைகள் காற்றில் அசைந்தன. நள்ளிரவில் நிலா வெளிச்ச முதிர்வு பெற்று அவள் அறைக்குள் சதுரமாக மட்டும் தெரிந்தது. அப்பாஸின் கண்கள் அவளைத் துழாவின. கண்களில் அவள் தட்டுப்படவில்லை.

*இரவெல்லாம்*
*ஜன்னலுக்கு யார்*
*திரைகள் இட்டது..?*
*இடையில் மறைந்ததே*
*அவள் நிலா முகம்!*

என்னென்னவோ உந்துதல்கள் அவனுள் தோன்றி அவனை அலைக்கழித்தன. சரியாக உண்ணுவது இல்லை; உறங்குவது இல்லை; தன்னைப் பேணுவது இல்லை; யாரோடும் நெருங்கிப் பழகுவதில்லை. அறைக்குள்ளேயே சுருண்டு கிடப்பது; இலக்கற்று நடப்பது; நத்தையாய் ஒடுங்கிப் போவது. அவள் வரும் திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். 'அவள் என்னை மறந்துவிட்டாளா...? வேறு யாரையாவது நேசிக்கின்றாளா...? வீட்டை விட்டு எங்கையாவது போய்விட்டாளா..?' அப்பாஸ் தன்னை மறந்து கலங்கிக் கொண்டிருந்தான். இரவு 8 மணியாயிற்று. பசி வயிற்றை உறுத்தவே எழுந்து சென்று சாப்பிட உட்கார்ந்தவன் சோற்றைப் பிசைந்த போது வயிற்றில் ஒரு சுழற்சி...! இதயத்தைப் பிழிவது போன்ற ஓர் உணர்ச்சி. உடல் முழுவதும் ஒரு சோர்வு; கையைக் கழுவிக் கொண்டு மீண்டும் ஜன்னல் ஓரமாக வந்து உட்கார்ந்து சுவரில் தன் உடம்பைச் சாய்த்துக் கொண்டான்.

அன்று வெளியில் இருள் கடுமையாகவே இருந்தது. நட்சத்திரம் ஒன்று வானத்தில் சரிந்து விழுந்தது. மரங்களின் அசையும் வேகத்தில் கிழிபடும் காற்றுச் சிதறலின் இதமான ஸ்பரிசம் அவனுடைய உடம்புக்குச் சுகமளித்தது. நேரம் ஆக ஆக நெஞ்சுக் கொதிப்பு குறைந்தது.

என்ன ஆச்சரியம்! எதிரே வீட்டின் வலது கோடியில் நின்றபடி சிறிய ஜன்னல் வழியாக அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். சகஜ நிலைக்கு மெல்ல மீண்டவன் அவளையே சில வினாடி வெறித்தான். அவன் இதயத்தின் இறுகிய பிடிப்பு சட்டென்று தளர்ந்து ஒரு இயல்புக்குத் திரும்பியது.

*வானமே..!*
*உன்*
*வாதம் எதுவானாலும்,*
*விடியலைக்*
*கண்டு கொண்டது.....*
*அவள்*
*விழிகளில் தான்!*

அவளது அந்தி நிலவு நிறத்தையும், சந்தன முகத்தையும் வண்டுக் கண்களையும், இரட்டைப் பின்னலையும்... அப்பாஸ் அசையாது- எந்தச் சலனமும் இல்லாது பார்த்துக் கொண்டிருந்தான். அவன் புத்தி அமைதியடைந்தது. உடல் ஆழ்ந்து ஓய்வு எடுத்தது. வானத்தில் நிலா பாதியாக ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

தற்போதெல்லாம் அப்பாஸ் அவளுடைய வீட்டுக்குப் போய்வரத் தொடங்கினான். அவளது மாமாவுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டான். ஆனால் அவளை ஒரு தடவை கூடச் சந்திக்கும் வாய்ப்பு அவனுக்கு கிடைக்கவேயில்லை. அவன் அங்கு போகும் நேரங்களிலெல்லாம் அவளது அறை மட்டும் எவ்வித ஆரவாரமும் இன்றி பூட்டியே கிடந்தது. அவளுக்கு மட்டும் ஏன் இந்தச்சிறை வாழ்க்கை? 'என் கண்ணில் படாமல் நான்கு சுவர்களுக்குள் மட்டும் அடைபட்டுக் கிடக்க ஒரு சிறை

**எதிரே வீட்டின் வலது கோடியில் நின்றபடி சிறிய ஜன்னல்வழியாக அவள் பார்த்துக்கொண்டிருந்தாள்.**



வாழ்க்கையை ஏற்படுத்தியது யார்? நினைத்த இடத்திற்குச் செல்ல முடியாமல், விரும்பியதைச் செய்ய முடியாமல்...!!' சில சமயங்களில் அப்பாஸின் எண்ணங்கள் பலவாறு அவனையும் மீறி இயங்க ஆரம்பித்துவிடுகின்றது.

அந்தி சாயும் வேளையில் கட்டிலில் படுத்து பாதி விழிப்பும் பாதி தூக்கமுமாய் இருந்த அப்பாஸ் அறைக்கதவு தட்டும் சத்தம் கேட்டு எழுந்தான்.

வெளியே அவளது மாமாவின் குரல் கேட்டது.

அப்பாஸ் அவரை அழைத்து வந்து உட்கார வைத்தான்.

"அங்கிள், நீங்க இந்த ரூமுக்கு வந்தது எனக்கு எத்தனை சந்தோஷமா இருக்கு தெரியுமா?" அவர் உதடு விரித்து மனம் விட்டுச் சிரித்தார்.

அப்பாஸ் அந்த ஒரு நிமிடத்தில் கரைந்து போய்விட்டான். மனசிலிருப்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளத் தீர்மானித்தான். கொஞ்சம் நிறுத்தி-அவரின் கைவிரல்களை தன் விரல்களோடு கோர்த்தபடி தழுதழுத்த குரலில் சொன்னான்:

"அங்கிள் எனக்கு எவ்வளவோ வசதிகள் இருந்தும் ரொம்பவும் தனிமையில இருக்காப்பல உணர்றேன். எனக்கு மனசு விட்டுப் பேச யாருமே இல்லை அங்கிள்."

அப்பாஸ் மிக இயல்பாக நடந்து கொண்டான்.

"தம்பி பயப்படணும்கற அவசியமே இல்லை. இந்த அங்கிள் இருக்கிற வரைக்கும் நோ... பிராப்ளம்.. எதுவானாலும் சொல்லலாம்..."

அப்பாஸ் அவளை நேசிப்பதைப்பற்றி மிக மிகத் தயக்கத்துடன் திக்கித் திணறி சொல்லி முடித்த போது அவர் அப்படியே பிரமித்துப்போனார்.

"அங்கிள்.... நான் அவளை வெளியிலே பார்த்ததே இல்லை. ஏன் இப்படி? எதற்காக இந்தச் சிறை வாழ்க்கை? அவளும் ஒரு பெண் தானே?"

அறைக்குள் ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. அவர் மிகவும் பிரயத்தனத்துடன் அப்பாஸைப் பார்த்து புன்னகைக்க முயன்றாலும் சுர வேகத்தில் உதடுகள் வறண்டு முகம் இரத்தமிழந்து காணப்பட்டது.

"என்ன அங்கிள் பேச்சைக் காணோம்?" அப்பாஸ் அவரின் மௌனத்தைக் கலைத்தான். அவர் லேசாகத் தொண்டையை கனைத்துக் கொண்டே,

"ஸாரி.. மை.. டியர்... ஸன்..! அவள் என் தங்கச்சி மகள். இந்த இருண்ட உலகிற்கு ஒரு நிமிடம் மட்டுமே ஒளி கொடுத்து விட்டுக் கருகிச் சாம்பலாகிப் போன எரிநட்சத்திரம். அந்தக் கூண்டை விட்டு வெளியே வந்தால் அவள் என்ன செய்கிறாள் என்று அவளுக்கே தெரியாத நிலை. பெண்ணின் நெஞ்சம் பஞ்சு போன்ற மென்மையானது. நேசித்தவனை இழந்து விட்டால் எல்லாவற்றையும் இழந்து விடுகின்றாள். அவளும் அப்படித்தான். கல்லூரியில ஒரு பையனை நேசித்தாள். அவன் இவளை ஏமாற்றியதால் இவள் ஒரு மனநோயாளியாகிட்டாள்...." அவரால் மேலே சொல்ல முடியாமல் தொண்டை அடைத்து கண்களை மூடிக்கொண்டார்.

"அவள் ஒரு மனநோயாளியா..?" அப்பாஸ் அப்படியே திடுக்கிட்டுத் திகைத்துப் போனான். அவன் இதயச் சதைக் கூட்டத்தில் நரம்புகள் வழியாகப் பதட்டம் பல்லாங்குழி ஆடியது. அப்பாஸின் முகம் இறுகிப் போனது. துக்கத்தோடு துக்கம் துணைசேர வந்த மாதிரி நினைத்து கறுத்துப் போனான். துக்கத்தோடு ஒரு சிலைபோல நின்றான். அவனது இமைகளில் பாறாங்கல் வைத்த மாதிரி கனத்தது. உணர்வில் சிக்கல் ஏற்பட்ட மாதிரி வருத்தமாக முகம் காட்டினான்.

அவர் அப்பாஸின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

*ஜன்னலில்*
*அவள் உருவத்தைத்*
*தேடினேன்...*
*பாவம்*
*சிலுவையில்*
*அறையப்பட்ட*
*சின்னமாய் அவள்!*

☆☆

# "நான் நலம்!"

யாழ்–ஞானகணேசன்

"டேய் ரவி, எனக்கு கையை வெட்டுதடா. கொஞ்சம்..." தளர்ந்த குரலில் தவித்தழுதான் சுரேஸ்.

அந்த நடுநிசியில் ஒரே சங்கிலியில் ஐந்துபேரும் பிணைக்கப்பட்டு, அந்தச் சிறிய அறையில் அடைக்கப்பட்டிருந்தோம். கால் நீட்டக் கூட கரிசனை கிடையாது. ஒரு கயிற்றில் பிணைக்கப்பட்ட மாடுகள் மாதிரி. மாதிரி என்ன மாடுகள் தான். ஒருவர் சிறிது அசைந்தால், பாவம் மற்றவர்கள்.

"டேய், கொஞ்சம் தள்ளி..." மீண்டும் சுரேஸ் அழத்தொடங்க, நான் இடையில் முந்திக் கொண்டு,

"டேய், கதைக்காதை. கால் சத்தம் கேக்குது". அவ்வளவுதான் இனி அவன் வாய் திறக்க மாட்டான்.

இன்று காலை, நிலவு தன் படுக்கைக்கு ஆயத்தமான நேரம். சுமாராக நாலரை மணி இருக்கும். நானும் என் நண்பர்களும் குடியிருந்த வீடு சுற்றி வளைக்கப்பட்டது. வழமையாகவே ஏழரை மணிக்கும் பாயில் தவழும் எங்களை இன்று கட்டளைகள் கண்டிக்கத் தொடங்கின.

சங்கர் விழி பிதுங்க அடையாள அட்டையை நீட்டிய வண்ணம், "வீ யா யூனிவேர்சிற்றி ஸ்ருடன்ஸ்" என்றான்.

அவனை முந்திய சுரேஸ் அரைகுறை சிங்களத்தில் "விசுவ வித்தியாலய" என்றான்.

"ம்.ம்... வா, வா எல்லாம் ஏறு" சீருடை சினந்து பேசியது.

அவ்வளவுதான். வாகனம் ஐவரையும் பிழிந்து கொள்ள எங்கள் விழிகள் பிதுங்க முகாமையடைந்தோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு அறையில். மலசலகூட நாற்றம் மூக்கைத் துளைத்தது. சமாளித்துக் கொண்டு தரையில் அமர்ந்தேன். அசிங்கமா?. அடுத்த சூறாவளியை எதிர்பார்த்திருந்த எனக்கு இது சுகபோகமே!

கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்கள் சென்றிருக்கும், நான் விசாரணைக்காக அழைக்கப்பட்டேன். முழக்கங்களை எதிர்பார்த்து என் முதுகு விறைத்துப்போயிருந்தது. முதற்கேள்வி. "வந்த வேலை முடிஞ்சிதா?"

"இல்லை. இன்னும் ஒரு வருஷம் இருக்கு."

"எதுக்கு?"

"படிப்பு முடிய"

மீண்டும் "வந்த வேலை முடிஞ்சிதா?"

நான் பதில் கூறவில்லை. "வேலை" என்றதின் அர்த்தம் விளங்கிக் கொண்டேன். "ஆம்" என்றாலும் "இல்லை" என்றாலும் ஆவது ஒன்றுதான்.

மேலும் கேள்விமேல் கேள்விகள். நான் மட்டுமல்ல என் நண்பர்களும் வேள்விக்குத் தயாரான ஆடுகளாக....

இரவு ஒன்பது மணி இருக்கும். விசாரணை முடிவடைந்தது. திருப்தி. நாளை காலை வீடு செல்லலாம்.

***



மறுநாள் காலை வீடு வந்து சேர்ந்தோம். ஊரில் இருந்து அம்மாவின் கடிதம் வந்திருந்தது.

தம்பிக்கு,

உங்கை பிடிக்கிறாங்கள் எண்டு பேப்பரிலை கிடக்குது. கவனமாய் இரு.

கையில் ஓர் ஒற்றையும் பேனையும் எடுத்த நான், எழுதத் தொடங்கினேன்.

அன்பின் அம்மாவுக்கு,

நான் நலம். இங்கு ஒரு பிரச்சனையுமில்லை. நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை.

இப்படிக்கு அன்பின்,
மகன்.

# வறுமைப் பூக்கள்

ரூபராணி

காளியம்மாவின் மகளுக்கும், கருப்பன் கங்காணியின் மகனுக்கும் கலியாணம் நடந்து கொண்டிருந்தது. "வாராயோ என்தோழி வாராயோ" என்ற பாட்டு ஸ்பீக்கரில் சத்தமாகக் கேட்டது. அங்கும் இங்கும் ஆரவாரம். சின்னஞ்சிறுசுகளின் கும்மாளம். வயது வந்தவர்களின் குடிபோதை உளறல். அந்த லயம் முழுவதையும் சந்தோஷத்தில் மூழ்கடித்தது.

ராமாயி எதிலும் ஒட்டிக்கொள்ளாமல் அவளுடைய காம்பறாவின் ஒதுக்குப் புறத்தில் கிடந்த சுள்ளி விறகுகளை ஒடித்துக் கட்டுகளாக்கிக் கயிற்றால் முடிந்து கொண்டிருந்தாள். மறந்துவிடாமல் மடியில் இருந்த புகையிலைத் துண்டைப் பல்லில் தேய்த்துக் கொடுப்பில் திணித்தாள்.



வாசல்படியில் காலரவங்கேட்டுத் தலையைத் திருப்பிப் பார்த்தாள். அரைக்கால் சட்டை, சேட், சப்பாத்துடன் உள்ளே நுழைந்தான் தங்கராசு, ராமாயியின் ஏகவாரிசு அவன். அவனுடைய முகத்தில் மகிழ்ச்சி பரவிக்கிடந்தது. வந்தவேகத்தில் தங்கராசு புத்தகப் பையை நிலத்தில் போட்டு விட்டு தன் தாயின் பக்கத்தில் இருந்தான். பழுப்பேறிய அந்தப்பையிலிருந்து அவன் தன், றிப்போட்டை வெளியே எடுத்து "ஆத்தா.. இதப்பாரன்" என்று உற்சாகமுடன் காட்டினான். அவன் உடல் பூராவும் குதூகலத்தில் குளித்தது.

"எனக்கென்னப்பாபடிக்கவா தெரியும்? நீயே படிச்சிச் சொல்லன்!" ராமாயி தன் காவி படிந்த பற்களை வெளியே காட்டினாள். "ஆத்தா சோதினை முடிஞ்சி.. பாசாயிட்டன் நா...தான் வகுப்பில முதல். இனி எட்டாவது வகுப்பு. என்னை, பெரிய மாஸ்டர் ரொம்ப ஒசத்தியாச் சொன்னார் ஆத்தா."

"மாரியாத்தா மகமாயி எம் மகன் எம் புட்டுக்கெட்டிக்காறன்! இதப்பாக்க அவன் அப்பன் குடுத்து வைக்கல. தங்கராசு நல்லாயிருக்கணும்!" ராமாயி கண்ணைமூடி மனசுக்குள் தன்னை ஒரு கணம் மறந்திருந்தாள். சட்டென்று தங்கராசுவின் பெரிய மாஸ்டர் ஒருநாள் சொன்னது அவள் ஞாபகத்தில் எட்டியது. "ஒன் மகன் ஒரு நாளைக்குப் பெரிய உத்தியோகம் பார்ப்பான். அவனுக்கிருக்கிற அறிவுக்கு அவன் டாக்டராக வந்தாலும் வருவான். என்ன பாடுபட்டும் அவனப்படிக்க வச்சிடு!" நினைவுகளில் நீந்திய ராமாயிக்கு தங்கராசு ஆஸ்பத்திரியில் ரெற்றஸ்கோப் கழுத்திலசைய.. டொக்.. டொக் என்று நடந்து வருவதுபோல் தெரிந்தது. தன்னை அறியாமல் சிரித்து விட்டாள். "ஏன் ஆத்தா சிரிக்கிறே?"

"சும்மாதான் நீ ஒரு டாக்டரா வர்ராப் போல நெனச்சன். சிரிப்பு வந்திடிச்சி. ஏழைங்களுக்கெல்லாம் நெனவில தான் சுகமிருக்கு." ராமாயி பெருமூச்சுவிட்டாள்.

"ஆத்தா, நீ வேணும்னாப் பாரன். நா ஒரு நாளைக்கு நெஜமா டாக்டரா வந்து ஒன் கண்முன்னால நிக்கத்தான் போறன்!" தங்கராசு சொல்லிக்கொண்டே "ஆத்தா பசிக்குது", என்றான். ராமாயி றொட்டியையும் சம்பலையும் தட்டில்போட்டுவிட்டு மறுபடியும் விறகுச் சுள்ளிகளைக் கட்டி எடுத்து அடுப்பங்கரையில் போட்டாள்.

"கண்டிராக்டர் அம்மா எனக்கு உதவினா நா.. ஆளாயிடுவன் ஆத்தா." கோளாத் தண்ணீரைக் குடித்த தங்கராசு ஏக்கத்தோடு சொன்னான்.

"அந்தம்மா தங்கப் பவுணுடா. பேரும் தங்கந்தான், ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒரு மகன், சும்மா உக்காந்து மூணு தலமுறைக்குச் சாப்பிடலாம். அவங்க மகராசியாய் இருக்கணும்!" ராமாயியின் மனதில் ஊற்றெடுத்த நன்றி அவள் கண்களில் ஈரமாய் நனைந்தது.

ராமாயி, கண்டிராக்டர் கணேசு வீட்டில் தினசரி வேலைபார்ப்பவள். எடு பிடி வேலை, சமையல், தோட்டத்துக்கு நீர் ஊற்றல் என்றிப்படி எல்லாவேலைகளையும் செய்து முடித்துவிட்டு வீடு திரும்புவது வழக்கமான செயலாகும். அந்த அம்மாள் தங்கம் கொடுக்கும் சம்பளம் வயிற்றைக்காயவிடாமலும் தங்கராசுவின் பள்ளிச் செலவுக்கும் போதுமாக இருப்பதில் ராமாயிக்குப் பரமதிருப்தி.

"ஆத்தா என்ர றிப்போட்டக் கண்டிராக்டர் அம்மாக்குக் காட்டி வர்ரியா?" தங்கராசு திண்ணைக் கட்டிலிருந்து குரல் கொடுத்தான். தங்கராசு சொல்றது சரிதான். றிப்போட்டப் பார்த்தா அந்த அம்மா சந்தோஷப்படுவாங்க. தனக்குள்ளே முணுமுணுத்தாள் ராமாயி.

ராமாயியின் கால்களுக்கு அப்படியொரு வேகம் எப்படி வந்ததோ? அடிமடியில் றிப்போட்டைச் சுமந்து கண்டிராக்டர் வீடுபோய்ச் சேர்ந்தாள். "உனக்கெல்லாம் ஒரு இன்ரநஷனல் ஸ்கூல்.. போக வரவாகனம், ரியூஷன், பொக்கற்மணி, நினைக்கவே அவமான மாருக்கு. பெயிலாகிற்று வந்து வெக்கமில்லாமல் நிக்கிறியே.. என் அந்தஸ்து, கௌரவம் எல்லாத்தையும் பாழடிச்சிட்டியேடா, நம்ம வீட்டுவேலைக்காறிட மகன் எப்பவும் வகுப்பில முதல். நம்மட உப்பத்தின்னுறதுகளுக்கு மூளையிருக்கு, ஆனா.. உனக்கு சீ. போடா!"

பின் கட்டில் குந்தியிருந்த ராமாயி கணேசு ஐயாவின் கூச்சல் கேட்டு உறைந்து போனாள். வாசு கடுங்கோபத்தோடு கூடத்திலிருந்து வெளியேறிச் செல்வதைக்கண்டு சிந்தனையிலாழ்ந்தாள். அவள் மடியில் சுகமாகத் தூங்கிய தங்கராசுவின் றிப்போட் இப்போது அவளுக்குச் சுமையாகப்பட்டது. அதைக் காட்டவேண்டாம் என்று எண்ணினாள் ராமாயி.

சடசடவென்று பெரும்மழைத்துளிகள். கொடியில் கிடந்த உடுப்புகளை நனைத்தது. ராமாயி அவற்றை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள். "ராமாயி நீ, எப்பவந்தே.? நீ வந்தது நல்லதாப் போச்சி. பண்டாரவளையில் இருந்து தபால் வந்திருக்கு. என் தங்கச்சி பொண்ணுக்குத் தலைப்பிரசவம். ஒத்தாசைக்கு என்னை வரட்டாம். இந்த வீடு வாசலவிட்டு நான் எப்பிடிப்போறது?" கண்டிராக்டர் அம்மா கேட்டாள். "அதுக்கு நா என்னம்மா பண்றது?" ராமாயி இடைமறித்தாள்.

"ராமாயி, உன்னட உதவியத்தான் மல போல நம்பியிருக்கிறன்."

"நீங்க என்ன சொல்றீங்க? எனக்கு ஒண்ணும் புரியலியே?" ராமாயி குழம்பிப் போனாள்.

"பண்டாரவளைக்குப் போறவிஷயந்தான். தங்கராசுக்கு ஒரு மாத லீவுதானே? அவன எனக்கு உதவியா விட்டிட்டு நீ போனா நல்லமெண்டு படுது. போறியா?"

ராமாயியின் நெஞ்சில் ஏதோ அடைத்தது போலிருந்தது. "என்னயோசிக்கிறே?"

"ஒண்ணுமில்லத்தாயி... ஒத்துக்கிறன்" வாயும் வயிறும் இருக்கிறப்போ விருப்பமெண்டு ஏதும் இருக்கா? ராமாயி தனக்குள்ளே அலுத்துக்கொண்டாள்.

கண்டிராக்டர் வீட்டில் தங்கராசு ஓடியோடிச் சுறுசுறுப்பாய் இயங்கினான். எல்லாவேலைகளையும் ஏற்றுக்கொண்டு முழுநேர வேலைக்காரனாக மாறிப் போனான். படிப்பிலும் வேலையிலும் திறமைசாலியாக இருக்கும் தங்கராசுவை கண்டிராக்டர் அம்மாவுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது.

ஒருமாதம் மெதுவாக ஓடியது போலிருந்தது ராமாயிக்கு. பண்டாரவளையிலிருந்து வந்ததும் அந்த அம்மா சொன்ன செய்தி ராமாயியை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

"ராமாயி உன் மகன் தங்கராசு நல்ல கெட்டிக்காரன். உனக்கும் வயசாகுது நீ வீட்ல ஓய்வு ஒழிச்சலாய் இரு. தங்கராசு எங்கட வீட்ல வேலை செய்யட்டும். உனக்குச் குடுக்கிற சம்பளத்த அவனுக்குக் குடுக்கிறன் படிச்சி என்னத்தக் கிழிக்கப் போறான்? நீ ஆறுதலா யோசிச்சி முடிவுக்கு வா. இல்லாட்டா நீயும் வரவேணாம்!"

காலைக் கதிரவன் கைகளை நீட்டிச் சோம்பல் முறித்தான். தங்கராசு லயத்துப் பக்கமிருந்த ஆலமரத்தடியில் மல்லாந்து படுத்திருந்தான். அவன் கண்களில் வடிந்த நீர் கழுத்தை நனைத்தது. அவனுடைய புத்தகங்கள் அந்த மண்ணில் கிடந்து காற்றில் படபடத்தன. தங்கராசு மரத்தை அண்ணாந்து பார்த்தான். அதன் கிளைகளில் சுதந்திரமாகத் தாவி ஓடியது ஓர் அணில். அது ஆலம்பழமொன்றைச் சுவைப்பதைக் கண்டு சிந்தனையில் ஆழ்ந்தான். 'இந்த அணில்கூட உண்பதற்குச் செலவில்லை; உடுப்பதற்கும் தேவையில்லை.' அந்தப் பிஞ்சு மனம் இப்படி எண்ணித் தவித்தது. தனக்காக ஆத்தா படும் பாட்டினை நினைத்துத் துடித்தது.

"தங்கராசு, நீ ஸ்கூலுக்குப்போ, ஒண்ணும் யோசிக்காத?" ராமாயியின் முகம் அழுது வடிந்தது.

"வேணாம் ஆத்தா நா, வேலக்கிப் போறன்." அவன் எழுந்து புத்தகப் பையைத் தூரப் போட்டுவிட்டு கண்டிராக்டர் வீட்டை நோக்கி நடந்தான்.



படிப்பகம்

# இரண்டும் வேண்டும்

தருவது ரசிகன்

இலக்கிய நயம்

நெடுமாறன் படைகள்
ஜய பேரிகை கொட்டின!
வேல் வேல் வெற்றிவேல் வீரவேல்
வெல் வெல் பகையை வெல்!

எதிரே தெரிந்தது எதிரியின் கோட்டை
"கதவை உடை!" கட்டளை பிறந்தது.
பாரிய யானைகள் மோத கதவு பிளந்தது!
கூரிய வேல்கள் முன்னே நீண்டன
வெற்றி முழக்கம் விண்வரை கேட்டது!

எதிரிப்படைகள் எங்குமே இல்லை;
உதிரம் சிந்தப் பயந்து பறந்தன!
நெடுமாறன் மீசை முறுக்கி நிமிர்ந்தது
கொடும் பார்வை வீசி விழிகள் சுழன்றன!

அரண்மனைவரை ரதத்தில் சென்றான்
அகம்பாவம் நெஞ்சில் ஊறிக் கிடந்தது!

அரண்மனை வாயிலில் பேராச்சரியம்
அழகுப் பெண்டிர் ஆரத்தி எடுத்தனர்.

பகைநாட்டுப் பாவையர் பல்லிளிப்பதா?
நச்சுப் புகையன்றோ இவர் நகைப்பு
தளபதி மனதில் சந்தேக விதை!

ஆரத்தி எடுத்தவர் மத்தியில் அழகுராணி
கூர்கத்தி போன்றது அவள் விழிகள்
பூங்கொத்துப் போன்றது அவள் இதழ்கள்
மாங்கனி போலிருந்தது அவள் வதனம்
கோபுரங்கள் போல் உயர்ந்த இரு எழில்கள்
காவலரண் போல் இரண்டு கரங்கள்

நெடுமாறன் தன்னை இழந்தான்.
நேர் நின்றவளை விழிக்குள் இழுத்தான்
'தாவுகின்ற இவள் விழிகள் நட்சத்திரங்கள்
மேவுகின்ற இவள் அழகு தங்கச் சுரங்கம்'
நெடுமாறன் மனது தகித்தது
நிலைதடுமாறி விழிகள் துடித்தன.

தனிமையில் தளபதி சொன்னான்;
"ஓடிய பகைவர் பாவையரை ஏன்
மூடிய கோட்டைக்குள் விட்டுப் போனார்?
சூழ்ச்சி இருக்கலாம் மன்னா
இவர்கள் சூனியப் பெண்கள்!"

"மெல்லிடை மயில்கள் ஆடட்டுமேன்
மேனியில் விருந்து படைக்கட்டுமேன்
தோணியில் ஏறிய பயணிகள்போல
இன்பக் கேணியில் நம் படை குளிக்கட்டுமேன்!"
மது மயக்கத்தில் மன்னன் உளறினான்.

"தளபதி! சந்தன மயில்களுக்குள்-ஒரு
சுந்தர மயில் இருந்தாளே!
நெடுமாறன் பள்ளியறையில்-அந்த
நிலாமயில் ஆடட்டும் கலாப நடனம்!
அழைத்துவா தளபதி!-ஆனால்
நீ மட்டும் அவளை அணைத்துவிடாதே!
அவள் எனக்குரிய சொத்து-நீ
பத்திரமாய் கொண்டுவா முத்தாகக் கோர்த்து!"

தளபதி தயங்கினான்.
"அந்த அழகில் ஆபத்துத்தெரிகிறது;
கொஞ்சம் பாவையா? நஞ்சுப் பேழையா?
ஆராய வேண்டும் மன்னா அவளை!"

"ஆராயத்தானே அவள் வேண்டும் என்கிறேன்



ஆள்வதில் மட்டுமல்ல, ஆராய்ச்சியிலும் நான் மன்னன்
வாராய், வாராய்-நீ அழைத்து வாராய்!"

"எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்போ?
ஆராயாமல் அணைக்கக் கூடாது மன்னா?"

"எல்லாப் புற்றுக்குள்ளும்
பாம்புகள் இருப்பதில்லையடா முட்டாள்
பாம்புக்கும் பால் வார்க்கும் நாடு இது
தான் வார்க்கிறேன் நீ அழைத்து வா!"

தளபதி தயங்க, மன்னன் சினந்தான்.
"புரிகிறது தளபதி-நீ
வைத்திருக்கிறாய் புள்ளி!
உனக்குத் தேவைப்படுகிறாள்
அந்தக் கள்ளி!"

"மன்னா! என்மீதா சந்தேகம்?
கண்ணாக கருதுபவன் நான்
உங்கள் மீதான விசுவாசத்தை!"

தளபதி வருந்த-மன்னன் நகைத்தான்
"கண்ணாகத்தானே கருதினாய்-அந்தக்
கண்ணை ஒரு பெண்மீதல்லவா
வீசியெறிந்துவிட்டாய்!"

"ஆராயாமல் அபாண்டம் சொல்லாதீர்கள்
ஆபத்தை தடுப்பதே எனது எண்ணம்!"

"போடா முட்டாள் போ வெளியே
உன்னை ஆராய நேரமில்லை-வண்ணப்
பெண்ணை ஆராயும் வேளையிது!"
தளபதி சோகத்துடன் இடம் பெயர்ந்தான்.

மன்னனே அவள் அறை நாடினான்.
புன்னகை விரித்து அவள் வரவேற்றாள்.

மேலாடை மெல்ல நழுவியிருந்தது-அது
மோகத்தை ஊட்டும் முயற்சி.
காலாடை சற்றே விலகியிருந்தது-அது
மன வேகத்தை தூண்டும் சூழ்ச்சி.
கண்மீது மை பூசியிருந்தாள்-அது
கள் வெறி கொள்ள வைக்கும் உத்தி.
இதழ்களில் சாயம் பூசியிருந்தாள்-அது
இதயத்தில் தீயை மூட்டும் முயற்சி!

"வாருங்கள் மன்னா! வாருங்கள்"
என்றாள் இதழில் தேன் குழைத்து.

"வரவேற்பது இருக்கட்டும்-நான்
வந்த காரணம் தெரியுமா?"

"எங்கே வந்தாய் என்று
எந்த மலராவது
தேடிவரும் வண்டை விசாரித்திருக்கிறதா?"

"ஆஹா! அற்புதம்!
அழகாகப் பேசுகிறாய் பெண்ணே!"

"பேச்சில் மட்டும்தான் என்று
நினைத்துவிடவேண்டாம்!"

"வேறு எதில் உன் வல்லமை
கூறு அதை நானும் கேட்கிறேன்!"

"தனிமை என்ற அரங்கத்தில்
இளமை என்ற சுரங்கத்தில்
இனிமையாக நடத்தும் யுத்தத்தில்!"

ஒவ்வொரு சொல்லிலும்
நெளிவும் சுழிவும் கலந்து சொன்னாள்.

நெருங்கினான் நெடுமாறன்.
ஏந்தினான் அவள் பூங்கன்னத்தை!
இதழ் கிண்ணத்தை நீட்டினாள்
உதட்டால் பற்றக் குனிந்தவனை
நிறுத்தினாள்.

"நில்லுங்கள் ஒரு நிபந்தனை-பின்னர்
அள்ளுங்கள் எனக்கில்லை வேதனை!"

"விரைவாகச் சொல் என்ன நிபந்தனை?
என் உதடுகள் தாங்காது இந்தச் சோதனை!"

"முயற்சியில்லாமல் வெற்றியில்லை
கடலில் இறங்காமல் முத்தும் இல்லை.
அன்பு இல்லாமல் ஆசை இல்லை
என்னை அன்பால் வெல்லுங்கள்
அதன் பின் உங்களுக்கு தடையே இல்லை!"

"என்னடா இது புதிய தொல்லை
அன்பைக் காட்ட உண்டா எல்லை?"

"மன்னன் என்ற மமதை இல்லாமல்
தோட்டத்தில் ஒரு மலர் பறித்து வாருங்கள்."

"ப்பூ இவ்வளவுதானா?
மமதை என்ன மமதை-என்
மனதையே உன்னிடம் இழந்துவிட்டேன்!
ஒரு மலர் போதுமா- ஒரு
தோட்டத்தையே கொண்டுவரவா?"
விரைந்தான் மன்னன் ஏவலன் போல!

"நில்லுங்கள்! சாதாரண மனிதனாய்
சென்று வாருங்கள்."
நெருங்கிநின்று அவன் இடையில்
தொங்கிய வாள் அகற்றினாள்.

தோட்டம் தூரத்தில் இருந்தது
நடுநிசி இருளில் உருவங்கள் அசைந்தன
"யாரது?" வாள் எடுத்தால்
யாரும் எதிரே வரமுடியாத வீரன்
வாளைத் தேடினான்!
அதைத்தான் அவள் அவிழ்த்துவிட்டாளே!

பாய்ந்தன உருவங்கள்
நாற்புறம் இருந்தும் பாய்ந்தன வாட்கள்
மார்பிலும் துளைத்தன
முதுகிலும் பாய்ந்தன!

மன்னன் வீழ்ந்தான். மலையொன்று சரிந்தது!
தன்னுயிர் போகும் நேரத்தில்-மன்னன்
தளபதியை நினைத்தான்.

"ஆராயாமல் தெளிவடையவும் வேண்டாம்-
ஆராய்ந்து தெளிந்தவன்மீது
ஐயப்படவும் வேண்டாம்-
இரண்டும் வேண்டாம்-இரண்டும் வேண்டாம்."
மன்னன் விழிகளில் இறுதிக் கண்ணீர்!

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்!"

அதிகாரம்-51. குறள்-510.

---

ஸ்போர்ட்ஸ்

## பயிற்சி பெறுவது எப்படி?

### டெண்டுல்கர் விபரிக்கிறார்

தென் ஆபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்துவரும் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"போட்டிகள் தொடங்குவதற்கு முன் பந்து வீசும் எந்திரத்தின் உதவியுடன் பேட்டிங் பயிற்சி செய்து வருகிறேன். ஆனால் அவை வக்கார் யூனுஸ் அல்லது வாசிம் அக்ரம் அளவுக்கு நுணுக்கமாகப் பந்து வீசுவதில்லை.

இதுவரை 47 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருந்தாலும், ஒவ்வொரு போட்டிக்கு முன்பும் நான் சரிவரத் தூங்கியதில்லை. அடுத்த இரண்டு வருடத்திற்கு தொடர்ந்து சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறோம். இது எங்களது சோர்வை அதிகரிக்கும்.

முன்பு இருந்ததைவிட பந்துவீச்சு, ஃபீல்டிங் முறைகள் பலமடங்கு முன்னேறியுள்ளது. சிறந்த ஃபீல்டர்களை வைத்துக் கொண்டு ஸிம்பாப்வே போன்ற அணிகள், பெரிய அணிகளுக்குச் சிம்ம சொப்பனமாக



இருந்து வருகின்றதையும் பார்க்கின்றோம்.

நமது அணியைப் பொறுத்தவரை குறிப்பாக, இளம் வீரர்களுக்கு என்னுடைய ஆலோசனைகள் தேவைப்படுகின்றன.

இந்திய அணிக்கு ஆலோசனை சொல்பவர்கள், நமது நலனில் அக்கறை கொண்டவர்கள் என்பதால் நான் அவற்றை வரவேற்கிறேன்."

இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

## இந்திய அணியின் போட்டிகள்

இந்தியா 1997 ஒகஸ்ட் முதல் 1998 பெப்ரவரி வரை பல டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டித் தொடர்களில் விளையாடவுள்ளது.

வரும் ஒகஸ்ட் 16 முதல் 21ம் திகதி வரை இலங்கையில் நடைபெறும் ஆசியக் கோப்பை போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் கலந்து கொள்கின்றன.

ஆசியக் கோப்பை முடிவடைந்ததும் செப்டெம்பர் மாதம் கனடா செல்லும் இந்திய அணி அங்கு பாகிஸ்தானுடன் ஒரு நாள் போட்டித் தொடரில் விளையாடவிருக்கிறது.

இதைத் தொடர்ந்து ஷார்ஜாவில் நடைபெறும் ஒருநாள் போட்டிகளிலும் இந்திய அணி கலந்து கொள்கிறது.

## இவர்கள்தான் அவர்கள்



ஐஸ்வர்யா



ஜெயராம்



பிரேமானந்தா

---

## சிந்தியா பதில்கள்

★ இந்திய வெளிநாட்டமைச்சர் குஜ்ரால் விஜயம் திருப்பமாக அமையுமா?

எஸ். சந்தானம், கொழும்பு-06.

குஜ்ராலின் நோக்கமே பத்திரமான திருப்பம்தான். திருப்பதிக்குச் சென்று வேண்டுதல் செய்துவிட்டுத்தான் விமானத்தில் ஏறினாராம்.

✉ ✍

★ இலங்கையில் அரசியல் சாணக்கியத்தில் முதன்மையான இராஜதந்திரி ஜே.ஆரா, பிரேமதாசாவா, சந்திரிக்காவா?

ஏ. பெமிலா, புசல்லாவ.

முன்னவரேதான்!

✉ ✍

★ 'அவ்வை சண்முகி' தோல்விப் படமா?

எஸ். முரளி, பள்ளகட்டுவ.

வசூல் ரீதியில் வெற்றிப்படம். தீபாவளிக்கு வந்த படங்களில் இன்றுவரை முன்னணியில் நிற்பது சண்முகி மாமிதான். சென்னையில் மட்டுமே நான்கு திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது. வசூல் இல்லாவிட்டால், பொங்கல் படங்கள் திரையிட வசதியாக சண்முகியைத் தூக்கி இருப்பார்கள்.

✉ ✍

★ டியர் சிந்தியா! மலையகப் பிரச்சனைகள் ஏன் பாராளுமன்றம் செல்வதில்லை?

து. கிருஷ்ணகுமார், பொகவந்தலாவ.

சென்றால்மட்டும் என்னாகிவிடப் போகிறது?!

✉ ✍

★ மனிதர்கள் பறக்கத் தொடங்கினால் எப்படி இருக்கும்?

பெ.வசந்தி, மவுசாகலை.

நம் நாட்டில் எனில், மறக்காமல் அடையாள அட்டையையும் சிறகில் செருகிக் கொண்டு பறக்கவேண்டியிருக்கும்!

✉ ✍

★ நாகரிகம் வரம்பை மீறுவது எப்போது?

கே. தவச்செல்வன், அம்பாறை.

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி எழுதியுள்ள நூலில் இருந்து ஒரு அனுபவம்:

"ஒருநாள் வெள்ளிக்கிழமை. அமெரிக்காவின் பல்கலைக்கழகப் பகுதி. இரவு பத்துமணி. 'ஸ்டேட் தெரு' வழியாக நான் சென்று கொண்டிருந்தேன்.

அங்கே மாணவர்களும், மாணவிகளும் ஜாலியாகப் பேசிச் சிரித்து கும்மாளமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஒரு மாணவன் ஒரு மாணவியின் கையைப் பிடித்து தெருவில் இழுத்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தான்.

ஒரு கணம் அவள் அவனை நிறுத்தினாள்: "உன்னுடைய அறைக்குப் போகும் முன் உன் பெயரைச் சொல், அதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்," என்றாள் அந்த மாணவி.

✉ ✍

★ தலையில் வழுக்கை விழுவதைத்தடுக்க மருந்து இல்லையா?

சி. அருண்ராஜ், கண்டி.

வழுக்கை வந்தால் மருந்து ஏன்? அதையே இளமை விருந்தாக நினைத்துக் கொள்ளுங்கள். தேங்காயில் வழுக்கை என்பது இளமையைத்தானே குறிக்கிறது? ஹி..ஹி....ஹி..

✉ ✍

★ பெற்றோல் ராமரின் கதை என்னாச்சு?

செல்வி ஆ. சிவமலர், வவுனியா.

சென்ற ஆண்டின் அதி சிறந்த பொய்யர் விருதுக்கு அவரது பெயர் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. நான் தயாரிப்பது பெற்றோல் அல்ல, அதுமாதிரி ஒரு எரிபொருள் என்கிறார் லேட்டஸ்டாக!

✉ ✍

★ 'இருவர்' படம் யாருடைய கதை?

சி. பாஸ்கர், கொழும்பு-05.

அப்பட்டமான எம்.ஜி.ஆர்-கருணாநிதி கதை! மணிரத்னம் துணிச்சலாக இரண்டு தலைவர்களையும் குட்டியிருக்கிறார். (அதுசரி புலிகள் பற்றிய கதை என்று முன்னர் ஒரு புரளி வெளியாக, முரசு அதை மறுத்தது ஞாபகம் இருக்குங்களா?)

✉ ✍

★ குத்து விளக்கை ஏற்றும் தீக்குச்சி சில நேரம் கூரையையும் கொளுத்தும்; தீக்குச்சியை நம்பலாமா?

எஸ். புவனேந்திரன், அக்கரைப்பற்று-07.

ஜெட் தீக்குச்சி பாவியுங்கள்; சட்டென்று அணைந்துவிடும்!

✉ ✍

★ தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சாதனைதான் என்ன?

ஆர். ஜிப்ரி, திருக்கோணமலை.

தமிழக மக்களை தலை நிமிரவைத்தது தான் சாதனை. என்னங்க ஆச்சரியமாக இருக்கிறதா? பின்னே, வானளவான கட் அவுட்டுக்களை தலைநிமிராமல் எப்படிப் பார்த்தாங்களாம்?

✉ ✍

★ 'அப்படியா சமாச்சாரம்' பாணியில் ஒரு கதை சொல்ல முடியுமா?

ம. ரமணன், ஆரையம்பதி.

இளம் தம்பதி தேனிலவுக்காகச் சென்றார்கள்.

இரண்டு மாதத்தின் பின்னர் திரும்பி வந்தார்கள். பெண்ணின் தோழி அவளிடம் கேட்டாள்:

"தேனிலவு எப்படி இருந்தது?"

"மிக மிகப் பிரமாதமாக, அசத்தலாக, அமர்க்களமாக இருந்தது!"

"அப்படியா! நீயும் கணவரும் எங்கே போனீர்கள்?"

மணப்பெண் அதற்குச் சொன்ன பதில்: "நான் இலண்டனுக்குப் போயிருந்தேன். அவர் அமெரிக்காவுக்குப் போயிருந்தார்."

✉ ✍

★ தலைவர்களுக்கு சிலை வைப்பது அவசியமா?

க. அழகேசன், திருமலை.

மாவீரன் அலெக்ஸாண்டரைச் சந்திக்க வெளிநாட்டுத் தூதர் ஒருவர் சென்றார். நாட்டைச் சுற்றிப்பார்த்துவிட்டு வந்தார்.

அலெக்ஸாண்டருடன் பேசிக் கொண்டிருக்கும்போது தூதர் கேட்டார்;

"சக்கரவர்த்தி அவர்களே! உங்கள் நாட்டில் எத்தனையோ சிலைகள் இருக்கின்றன. ஆனால் உங்களுக்கு மட்டும் ஒரு சிலைகூட வைக்கவில்லையே?"

அலெக்ஸாண்டர் அதற்குச் சொன்ன பதில் என்ன தெரியுமா?

"என் சிலை நிறுவப்படாமலே இருந்து, "இவ்வளவு சிலைகள் இருக்கும்போது அலெக்ஸாண்டரின் சிலை மட்டும் ஏன் இல்லை?" என்று எதிர்காலத்தில் மக்கள் கேட்கட்டும்; அதுதான் எனக்குப் பெருமை!"

✉ ✍

★ மிருகங்களாக மாறிக்கொண்டிருக்கும் மனிதர்களைப் பற்றி உமது கருத்து என்ன சிந்தியா?

தெ. பிரியாந்தன், அக்கரைப்பற்று.

நாலுகாலும் நடுவில் ஒரு வாலும் இல்லாத குறையை எப்போது தீர்க்கப் போகிறார்கள்?

✍

★ தீர்வுப்பொதி தங்கள் வசம் கிடைத்தால் தீர்ப்பு எப்படி இருக்கும்?

கே.எஸ். ஆப்தீன், ஏறாவூர்-01.



தேவையான நிறை இல்லை; உரிய நிறையோடு கொண்டுவருக!

✉ ✍

★ துணிச்சலானவர்கள் தமிழ் நடிகைகளா? இந்தி நடிகைகளா?

பா. ஜெயஸ்ரீ, மொரட்டுவ.

துணியே துணையல்ல என்னும் துணிவே துணையில் இருசாராருமே சளைத்தவர்கள் அல்ல.

✉ ✍

★ 'காதல் கோட்டை', 'கோகுலத்தில் சீதை' புகழ் அகத்தியனின் அடுத்த படம் என்ன?

இ. விஜயன், மண்டூர்.

பாலச்சந்தர் அவரை வளைத்துப் போட்டு விட்டார். கவிதாலயா தயாரிப்பில் 'விடுகதை' தான் அடுத்தபடம்.

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 67

இராமபிரானுடைய வேண்டுகோளை ஏற்று தென்திசை ஏகி இலங்கைமாநகரில் சீதாப்பிராட்டியாரைக் கண்டுகொண்ட இராம தூதன் அனுமனுக்கு மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது. சீதாப் பிராட்டியாரின் திருவாயால் 'சிரஞ்சீவி' என்ற பட்டத்தைப் பெற்றமையினால் மிக உற்சாகமுடன் காணப்பட்டார். தன்னுடைய சாதனையை உடனடியாக இராமபிரானிடம் சென்று கூறிவிடவேண்டுமென்று அவா அவரை உந்தித் தள்ளியது. இருப்பினும் ஆஞ்சநேயர் சற்றுத் தாமதித்தார்.

தான் இராமபிரானின் தூதுவன் என்பதனை நிரூபிப்பதற்காக இராமபிரான் தன்னுடைய மோதிரத்தை-சீதாப்பிராட்டியாரிடம் காண்பிக்கும்படி கூறிக் கொடுத்தனுப்பியிருந்தார். "கண்டேன் சீதையை" என்று அண்ணலிடம் போய்க் கூறும்போது அதனை ஊர்ஜிதப்படுத்த ஏதாவது தடயப்பொருள் வேண்டாமா? இராமபிரானுக்கும் பிராட்டியாருக்குமிடையில் இடம்பெற்ற சில மறக்க முடியாத சம்பவங்களையும் தம்மிடம் கூறி, அவை நினைவிருக்கின்றனவா, என்று கேட்கும்படியும் இராமபிரான் கூறியிருந்தார். அக்கதைகளைக் கூறி பிராட்டியாரின் நம்பிக்கையையும் பெற்றாகிவிட்டது. இராமச் சந்திரப்பிரபுவிடம் பிராட்டியார் என்ன தகவலைச் சொல்லப் போகிறார் என்பதை அறிந்து கொள்ள ஆஞ்சநேயர் அவாவுற்றார். அதற்கேற்றவாறு சில கதைகளை அனுமனிடம் பிராட்டியார் கூறினார்.

## அடையாளச் சின்னம்–சூளாமணி

### பிராட்டியார் கூறிய கதைகள்


ஏற்கனவே திரிசடையிடம் கூறிய– இந்திரன் மகன் சயந்தன் தன்மீது காமுற்று காக்கை வடிவில் வந்து துன்புறுத்திய கதையையும் பிராட்டியார் அனுமனிடம் கூறினார். தான் வளர்ப்பதற்காக எடுத்து வந்த பெண் கிளிக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று பிராட்டியார் இராமபிரானிடம் கேட்டாராம். அப்போது அதற்கு, தன் தாயாரான கேகய நாட்டு மன்னன் மகள் கைகேயியின் பெயரை வைக்குமாறு கூறினாராம். இக்கதையினையும் வேறு பல கதைகளுடன் அனுமனிடம் கூறிய பிராட்டியார், தன் கணவன் கொடுத்தனுப்பிய மோதிரத்துக்கு ஈடாக தன்னிடம் எந்த ஒரு நகையும் இல்லையே என்று ஏங்கினார். இராவணனால் வான் மார்க்கமாக எடுத்துச் செல்லப்படும்போது தனது நகைகளை துணி ஒன்றில் மூட்டையாகக் கட்டி கீழே போட்டுவிட்டு வந்துவிட்டதை நினைந்து வருந்தினார். உடனே அவருக்கு ஒரு நினைவு வந்தது. தனது புடவைத் தலைப்பில் ஒரு முடிச்சு இருப்பதை உணர்ந்து அதனை அவிழ்த்தெடுத்தார். தன் கணவனால் தன் தலையில் சூடப்பட்ட சூளாமணி அதில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது. அதனை எடுத்து தன் இரு கண்களிலும் ஒற்றிக் கொண்டார். தன்னுடைய அடையாளச் சின்னமாகக் கொடுத்தனுப்புவதற்கு இந்த ஒரேபொருள் மட்டும் இருக்கிறதே என்று எண்ணி பிராட்டியாரின் உள்ளம் உவகை பூத்தது. அப்போது அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோல் பெருகிற்று. தன் கணவனுக்குத் தன் நினைவு-அடையாளச் சின்னமாகக் கொடுத்தனுப்புவதற்கு இச்சூளாமணியாவது கிடைத்து விட்டதே என்பதனால் ஏற்பட்ட ஆனந்தம்-கண்ணீராகப் பெருகியிருக்கலாம். அல்லது அந்தச் சூளாமணி தன் தலையில் சூடப்பட்ட அந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்ததும் ஏற்பட்ட சோகத்தால் ஊற்றெடுத்த கண்ணீராகவும் இருக்கலாம். இதனைப் பாகுபடுத்தி உணரக் கூடிய நிலையில் சீதாப்பிராட்டியார் அப்போது இல்லை.

சீதாப்பிராட்டியாரின் நிலைகண்டு ஆஞ்சநேயரும் தடுமாறினார். இதனால் கைகளைக் கூப்பிய வண்ணம் சற்றுநேரம் அமைதியாக இருந்தார்.

### நம்பிக்கை ஊட்டிய நம்பி

பிராட்டியார் சூளாமணியை அனுமனிடம் கொடுத்தார். "உயிர் விடுவதே இனி ஒரே வழி என்று ஏங்கிய வண்ணம் இருந்த எனக்கு மீண்டும் வாழ வழி கிடைக்கும் என்று நம்பிக்கை ஊட்டிய நம்பியே! இந்தச் சூளாமணி என் கண்களுக்கு ஒப்பானது. இதனைப் பத்திரமாக என் பிரபுவிடம் கொடுத்து என் நிலையினை அவரிடம் எடுத்து விளக்கிக் கூறுவாயாக!" இவ்வாறு கூறிய பிராட்டியார், சூளாமணியை ஆஞ்சநேயரிடம் ஒப்படைத்தார். அதனைப் பெற்றுக் கொண்ட ஆஞ்சநேயர் கண்களும் குளமாயின. பயபக்தியுடன் இருகைகளுக்குள்ளும், சூளாமணியை அடக்கி சிரமேல் கைகுவித்து பிராட்டியாரை மும்முறை வலம்வந்து தாள் பணிந்து எழுந்தார். பிராட்டியாரைத் தனித்து விட்டுச் செல்ல மனமின்றி மேலும் சில நேரம் அங்கே நின்றிருந்தார். பின்புறமாக நகர்ந்து மீண்டும் தொழுதுவிட்டு தன் நடைவேகத்தை அதிகரித்தார். மரக்கிளைகளில் தாவிப் பாய்ந்தார். சற்று நேரத்தின் பின் ஒரு மரத்தின் உச்சியை அடைந்து இராமநாமத்தை உச்சரித்த வண்ணம் இருந்தார். தொடர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் அமிழ்ந்தார்.

'இராமபிரானுடைய தூதனாக, அரக்கர் வாழும் இம்மண்ணில் காலடி எடுத்து வைத்த நான், இங்கு வாழும் அரக்கர் இனம் அழிந்தொழியும் காலம் அண்மித்து விட்டது என்பதை அறிவுறுத்த வேண்டாமா? நான் வந்து சென்றதை அரக்கர்கோனும் அவன் பரிவாரங்களும் அறிய வேண்டாமா? எனது வீரப்பிரலாபங்களை அரக்கர்கோன் தெரிந்து கொள்ளவேண்டாமா? இராமச்சந்திர மூர்த்தியின் தூதுவனாக வந்த இந்த வானரமே இத்தகைய பராக்கிரமமுடையதானால், அந்த இராமபிரானுடைய ஆற்றல் எத்தகையதாக இருக்குமோ, என்று இலங்கேஸ்வரனும் அவனுடைய படைகளும் உணர்ந்து-பயந்து நடுங்க வேண்டும். சீதாப்பிராட்டியாரிடம் மன்னிப்புக் கேட்டு, பிராட்டியாரைப் பத்திரமாகக் கொண்டுபோய் இராமபிரானிடம் ஒப்படைக்க வேண்டும்! இதற்கான வழியைத் தேட வேண்டும்!.




### ஆஞ்சநேயர் எடுத்த முடிவு

இவ்வாறு சிந்தித்து முடிவெடுத்த ஆஞ்சநேயர், முதலில் எழிற்சோலையாகத் திகழ்ந்த அசோகவனத்தையே அழித்துவிட முடிவெடுத்தார். அதற்கேற்றாற்போல் இராம மந்திரத்தை உச்சாடனம் செய்து, தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண்டார். முழுமையான விசுவரூபத்தை எடுக்காமல், அவ்வனத்திலுள்ள உயரமான மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்து விடும் அளவுக் கேற்றாற்போல் உருவெடுத்தார்.

சீதாப்பிராட்டியார் அமர்ந்திருந்த இருப்பிடத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் காணப்பட்ட மரம் செடி கொடிகள் அத்தனையையும் பிடுங்கி எறிந்தார். அழகிய சோலைவனமாகக் காட்சி அளித்த அசோக வனம், சூறாவளியால் சிதைந்துபோன பிரதேசமாகக் காட்சியளித்தது.

அசோகவனத்தை அனுமன் அழித்த காட்சியை கவிஞர் பெருமான் விபரிக்கும் அழகினைப் பார்ப்போம்.

**முடிந்தன பிளந்தன முரிந்தன நெரிந்த**
**மடிந்தன பொடிந்தன மறிந்தன முறிந்த**
**இடிந்தன தகர்ந்தன எரிந்தன கரிந்த**
**ஒடிந்தன ஒசிந்தன உதிர்ந்தன பிதிர்ந்த...**

*(சுந்தர காண்டம்–702)*

பொருள்:

***அனுமனுடைய ஆவேசக் கூத்தினால் அசோகவனத்தின் வாழ்வே முடிந்து விட்டது. மரங்கள் பிளந்து விட்டன; வளைந்துவிட்டன; தூளாக நொருங்கிவிட்டன; பல கூறுகளாக மடிந்து விட்டன; பொடியாகிப் போய்விட்டன; முறிந்து வீழ்ந்து விட்டன; தகர்ந்து போய்விட்டன; எரிந்து போய் விட்டன; எரிந்து கரியாகி விட்டன. கிளைகளெல்லாம் ஒடிந்துவிட்டன; வளைந்து சாய்ந்துவிட்டன; இலைகள் உதிர்வது போல், நிமிர்ந்து நிற்க முடியாமல் விழுந்துவிட்டன. எல்லாமே சர்வநாசமாகி விட்டன.***

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 65**
**சரியானவிடை:– அனங்கன்.**

1. இரா. பிரதீர்குமார், பாரதி தமிழ் வித்தியாலயம், வத்துகாமம்.
2. சி. வேதநாயகம், தபாலகம், மட்டக்களப்பு.
3. அ.கிறிஸ்ரீன், 167/2, ஹெகித்த, வத்தளை.
4. எம். பிரான்சிஸ், 227/4, 5ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.
5. அ. அன்ரனிராஜ், 192/4, உவர்மலை வீதி, திருகோணமலை.

**போட்டி இல. 67** கேள்வி:- **சூளாமணியை சீதையிடம் யார் கொடுத்தார்?**

பெப்ரவரி. 01 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி–இல.67, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# பதிலுக்குப் பதில்

காதியைப பூ. கந்தசாமி

நிருபர்: கைக்கடிகாரம் கூட அணியமாட்டேன் என்று சொல்லியிருக்கிறீர்களே மேடம். நேரம் எப்படிப் பார்க்கப்போகிறீர்கள்?

செல்வி: இதய தெய்வம் எம்.ஜி.ஆர். நடித்த படம் நல்லநேரம். கருணாநிதி ஆட்சியில் கைக் கடிகாரங்கள் காட்டுவது கெட்ட நேரம். கருணாநிதி ஆட்சியை வீட்டுக்கனுப்பி மீண்டும் நல்லநேரம் தொடங்கும் வரை கழற்றிய கைக்கடிகாரத்தை நான் கட்டப் போவதில்லை.

நிருபர்: கலைஞர் அவர்களே நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

கலைஞர்: வருமானவரித்துறையினர் அவரது கைக்கடிகாரங்களை வாங்கி வைத்திருக்கிறார்கள் என்பதால், வகை வகையான கைக்கடிகாரங்கள் அவரிடம் இருந்ததை அறிந்து அகில உலகமும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால், அப்பாவி மக்களின் அனுதாபத்தை பெறுவதற்காக அப்படியொரு நாடகம் ஆடுகிறார் அம்மையார். துச்சாதனன் சேலையைப் பிடித்திழுத்தான் என்பதற்காக, இனிமேல் சேலையே கட்டமாட்டேன் என்று பாஞ்சாலி சொல்லியிருந்தால் பண்பாடு என்ன பாடுபட்டிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செல்வி: கைக்கடிகாரம் மட்டுமல்ல, காதுக்கு கம்மல், கழுத்துக்குச் செயின், காலுக்கு மெட்டி, அட்லீஸ்ட் கையில் ஒரு வளையல் கூட அணியப்போவதில்லை நான்.

கலைஞர்: அணியப்போவதில்லை என்ற பட்டியலை அத்தோடு அவர் சுருக்கிக் கொண்டதற்காக நான் மட்டுமல்ல, நாடே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

நிருபர்: அம்மையார் அப்படி அறிவித்திருப்பதற்கு என்ன காரணம்?

கலைஞர்: ஏதுமில்லாதவர்கள் எதுவும் அணியாமல் இருந்தால் அதற்கு ஏழ்மை என்று பொருள்! எல்லாமும் இருப்பவர்கள் ஏதும் அணியாமல் இருந்தால் அதற்கு எளிமை என்று பொருள்! நடமாடும் நகைக் கடையாய் நகர்வலம் வந்தவர்கள், உடம்பெங்கும் நகைபூட்டி உயிர்த்தோழி சகிதமாய் உள்ளிருந்து படம் எடுத்துக்கொண்டவர்கள், பகட்டாய் வாழ்ந்தவர்கள், "இனி ஏதும் அணியமாட்டோம்" என்று சொன்னால், ஏய்த்துப்பிழைக்க நினைக்கிறார்கள், நம்மை யெல்லாம் இளிச்சவாயர்களாக எண்ணுகிறார்கள் என்று பொருள்!

நிருபர்: சிறை வாழ்க்கை எப்படியிருந்தது மேடம்?

செல்வி: *(பாடுகிறார்)*

ஆய் ஊய்
கலைஞர் ஆட்சியின்
எலிகள் பட்டாளம்
அங்குமிங்கும் ஓடியோடி
ஒரே கும்மாளம்;
எலிப் பொறிகள் வைத்தாலும்
அங்கும் இங்கும் மாட்டாமல்
எலிகள் ஏராளம்!

கலைஞர்: உள்ளே இருந்தால் எலிகள் தொல்லை என்கிறார். வெளியே வந்தால் புலிகளின் தொல்லை என்கிறார். எலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த பொறிகளும், புலிகளின் ஊடுருவலைத் தடுக்க பூரண பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

நிருபர்: மேடம், உங்கள் வீட்டில் இருந்த நகைகள் எல்லாம் யாருக்குச் சொந்தமானவை?

செல்வி: மைசூர் மகாராஜா கொடுத்தது பாதி. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தந்தது மீதி. நடித்து நான் சம்பாதித்ததும் அதில் உண்டு.

கலைஞர்: நடித்துத்தான் சம்பாதித்தார் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். யார் அந்த மைசூர் மகாராஜா? மாமனா, மச்சானா, மைனரா? என்று கேட்குமளவுக்கு நானோ, கழகமோ தரம் தாழ்ந்தவர்கள் அல்ல என்றாலும், தமிழக மக்கள் அப்படிக் கேட்கிறார்கள் என்பதால், அந்தக் கேள்வியை அலட்சியம் செய்துவிட முடியவில்லை.

நிருபர்: உங்களிடம் உள்ள சொத்துக்களையெல்லாம் என்ன செய்யப்போகிறீர்கள்?

செல்வி: ஏழைகளுக்குத் தானம் கொடுக்கப் போகிறேன்.

நிருபர்: அதனை முன்னரே செய்திருக்கலாமே?

செல்வி: சொத்துக்கள் சேர்த்தால்தானே தானம் கொடுக்க முடியும். முன்னர் சேர்த்துக் கொண்டிருந்தேன்; சேர்த்ததையெல்லாம் இனித்தான் பிரித்துக் கொடுக்கப் போகிறேன். அதைத் தடுக்கத்தான் கருணாநிதி அரசு வழக்குப் போட்டு மிரட்டுகிறது.

நிருபர்: எல்லாவற்றையும் கொடுத்துவிட்டால் நீங்கள் எங்கே குடியிருப்பது?

செல்வி: போயஸ் தோட்டத்தில் உள்ள என் குடிசையில் இருந்து கொள்வேன்.

கலைஞர்: நூறு கோடி ரூபாயில் ஒரு குடிசை இருக்க முடியும் என்பது உலகத் தமிழர்களுக்குப் புதிய செய்தி!

நிருபர்: உங்கள் உடன்பிறவா சகோதரி எப்படி இருக்கிறார்?

செல்வி: என்னுடன் இருந்த ஒரே காரணத்திற்காக அந்த அபலைப் பெண்ணை துரும்பாக இளைக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எடை குறைந்து, நடை தளர்ந்து, கூந்தல் சடை நிறமிழந்து தவிக்கிறாள் சசி.

கலைஞர்: கூந்தலுக்கு நெய் தடவிவிடவும், வேளா வேளைக்கு வெந்நீரும் பன்னீரும் கலந்து நீராட வைக்கவும், மஞ்சள் தேய்த்து மஞ்சத்தில் தூங்கவிடவும் சிறை என்ன உயிர்த்தோழியின் பினாமி பெயரில் வாங்கிய பங்களாவா என்று நான் கேட்காவிட்டாலும், நான்கு பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள்.

நிருபர்: இப்போது உங்கள் ஆசை என்ன?

செல்வி: *(பாடுகிறார்)*

சசி பேசும் ஓசை
கேட்கத்தான் ஆசை
சதிகாரர் ஆட்சி
ஒழிக்கத்தான் ஆசை
மறுபடியும் ஆட்சி
கிடைக்கத்தான் ஆசை
நோட்டுக்களின் வாசம்
அறியத்தான் ஆசை
வைரங்களின் கோலம்
காணாத்தான் ஆசை
சசி சிரிக்கும் ஓசை
கேட்கத்தான் ஆசை!

கலைஞர்: *(பாடுகிறார்)*

இரண்டெழுத்தில்-உன்
சசியிருப்பாள்-அது
திறந்த பின்னாலும்
வழக்கிருக்கும்!
சிறை அது சிறை!

செல்வி: பதிலுக்குப் *பாடுகிறார்)*

"ஊரைத் தெரிஞ்சிக்கிட்டேன்
உலகம் புரிஞ்சுகிட்டேன்
கண்ணம்மா-ஏங் கண்ணம்மா
பதவி யோயிருச்சு-பந்தா போயிருச்சு
கண்ணம்மா-ஏங் கண்ணம்மா"



நிருபர்: சசிகலா மேடம்! சிறையில் இருந்து உங்கள் தோழிக்கு என்ன செய்தி அனுப்ப விரும்புகிறீர்கள்?

சசி: *(சோகமாகப்பாடுகிறார்)*

அடி ஆத்தாடி
நீ போன பாதை எங்கே பொன்மானே?
அடி அம்மாடி
நான் சிறையில் ஆடும் தீபம் ஆனேனே!
எலி கடிக்கும் வலியோடு
-உயிர்போகுது இப்போது
விதி போகும் போக்கில் வாழ்க்கை போகுது.

செல்வி: *(விம்முகிறார்)*

மௌனமான நேரம்–சசி
மனதிலென்ன பாரம்?
கொசுவின் ஓசைகள்
எலியின் கொடுமைகள்
ஏனென்று கேளுங்கள்!

கலைஞர்: *(துள்ளித் துள்ளிப்பாடுகிறார்)*

பெரிய பறவை
சிறையைத் திறக்கத் துடிக்கிறதே!
சிறையை உடைத்து
சசியை அழைக்க நினைக்கிறதே!

செல்வி வன்முறையைத் தூண்டுகிறார் என்பதால் இதற்காக தனி வழக்கு ஒன்று தொடரும் உத்தேசம் நமக்கில்லையென்றாலும், சட்டம் ஒழுங்கு கருதி பொலிசார் நடவடிக்கை எடுத்தால் அதில் குறுக்கிடும் எண்ணமும் நமக்கில்லை என்பதை சொல்லி வைக்க கடமைப் பட்டுள்ளேன்.

நிருபர்: பேட்டிக்கு ஒத்துழைத்த செல்விக்கும், கலைஞருக்கும், சசியிடம் பேட்டிகாண உதவிய சிறைத்துறைக்கும், பின்னணி இசை அமைத்த கொசுக்களுக்கும் நன்றி.



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
4363331

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## ஒலிம்பிக்கில் புதிது



← 1996 ஒலிம்பிக்கில் புதிய விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டன. அவற்றில் பார்வையாளர்களுக்கு குளிர்ச்சியைக் கொடுத்தது பெண்கள் கரப்பந்து விளையாட்டு. அதாகப்பட்டது நீச்சல் உடையில் கடற்கரை மணலில்தான் இப்போட்டி நடத்தப்படும்.

விஷயம் அறிந்ததும் பார்வையாளர்கள் பலர் இந்த விளையாட்டைக் காணத்தான் ஓடோடிச் சென்றார்களாம். பார்வையாளரின் உன்னிப்பான கவனத்தை இந்தளவுக்கு இது பெறும் என்று ஒலிம்பிக் குழுவினர்கூட எதிர்பார்க்கவில்லையாம்.

ஒலிம்பிக்கில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பெண்களுக்கான மற்றும் சில விளையாட்டுக்கள்: மலையேறும் சைக்கிள் போட்டி, 500 மீட்டர் ஓட்டம், முப்பாய்ச்சல், பாட்மின்ரன், கால்பந்து, மென்பந்து என்று புதிய அயிட்டங்கள் களைகட்டியிருந்தன. அடுத்த ஒலிம்பிக்கிலும் இவை சேர்க்கப்படும். ஒலிம்பிக்கிலும் பெண்கள் சம பலம்தான்!




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


## சளைக்காத சவாரி



↑ உலகியலேயே மிகமிக அதிகமான வீரர்கள் பங்குகொள்கின்ற சைக்கிள் ஓட்டப்பந்தயம் 'டுவர் டி ஃபிரான்ஸ்' என்கின்ற ஃபிரான்ஸ் நாட்டில் நடத்தப்படும் பந்தயமே.

சுமார் 3 வாரங்கள் ஃபிரான்சின் பல பாகங்களுடாகவும் புகுந்து செல்வர் ஓட்ட வீரர்கள்.

ஃபிரான்சின் அழகிய கிராமமொன்றில் பூத்துக் குலுங்கும் சூரியகாந்திப்பூப் பூந் தோட்டத்தின் அருகால் அமைந்த பாதையால் காலை வேளையொன்றில் ஓட்டவீரர்கள் செல்கையில் கிளிக் செய்யப்பட்ட மனோரம்மியமான காட்சி இது.

அப்படியே ஹாய்யாக இதோ சில விபரங்கள்:-

* இதுவரை உலகில் உச்சமாக எட்டப்பட்ட சைக்கிள் ஓட்டவேகம் 268.831 கி.மீட்டர் (மணி (166.944 மை/மணி). 1995, ஒக்டோபர்-03ம் திகதி நெதர்லாந்து வீரர் ஃபிறெட் றொம்பெல் பேர்க் இச்சாதனையை நாட்டினார்.

* மைக்கேல் செக்றெஸ்ற் என்ற அமெரிக்க வீரர் 1958.196 கிலோமீட்டர் (சுமார் 1216 மைல்கள்) தூரத்தை 24 மணித்தியாலயங்களில் ஓடி முடித்தார். 26, ஏப்ரல், 1990ல் அமெரிக்க மாநிலம் அரிசோனாவில் பொனிக்ஸ் இன்டர்நஷனல் றேஸ்வே திடலில் நடந்தது அச்சாதனை.

* 1939ல் எட்வாட் கோட்வின் என்ற பிரித்தானிய வீரர் 120.805 கிலோமீட்டர் (75,065மைல்) தூரத்தை 365 நாட்களில் (1 வருடம்) நாளொன்றுக்கு 330.96 கிலோமீட்டர் வேகத்தில் ஓடிமுடித்தார்.

அவரே அடுத்தவருடம் 160.934 கிலோமீட்டர் (1 இலட்சம் மைல்கள்) தூரத்தை 500 நாட்களில் ஓடிக்கடந்தார். ▪

## சித்திரத் தோட்டம்

↓ அமெரிக்க ஓவியரான ஜெவ் கூன்ஸ் (பிறந்தது 1955ல்) தனது செல்ல நாய்க்குட்டி 'பப்பி' போல் ஒரு உருவத்தை கலை நயத்துடன் ஆக்கினார்.

பப்பியின் உருவத்தின் மேல் அழகிய பூ மரங்கள் பல வர்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கும் செடிகளைப் பதித்தார். வெயில், மழை, குளிர் போன்ற காலநிலைகளைச் சமாளிக்கும் நல்ல இரக செடிகளை உலகின் பலபாகங்களிலிருந்தும் தருவித்து நாட்டினார்.

பப்பியின் உருவத்தின் மேற்புறம் பல நீருற்றுகள் செயற்கையாக அமைக்கப்பட்டு அதன்மேலே பூச்செடிகள் பதிக்கப்பட்டது.

எப்போதும் நீர் கொப்பளிப்பதால் செடிகள் பூத்துக் குலுங்கி அழகாகக் காட்சி தரும். வெளியிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் பாய்ச்சவேண்டிய அவசியம் இருக்காது.

உலகிலேயே பூ மரங்களால் உருவாக்கப்பட்ட அழகிய சித்திரம் இதுதான். அதனால் கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்துள்ளனர்.



## 1997

**ஜனவரி**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

**பெப்ரவரி**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | | |

**மார்ச்**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**ஏப்ரல்**


| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

**மே**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

**ஜூன்**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |



**ஜூலை**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

**ஆகஸ்ட்**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**செப்டம்பர்**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

**ஒக்டோபர்**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

**நவம்பர்**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**டிசம்பர்**

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |



தினமுரசு வாரமலர்


படிப்பகம்